ஞாயிறு வெளியீடு   விலை 4 அணா   REGD. No. M. [illegible]

திராவிட நாடு

மலர் 5 || காஞ்சிபுரம் 21—7—46 || இதழ் 12

80 Years Fame & Name

Guru Medicines

For Children

Dr. A. MATHURAM SONS.,

TRICHINOPOLY.

ஒரு வேண்டுகோள்!

குரு மருந்துகள்

விற்பனையாளர்கள்

—உபயோகிப்பவர்களுக்கு!

உங்கள் தேவைக்கான உற்பத்தியைப்பெருக்கு
வதில், நாங்கள் விசேஷ முயற்சியை மேற்
கொண்டிருக்கிறோம்.

இன்னும் சில மாதங்களில் பர்மா, மலேயா,
ஜாவா, சுமத்திரா, தென்னாப்பிரிக்கா, சிலோன்
போன்ற வெளிநாடுகளில் உள்ளவர்களும்
தங்கள் தேவைக்குத் தாராளமாய்
குரு மருந்துகளைப் பெறலாம்.

**ஆகையால் அவசியமாய்த் தேவைப்படும் அளவுக்குமட்டும்
பெற்று ஆதரவளியுங்கள்.**

டாக்டர் எ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்து சாலை, : : திருச்சினாப்பள்ளி.

GURU THYLAM & TOOTH POWDER

மாஜி கடவுள்கள்

“கடவுளின் கொலுமண்டபத்திலே காமப்பித்தம் கரை புரண்டு ஓடுவதா? மகா ஜனங்களே! உங்கள் முழுமுதற் கடவுள் ஜூவஸ், என்ன கதியானான் தெரியுமா? அவனுடைய பத்னி, தர்மபத்னி, ஹீராவின் கதி என்ன தெரியுமா? பக்திசெய்து முக்தி பெற்றவன் செய்த பாதகச் செயல் என்ன தெரியுமா? காமக்குரோதாதிகளை அடக்கி ஆள்பவனே ஆண்டவனின் அருள் பெறுவான் என்றுதானே பேசுகிறீர்கள்? பூஜை செய்வது அதன்பொருட்டு என்றுதானே கூறுகிறீர்கள்? பக்தியில் மூழ்கிக்கிடப்பவர்களே! பாவ புண்யம் பேசுபவர்களே! பக்தன், மோட்சலோகம்சென்று, தேவலோகம்சென்று, கடவுள் சன்னிதானத்திலே என்னசெய்தான் என்று உங்களுக்குத் தெரியுமா? தூய்மைக்கு இருப்பிடந்தானே தெய்வ சன்னதி. மும்மலம் நீக்குபவன்தானே முழுமுதற் கடவுள். காமியுங்கூட, காயத்தின் அனித்யத்தை உணரும் கடவுள் சன்னிதானத்திலே நடந்த அக்ரமத்தைக் கூறுகிறேன், பதறாமல் கேளுங்கள்.

“மகாஜனங்களே! லப்பீதே என்ற தேசத்து மன்னன், மோட்சலோகம் சென்றான். தேவர் உலகம் போவது என்றால் அவன், புண்யசாலி என்றுதானே அர்த்தம்? காமக்குரோத மற்றவன், பழிபாவம் செய்யாதவன் என்ற காரணத்தால்தானே, இக்சியான்—அந்த மன்னன் பெயர் அது—ஆண்டவனின் அருள்பெற்றான். எல்லோருக்கும் கிடைக்க முடியாத அப்பேறு பெற்றவன், இறைவனும் ஜூவசின் இல்லம் சென்றான். அவன் என்ன செய்தான்? என்ன செய்திருக்கவேண்டும்? இறைவா! இணையில்லாதவனே! என்மீது கிருபை பாலித்தவனே! என்று தொழுதிருக்கவேண்டும், உருக்கத்துடன். இக்சியான், இறைவனை மறந்தான், இறைவனின் துணைவியார், ஹீரா தேவியார் மீது தன் காமக் கண்களை வீசினான். லோக மாதா என்று பஜிக்கிறீர்களே! அந்த ஹீரா அம்மையார்மீது மோகம்கொண்டான். அம்மையை நெருங்கியும் விட்டான், நெஞ்சிலே மிஞ்சிய காமத்தால் தூண்டப்பட்டு.

பிறகு ஜூவஸ் அவனைத்தண்டித்தார். கேட்டீர்களோ, மகா ஜனங்களே! இறைவனுடைய இல்லத்திலே, அவருடைய துணைவியை, லோக மாதாவை, மக்களின் வணக்கத்துக்கு உரிய ஹீரா தேவியாரைத் தன் இன்ப வல்லியாக்கிக்கொள்ளத் துணிந்தான், பக்தியால் முக்திபெற்றவன். எப்படி இருக்கிறது, உங்கள் கடவுளின் குடும்ப விவகாரம்! தூய்மையால், தேவர் உலகு புகுந்தவனின் மனத்திலே மோகம் குடிபுகுந்த காரணம் என்ன? இறைவனின் இல்லத்திலேயே இத்தகைய இழி செயல் புரியும் துணிவுகொண்டவன், எப்படிப் பரமனின் அருளுக்குப் பாத்திரமானான்?

“ஒன்றுக்கொன்று பொருத்தம் இருக்கிறதா, கூறுங்கள். மக்களின் மனத்துக்கு எட்டாதவராக கடந்தவராக உள்ள கடவுளைப்பற்றி இவ்விதமான ஆபாசமான கதைகள் இருக்கலாமா? அவைகளை நீங்கள் புண்ய கதைகள் என்று நம்புவதா? இப்படித்தானா இறைவனைத் தெரிந்துகொள்ளும் முறை இருக்க வேண்டும்? தேவியாரைப்பற்றியும், முக்திபெறுகிற அளவுபக்குவமான பக்தி செய்தவனின் யோக்யதைபற்றியும் ஒருபுறம் இருக்கட்டும். உங்கள் முழுமுதற்கடவுள் ஜூவஸ் இருக்கிறாரே, வான் முட்டும் கோயில் கட்டி, வணங்கித் திருவிழாக்கள் பல நடத்தி வருகிறீர்களே ஜூவசுக்கு, அவருடைய கதை இருக்கும் விதத்தைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்!

“ஜூவஸ், முழுமுதற்கடவுள். அவர் செய்தது என்ன? தந்தையைத் தூக்கி அடித்தார், அதிகாரத்தைக் கைப்பற்றினார், தகப்பனின் அரச பீடத்தில், துரோகமாகத் தான் ஏறிக்கொண்டு, தன் சதிச் செயலுக்கு உடந்தையாக இருந்த தம்பிமார்களுக்கு அதிகாரத்தில் கொஞ்சம் பங்கு கொடுத்துக் கடவுளானார்! தங்கையைத் தாரமாகக்கொண்டார்! அதிகார வெறி, சதிச்செயல், சூது, சூழ்ச்சி, சொந்த சுயபோகத்திலே மிகுந்த அக்கறை கொண்டவர்ஜூவஸ்-அவரைப்பற்றி நீங்களே கூறும் கதையின்படி பார்த்தால். ஆனால் அவர்தான் உங்கள் கடவுள்! கடவுளின் இலட்சணம் இதுதானா? தகப்பனைத் தவிக்கவிடுவதும் தங்கையைத் தாரமாக்கிக்கொள்வதுந்தானா, தயாபரனின் திருக்கூத்தாக இருக்கவேண்டும்? கூசாமல் கூறுகிறீர், இவைகள் கடவுளின் திருக்கூத்து என்று. இவைகளை நான் எடுத்துக் காட்டினாலோ, நான் கடவுளை ஏசுகிறேன் என்று கோபிக்கிறீர். கோபமின்றிக் கூறுங்கள், கடவுளின் இலட்சணம் இப்படி இருக்கலாமா? எவ்வளவு காமச் சேட்டை செய்தார்என்று கதை கூறுகிறீர்கள். மகாஜனங்களே! இப்படிப்பட்ட யோக்யதையுள்ள கடவுளால், என்ன நன்மை, என்னவிதமான ஒழுக்கம் ஏற்படமுடியும்? உங்களின் கடவுள் இப்படிப்பட்ட இலட்சணம் பொருந்தியவர் என்பது தெரிந்தால், உலகம் உம்மைக் கேலி செய்யாதா? அறிஞர்கள் உங்களை மதிப்பார்களா? காமப் பித்தம் கொண்டு அலைவது கடவுட் கொள்கையா! எவ்வளவு கேவலம்! எவ்வளவு அறிவீனம்! எவ்வளவு கோரமான உருவங்கள் கோயிலிலே! அவைகள் முன்னின்று என்னென்ன கோணற் சேட்டை செய்கிறீர்கள்! நரபலி கேட்குமோ தெய்வம்! நாலு தலை, பத்துக்கை, பலவித முகம் கொண்டு இருக்குமோ? இப்படியோ, இறைவன் இருப்பார்? இதுவோ மதம்? இதுவோ மதி? இதற்கோ நாட்

டுப் பெருநிதி பாழாக வேண்டும்? சேச்சே! எவ்வளவு கேவலம், மோசம்."

கிரேக்க நாட்டிலே, கிருஸ்து பிறக்குமுன்பு, ஐந்தாம் நூற்றாண்டிலே, ஆண்டவன் பெயரால் நடத்தப்படும் ஆபாசங்களைக் கண்டித்து, கடவுளைப்பற்றிக் கயவர்கள் கட்டிவிட்ட கதைகளை விளக்கி, மக்களுக்கு மதி புகட்ட வேண்டுமென்று, மேற்கண்டவாறு கர்ஜனை புரிந்துவந்தார், டையகோராஸ் (Diagoras) என்ற அறிஞர். அவருடைய அறிவுரை, மக்களுக்கு ஆத்திர மூட்டிற்றே யொழிய அறிவு விளக்கத்தை அளிக்கவில்லை.

"ஆஹா! எவ்வளவு வாய்க்கொழுப்பு இவனுக்கு? எவ்வளவு நெஞ்ச அழுத்தம்? நமது கடவுளரைப் பழிக்கிறான் பாபி! இவன் நா புழுக்காதா? இவன் மீளா நரகம் சேர்வான்." என்று மக்கள் கோபத்துடன் பேசினரே தவிர, அறிஞன் கூறுவது அவ்வளவும் . மறுக்கமுடியாத உண்மையாகவன்றோ இருக்கிறது, என்று தெளிவு அடையவில்லை.

தெளிவு பிறவாத நிலையிலே அந்த மக்கள், அறிவுச்சுடர் கொளுத்திய டையகோராஸ் அழிக்கப்படவேண்டும். என்று கொக்கரித்தனர். ஊர் திரண்டது உண்மையை உரைத்த உத்தமனை ஒழிக்க. டையகோராஸ், தான் பிறந்த (Melos) மீலாஸ் என்னும் ஊரைவிட்டு ஓடி, காரிந்த் என்ற தேசத்தில் தங்க நேரிட்டது. கி. மு. 500ல், கடவுள் பெயரால் பரப்பப்பட்ட பொய்க்கதைகளைக் கண்டித்த அறிஞனின் கதி, அவ்விதம் இருந்தது. அறிவு புகட்டச் சென்றான், ஆத்திரம் கொண்ட மக்களால் அவதிப்பட்டான். ஆனால் வெற்றி பெற்றவன் அவனே! ஓட்டம் பிடித்தவனை, எப்படி வெற்றி வீரன் என்று புகழ்வது? ஜனங்களின் ஆத்திரத்தைக் கண்டு அஞ்சி, உயிர்தப்பினால் போதும் என்று ஊரைவிட்டே ஓடிவிட்டவனல்லவா அந்த டையகோராஸ். அவனுடைய கோழைத்தனத்தைப் பரிகசிக்கவேண்டியதுதானே முறை; ஏன் அவன் ஓடினான்? என்று கேட்கவே எவருக்கும் தோன்றும். டையகோராஸ், உயிருக்குப் பயந்து ஓடினவன்தான்; உண்மை. அச்சம் இருந்தது அந்த அறிஞனுக்கு; உண்மை. ஆனால் அவனே வெற்றிபெற்றவன். அந்த உண்மையை அறிய, அவனுடைய வார்சுகளைக் கவனிக்கவேண்டும். டையகோராஸ், மீலாஸ் நகரைவிட்டு ஓடி, காரிந்த் தேசம் சென்றான். அங்கேதான் அவன் இறந்ததுங்கூட. ஆனால் மறுபடியும், அவன் உலவினான் கிரேக்க நாட்டுக் கடைவீதியில். பிறகு ஓடிப்போன டையகோராஸ் சொன்னவைகள்போல இதோ இவன் சொல்கிறானே என்று கிரேக்கர் மறுபடியும் பேச நேரிட்டது. பகுத்தறிவும் பயமும் கலந்த உருவில், டையகோராஸ் காட்சி அளித்தான். பிறகு, பயம் நீங்கி, பகுத்தறிவும் சகிப்புத் தன்மையும் கலந்த உருவம் காண்கிறோம். அந்த உத்தம உருவமே, சாக்ரட்டீஸ். சாக்ரட்டீசும், சிறு மதியைச் சாடினான்; கடவுள் பெயர் கூறி நடத்தப்படும் காரியங்களைக் கண்டித்தான்; அறிவுக்கண் கொண்டு பாருங்கள், ஆலயங்களிலே கொலுவீற்றிருக்கும் தெய்வங்களின் ஆபாசம் தெரியும் என்று பேசினான். டையகோராஸ், சாக்ரட்டீஸ் இருவரும், பகுத்தறிவுக்குப் படைத்தலைவர்கள்; வெவ்வேறு நிலை. முன்னவர் ஏறக்குறைய முறியடிக்கப்பட்டார், விரட்டி அடிக்கப்பட்டார்; சாக்ரட்டீஸ் விரட்டி அடிக்கப்படவில்லை, பயந்து ஓடவில்லை, பணியவுமில்லை, சாகடிக்கப்பட்டார். வெளிநாட்டிலே அல்ல, கிரேக்க நாட்டிலேயே பகுத்தறிவு ஊராரின் பகை கண்டு, ஓடி ஒளிந்துகொண்டது முதலில். சாக்ரட்டீசின் நாளிலேயும் ஊர்ப்பகை இருந்தது. ஊரான்வோரின் பகையும் பிறந்தது; ஆனால், ஊரைவிட்டு ஓடவில்லை, உயிர் துறந்தார் ஊரிலேயே. பகுத்தறிவு டையகோராஸ் காலத்துக்கும் சாக்ரட்டீஸ்காலத்துக்கும் இடையே வலுவடைந்தது, என்பதுதான் பொருள். முதலில், பகுத்தறிவைப் பேசமட்டுமே ஆள் இருக்கக்கண்டனர். சாக்ரட்டீஸ் காலத்திலே, பகுத்தறிவுக்காகப் பேசமட்டுமல்ல, கஷ்டநஷ்டம் ஏற்க, உயிரையே தரச் சித்தமாக இருக்கும் சிலரை உலகினர் கண்டனர்.

"அது தவறு இது தவறு என்று உளறுவர்; அடித்தால் அக்மரக்காரர், அடங்குவர்"—இது, ஜனங்களின் பேச்சு முதலில், டையகோராஸ் காலத்தில். காரிந்த்துக்கு ஓடினான் டையகோராஸ் என்ற உடனே களிப்புடன் அந்த மக்கள், "கண்டீரோ வேடிக்கையை! கண்டபடி பேசி, நமது கடவுளரை ஏசினானே அந்தக் கயவன், அவன் கால் பிடரியில்பட ஓடிவிட்டான், பிழைத்தால் போதும் என்ற பயம் பிடித்துக்கொண்டது அந்தப் பெருவாயனுக்கு" என்று பெருமையுடன் பேசிக்கொண்டிருப்பர். ஆனால் அதே மக்கள் சாக்ரட்டீஸ்காலத்திலே என்ன பேசி இருப்பர்? "சாக்ரட்டீஸ் நமது கடவுள்களை நிந்திக்கிறானே, அவன் நாசமாய்ப்போக" என்று தூற்றியவர்கள்கூட, சாக்ரட்டீஸ், தான்கொண்ட கொள்கைக்காக உயிரைத் திரணமாகக் கருதி, சிறையில் கடுவிஷத்தைச் சிறிதும் சித்தம் கலங்காமல் குடித்து இறந்தான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் திகைத்துப்போயிருப்பர். தங்களுடைய "விரோதி" ஒழிந்தான் இனிப் பயமில்லை, என்ற மன நிலை அல்ல; "உயிரைக்கூட இழக்கத் துணிந்தானே!" என்று பயந்திருப்பர்; பேசவும் நாவெழாத நிலை பிறந்திருக்கும். சாக்ரட்டீஸ், பிணமான அன்றுதான், பகுத்தறிவுக்குப் புதியதோர் கலை, சக்தி, மதிப்பு, பிறந்தது என்று கூறலாம். ஊரார் அல்லவா விரட்டினர் டையகோராசை! சாக்ரட்டீஸ் நாட்களிலே, ஊரில் இரண்டு கட்சி! பகுத்தறிவு, தனக்கு ஓர் இடம் தேடிக்கொண்டது. பகுத்தறிவின் சார்பிலே பேச, ஆதரவு தர, ஊரிலே ஒரு பகுதி மக்கள் திரண்டுவிட்டனர். சாக்ரட்டீஸ், குற்றவாளியா அல்லவா என்பதை விவாதிக்கக்கூடிய நீதி சபையிலே 501 பேர் இருந்தனர். சாக்ரட்டீஸ் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறினவர்கள் 281. சாக்ரட்டீஸ் குற்றவாளி அல்ல என்று கூறினவர்கள் 220. பகுத்தறிவு, பழைய கால அமுலுடன், ஏறக்குறைய சரிசமமாகப் பலம் சேர்த்துக்கொண்டுவிட்டது. 61 பேர் அதிகம் பழமைப்படைக்கு! சாக்ரட்டீஸ் பிணமானபிறகு, படைபலத்தின் நிலை தலைகீழாக மாறிவிட்டது! அவர் இருந்தபோதுங்கூட, டையகோராஸ் பயந்து ஓடிவிட நேரிட்டதுபோன்ற நிலைமை இல்லை. 501 பேரில் 220 பேர், பகுத்தறிவுக்காகப் பரிந்துபேச முன் வந்தனர்! இதன் பொருள் என்ன? முதலில் ஊரே பகைத்தது, பிறகு ஊரிலே பாதிப் பகுதியினர் பகுத்தறிவின் பக்கம் சேர்ந்தனர். யாருக்கு வெற்றி? பழமை திரட்டிவைத்திருந்த பட்டாளத்திலே ஒரு பகுதி, படைபலமின்றி இருந்த பகுத்தறிவுக்குக் கிடைத்துவிட்டது.

டையகோராஸ்போலவே, சாக்ரட்டீசும், கிரேக்க மக்கள் கண்மூடித்தனமாக கும்பிட்டுக் கூத்தாடிவந்த கடவுட் கூத்தைத்தான் கண்டித்தார். சாக்ரட்டீஸ்மீது சாட்டப்பட்ட குற்றமே, "கிரேக்கர்கள் தொழுதுவந்த தேவர்களைப் பொய்த் தெய்வங்களென்று சொல்லி வாலிபர்களைக் கெடுத்தார்" என்பதுதான்.

"இதற்குமுன் எவ்வளவோ உத்தமர்களை ஊர் மக்கள் கோபத்தாலும் அறியாமையாலும் வதைத்துள்ளனர். நானும் பாமரரின் கோபத்துக்குப் பலியாகிறேன். எனக்குப் பிறகும், பலர் பலியாகித் தீருவார்கள் " என்று சாக்ரட்டீஸ் சொன்னார். அவர் இறந்தபோது, பகுத்தறிவு முன்பு இருந்ததைவிட அதிக வலுவடைந்தது. ஊராரின் உள்ளம் அடியோடு மாறிவிடவில்லை என்றபோதிலும், உயிர்போகுமே என்ற பயத்துக்காகப் பகுத்தறிவாளர்கள், தமது பணியை நிறுத்திக்கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணம் வேரூன்றிவிட்டது. தியாகிகளின் இரத்தமே, அதற்கு நீராகப் பாய்ச்சப்பட்டது. அறிவுத் துறைக்கு இந்த 'அபிஷேகம்' நடத்த நடத்த, ஆதிகாட்களிலே அமைக்கப்பட்டு, ஆலயங்களிலே கொலுவீற்றிருந்து, பூஜாரிகளைக் கொழுக்க வைத்துக்கொண்டிருந்த "சாமி"களுக்கு நடக்கும் "அபிஷேகம்" குறையத் தொடங்கிற்று.

கடவுளின் லீலைகளைப்பற்றிய பேச்சிலே ஈடுபட்டிருந்த மக்கள், பகுத்தறிவாளர்கள் இரத்தம் சிந்திய வரலாறுகளைப் பேசத் தொடங்கினர். அந்தப் பேச்சு ஓங்க ஓங்க, தேவாலயப் பூஜாரிகள் தூங்க ஆரம்பினர். அவர்கள், தங்கள் சாமிகள் சகலரையும் ஒரே அடியாகத் துணைக்கு அழைத்துப் போரிடவேண்டிய நிலைமையை ஏசு உண்டாக்கினர்; அவர்களைக் கொன்று அல்ல, தான் சிலுவையில் அறையப்பட்டு. ஏசுவைச் சிலுவையில் அறைந்தது, சாக்ரட்டீஸ் விஷம் குடித்து 500 வருஷங்களான பிறகு! சிலுவையில் அறையப்பட்டவர் ஏசு, ஆனால் உயிர் நீத்தது யார்? பழய சாமிகள்! பல காலமாகப் பாமரரை ஆட்டிப் படைத்த "கடவுட் கூட்டம்".

சிற்பிகளின் சிருஷ்டிகளான கோயில்களிலே, கோலாகலமாக வீற்றிருந்த எண்ணற்ற குட்டித் தெய்வங்கள், மக்களால் மறக்கப்பட்டு மாஜிகளாயின.

பல காலமாகப் பெற்றுவந்த பூஜைகள், பலிகள் நின்று போயின. பரம்பரை பரம்பரையாக இருந்துவந்த பூஜாரிக் கூட்டம், வேலை இழக்க நேரிட்டது.

"எங்கள் சாமிகளையா இப்படி எல்லாம் தூற்றுகிறாய்? பாவி! எவ்வளவு அருமையான தெய்வங்களடா அவை! அவைகளின் சக்தி உனக்கென்னடா தெரியும், மூடா! அந்தச் சாமிகளைப்பற்றி எவ்வளவு அழகான பாசுரங்கள் உள்ளன தெரியுமா? கலைப் பொக்கிஷமல்லவா, கடவுள் சம்பந்தமான காவியங்கள்? சிற்பிகளின் சிருஷ்டி அல்லவா கோயில்கள்! இவைகளையா பழிப்பது? அதர்மக்காரா!" என்று தூற்றி, டையகோராசை ஊரைவிட்டு ஓடும்படி செய்தது போலவும், சாக்ரட்டீசைச் சாகடித்தது போலவும், அறிவு பரப்பத் துணிந்தவர்களை அழித்தனர், அறிவுத் தெளிவு இல்லாததால் ஆத்திரம் கொண்ட மக்கள். ஆனால் பலன் என்ன? எந்தச் சாமிகளின் சார்பிலே, அந்த மக்கள், அறிஞர்களை அழிக்கத் துணிந்தனரோ, அந்தச் சாமிகள் இன்று இல்லை!! அத்தனை கடவுள்களும்-பண்டைய நாட்களிலே பாபிலோன், கிரீஸ், ரோம், எகிப்து, சீனாபோன்ற பல நாடுகளிலே, கோடிக்கணக்கான மக்களால் கும்பிடப்பட்டுவந்த கோலாகலமான கடவுள்களும் இன்று கும்பிடப்படுவதில்லை. கோயில் இல்லை, கொட்டு முழக்கில்லை, எந்தெந்தத் தெய்வங்கள் எந்தெந்த நாட்டிலே இருந்தனவோ அந்த நாடுகளிலே இன்று சென்று கேட்டால், அந்தக் கடவுளரைக் காட்ட முடியாது! சாக்ரட்டீசைச் சாகடித்த கிரேக்க நாட்டிலே இன்று, சாக்ரட்டீசுக்காகப் பரிந்து பேசவும், வாழ்த்தவும் மக்கள் உள்ளனர். ஆனால் எந்தத் தெய்வங்களைச் சாக்ரட்டீஸ் நிந்தித்தார் என்று குற்றம் சாட்டி விஷம் கொடுத்து அவரைக் கொன்றனரோ, அந்தக் கடவுளர்கள் இன்று அங்கே இல்லை! இப்படி எல்லாமா கடவுளர் இருந்தனர்? இவ்விதமாகவா நீங்கள் கூத்தாடினீர்கள்? இவ்வளவு ஆபாசமாகவா கடவுளைப்பற்றிக் கதை இருந்தது என்று கேட்டால், வெட்கப்பட்டு, அறிவுத் தெளிவு இல்லாத நாளிலே, அஞ்ஞான இருள் இருந்த காலத்திலே, காட்டு மிராண்டிகளாக இருந்தபோது, பல கடவுள், கடவுளுக்குப் பல உருவம், கடவுளுக்குத் தாய் தகப்பன், பிள்ளை குட்டி, கூத்தி குடும்பம், என்றெல்லாம் கூறினோம், காவியம் எழுதினோம், கோயில்கள் கட்டினோம்; அறிவு பிறந்ததும், அத்தனை கடவுளரும், அர்த்தமற்ற கற்பனை என்பதை அறிந்தோம், என்று கூறுவர். சாக்ரட்டீஸ் குடித்த விஷம், பலப்பலச் சாமிகளைச் சாகடித்தது.

மக்களின் மதி துலங்கியதால், மாஜிகளான கடவுளரின் எண்ணிக்கை ஏராளம். ஒரு சில மாஜிகளை மட்டுமே கூற முடியும். உருத்தெரியாமல் மட்டுமல்ல, பெயர் தெரியாமல் போய்விட்ட கடவுளரும் உண்டு. இன்று நம் நாட்டிலே உள்ளது போலத்தான், சாக்ரட்டீஸ் சாகுமுன்பு, பகுத்தறிவுக்காக இரத்தம் சிந்தும் உத்தமர்- தோன்று முன்பு, கிரீசிலும் ரோமிலும், நார்வேயிலும் ஸ்வீடனிலும, சீனாவிலும் எகிப்திலும், எந்த நாட்டிலும், விதவிதமான கடவுள் கூட்டம் இருந்துவந்தன. புராண இதிகாசங்களும், லீலைகளும், திருவிளையாடல்களும், இன்று இங்கு நம் நாட்டில் இருப்பது போலவே, அங்கெல்லாம் இருந்தன. இன்று இங்கு பகுத்தறிவு பேசப்பட்டால், பழமை கண்டிக்கப்பட்டால், கடவுள்பற்றி இப்படி எல்லாம் ஆபாசமான கதைகள் இருக்கலாமா, ஆண்டவன் ஒருவன், அவன் உருவமற்றவன் என்று கூறினால், மக்கள் கோபித்து, சந்தேகித்து, பகுத்தறிவு பேசுபவர்களை நாத்திகர் என்று நிந்தித்து வதைக்கிறார்களே, அதேபோலத்தான், அங்கெல்லாம் நடந்திருக்கிறது.

அந்நாடுகளுக்கும் இந்நாட்டுக்கும் உள்ள வித்தியாசம், அங்கெல்லாம், கடவுட் கொள்கை தெளிவடைந்து, பல நூற்றாண்டுகளாகிவிட்டன, இங்கு, பழைய நாட்களில் இருந்து வந்த எண்ணம் இன்றும் குறையவில்லை. வெளிநாடுகளிலே, ஒரு காலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருந்து, கோலாகலமான ஆட்சி செய்திருந்து, காவியர் ஓவியர் பூஜிதர் என்பவர்களால் போற்றப்பட்டு, மகாசக்தி வாய்ந்த தெய்வங்கள் என்று புகழப்பட்டு, மணிமுடிதரித்த மன்னரையும், மத யானையை அடக்கும் மாவீரனையும் வணங்க வைத்து, அரசுசெலுத்திய, எத்தனையோ 'சாமிகள்" இதுபோது, அந்த நாடுகளிலே மாஜிக் கடவுள்களாகிவிட்டன என்பதை நம் நாட்டு மக்கள் அறியவேண்டும். கோடிக்கணக்கான மக்கள், கோடி கோடியாகப் பணம் செலவிட்டுக் கோயில் கட்டிக் கொலுவிருக்கச்செய்த கடவளர், இன்று அங்கே மாஜிகளாயினர்! அதனால், அந்த நாடுகளில், மக்கள் கெட்டுவிடவுமில்லை, மதி தடுமாறிவிடவுமில்லை, அழிந்துபடவுமில்லை. அங்குக் கலையோ காவியமோ, சிற்பமோ ஓவியமோ அழிந்துபோகவுமில்லை, மக்கள் நாஸ்திகர்களாகிவிடவுமில்லை. அஞ்ஞானம் தொலைந்து மெய்ஞானம் பிறந்தது. ஆலயங்கள் ஆசாபாசத்தின் பீடமாய், பூஜாரிகளின் குகைகளாய் இருந்த கேடு நீங்கி, கடவுள் தூய்மையின் இருப்பிடம், அவர் ஒருவர், உருவமற்றவர், உன்னதத்தின் பிறப்பிடம் என்ற உண்மைக் கடவுட் கொள்கையுடன் மக்கள் வாழுகிறார்கள். நமக்கு இன்றும் இருப்பது போன்ற மாரியும் மன்மதனும், காட்டேரியும் காகவாகனனும், வாயுவும் வருணனும், அவர்களுக்கும் இருந்தன. நமக்கு இருக்கும் புராண இதிகாசாதிகள் போல அவர்களிடமும் இருந்தன. நமது கடவுளர் கதைகளிலே காம லீலைகள் வர்ணிக்கப்படுவதுபோல அவர்களிடமும் இருந்தன. இன்று அவைகளை, அஞ்ஞானிகளின் விளையாட்டு என்று அந்த நாட்டு மக்கள் ஒதுக்கிவிட்டனர்; அவர்கள் வாழ்கிறார்கள்; நாமோ, இன்னமும் அன்னியனுக்கு அடிமைகளாய், வறுமையின் பிடியில் சிக்கி வதைகிறோம். மாஜிகளான கடவுளரின் முழு விவரமும் தருவது முடியாத காரியம்—தேவையுமில்லை. பல ராஜ்யங்களின் ரட்சகர்களென்று கருதப்பட்டு, காவிய கர்த்தாக்களால் புகழப்பட்ட, ஒரு சில மாஜிகளை மட்டுமே இங்குக் குறிப்பிடுகிறேன் உலகின் போக்கு உங்கட்குத் தெரியட்டும் என்ற எண்ணத்துடன். இதோ "மாஜிகள்" பாருங்கள்:

அப்பாலோ (Apollo)

கிரேக்கரின் முக்கியத்துவம் வாய்ந்த கடவுள்களில் ஒருவர். இங்குச் சூரியபகவான்போல, அங்கு அப்பாலோ கருதப்பட்டு மக்கள் அவருக்குத் தொழுகை நடத்திவந்தனர்.

அபாடான் (Aphadon)

நரக லோகக் காவலன். ஆண்டவனின் முத்திரை மோதிரத்தின் குறி, வருகிறவர்களின் முகத்திலே இருக்கிறதா என்று பார்ப்பான். இல்லை என்றால், அவர்களைப் படுபாதாளத்தில் தள்ளி இம்சைக்கு ஆளாக்குவான்.

இயோலஸ் (Aeolos)

கிரேக்க நாட்டவருக்கு இயோலஸ், வாயுபகவான். இவர் நல்ல காற்று, கெட்ட காற்று என்று பிரித்துத் தோல் பைகளில் அடைத்துத்தருவார்; அதன்படி பலாபலன்கள் இருக்கும்.

அப்ரோடைட் (Aphrodite)

கிரேக்கநாட்டு அழகுத் தெய்வம். இந்தத் தெய்வத்தின் அருளால் அழகு வரும் என்பது கிரேக்கரின் நம்பிக்கை. அப்ரோடைட், க்யூபிட் என்னும் கடவுளுக்குத் தாய். க்யூபிட், கிரேக்க நாட்டு மன்மதன். காதற் கணைகளை ஏவும் தெய்வம். இந்த அப்ரோடைட் என்ற அழகுத் தெய்வத்திடம் காதல் கொண்டு சேஷ்டைசெய்து, அவமானமடைந்த கடவுள் ஒன்று உண்டு. அந்தக் கடவுள் பெயர் ஆரிஸ்.

ஆரிஸ் (Aris)

கிரேக்கர்கள், யுத்த தேவதையாக ஆரிஸ் என்னும் கடவுளைக் கும்பிட்டுவந்தார்கள். இந்தக் கடவுளுக்குச் சண்டையிலே மிகுந்த பிரியம். ஆரிஸ் ஒரு சமயத்திலே அப்ரோடைட் என்ற அழகுத் தெய்வத்திடம் ஆசைகொண்டு சேஷ்டைசெய்ய, அதனை மற்றக் கடவுள்கள் கண்டுபிடித்துக் கேலிசெய்து, ஆரிசை அவமானப்படுத்திவிட்டார்கள்.

ஆர்ட்டிமிஸ் (Artimes)

அப்பாலோ போலவே ஆர்ட்டிமிஸ் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கடவள், கிரேக்கருக்கு. ஆர்ட்டிமிஸ் கன்னி! கால்நடைகளின் ரட்சிப்பு வேலை ஆர்ட்டிமிசுக்கு.

பேகஸ் (Bacchus)

புலிகள் பூட்டப்பட்ட இரதத்திலேறிச் செல்லும் பேகஸ் என்ற கடவுள், குடிவகைகளுக்குத் தெய்வம். ஜூவஸ் என்ற கடவுளின் குமாரன்.

பால்டர் (Balder)

நார்வே நாட்டுச் சூரிய பகவான்; அழகன்; விவேகி என்று பால்டரைப் புகழ்வர் அம்மக்கள். பால்டர் எனும் கடவுள், ஓடின், பிரிக் எனும் தேவனுக்கும் தேவிக்கும் பிறந்த குழந்தை. இந்த பால்டர் என்ற நார்வே நாட்டுச் சூரிய தேவனை, விஷமத்தனம் செய்யும் கடவுளான லோகி கொன்று விட்டதாகக் கதை கூறுவர்.

பெல்லோனா (Bellona)

ரோம் நாட்டவருக்கு, யுத்த தேவதை, மார்ஸ். பெல்லோனாவும் யுத்த தேவதையே. சிலர், பெல்லோனாவை மார்சுக்கு மனைவி என்பார்கள். சிலர் சகோதரியென்றும், வேறு சிலர், மகள் என்றும் கூறுவர். பெல்லோனா, கரத்திலே தீப்பந்தத்துடன் உலவிப் போர்க் காரியத்தைக் கவனிப்பதாகக் கூறுவர்.

பூடிஸ் (Bootes)

கிரேக்கநாட்டுக் கடவுளர் கூட்டத்திலே பூடிசும் ஒருவர். இந்தக் கடவுளே, கலப்பையைக் கண்டு பிடித்தவராம். ஆகவே பூடிஸ் விவசாயத்துக்குக் கடவுளாகக் கருதப்பட்டு வந்தார்.

போரியாஸ் (Borias)

வடதிசைக் காற்றுக்குக் கடவுள் என்று கருதி போரியாஸை மக்கள் வழிபட்டனர்.

பிராகி (Bragi)

நார்வே நாட்டில், கவிதைகளுக்குக் கடவுள், பிராகி. ஓடினுக்கும் பிரிகாவிக்கும் பிறந்தவர். நீண்ட வெண்தாடியுள்ள கிழ உருவில் இக் கடவுள் இருந்துகொண்டு, போர்க் காலத்தில் உயிர்நீத்தவர்களை, சொர்க்கத்திலே வரவேற்கிறார் என்பது அந்நாட்டு மக்கள் கொண்ட நம்பிக்கை.

கிளைடை (Glydy)

அப்பாலோ என்ற கடவுளைக் காதலித்த கிளைடையும் ஒரு கடவுளே. அப்பாலோ, கைவிட்டுவிடவே, கிளைடை உருகிப் போனதுடன், கடைசியில் சூரியகாந்திப் பூவாக உருமாறி விட்டதாகக் கதை உண்டு.

லக் (Luck)

அட்லாந்திலே, லக் என்ற கடவுளை மக்கள் வணங்கினர். லக் அந்த நாட்டுச் சூரிய தேவன்.

க்யூபிட் (Cupid)

ரோம் நாட்டுக்கு மன்மதன் க்யூபிட். காதற் கணைகளைச் செலுத்துவது இந்தக் கடவுளின் வேலை. குழந்தை உருவில், கையில் வில் அம்புடன், கண்களை துணியால் மூடிக் கட்டப்பட்டு இருக்கும் விதத்திலே க்யூபிட் எனும் கடவுளை ரோம் நாட்டவர் சித்தரித்தனர்.

சிபிலி (Cybele)

வட ஆசியாவிலே, சிபிலி என்றோர் கடவுளை, அமோகமான ஆடல் பாடல்களுடன், மக்கள் வழிபட்டுவந்தனர். கோலாகலமான பூஜை நடத்துவர், குடித்துக் கூத்தாடுவர், இந்தக் கடவுளை மகிழ்விக்க. சிபிலி, இயற்கை எழிலுக்குக் கடவுள் என்பது அந்த மக்கள் எண்ணம்.

டயானா (Diana)

ரோம் நாட்டவர், டயானா என்ற கடவுள் ஒளி தருபவள் என்று வணங்கினர். அதாவது சந்திரன் இங்கு ஆண், அங்குப் பெண் கடவுள். அதிலும் கன்னி. சதா சர்வ காலமும் தோழிகளுடன் சேர்ந்து கொண்டு உல்லாசமாக வேட்டையாடுவது டயானாவுக்கு விருப்பம். எபீசஸ் என்ற இடத்திலே டயானாவுக்குக் கட்டப்பட்ட கோயில் உலக அதிசயங்களிலே ஒன்று.

டயனீஷியா (Dionysia)

பேகஸ் போலவே குடிவகைகளுக்குத் தெய்வமாக டயனீஷியா எனும் கடவுளைக் கிரேக்கர்கள் கொண்டாடிவந்தனர். பேகஸ், ரோம் நாட்டவருக்கு. டயனீஷியா, கிரேக்கருக்கு. இந்தக் கடவுள் பூஜை, வெறிக்கக் குடித்துவிட்டுக் கூத்தாடுவதுதான். டயனீஷியாவின் பிறப்பு வேடிக்கையான ஒரு கதை. கர்ப்பமாக இருக்கும்போதே தாய் இறந்துபோகவே, தாயின் கருப்பையிலிருந்து டயனீஷியா வெளியே எடுக்கப்பட்டு, பிறகு ஜூவஸ் எனும் கடவுள் தன் தொடையிலேயே வைத்திருந்து, வளர்த்தாராம்.

மூன்று சகோதரிகள் (Three-Sisters)

விதியை, இங்கே பிரம்மா எழுதுகிறார் என்றல்லவா கதை. கிரேக்க நாட்டிலே, "விதி" நெய்து, துண்டுகளாக அறுத்து எடுக்கப்படுகிறது. இந்தக் காரியத்துக்கு மூன்று கடவுள்கள் மும்முரமாக வேலை செய்தவண்ணம் உள்ளனர். மூவரும் பெண்கள். Clotho க்ளோத்தோ, Larchesis லர்ச்சிசிஸ், Atropos அட்ரோபாஸ் என்பது அவர்கள் பெயர். ஒரு கடவுள் நூற்க, மற்றோர் கடவுள் நெய்ய, மூன்றும் கடவுள், துண்டுகளாக வெட்டி எடுத்து வீச இவ்விதமாக, மக்களின் வாழ்வு மேலே நெய்து அனுப்பப்படுகிறது என்று கிரேக்கர்கள் நம்பி, அந்த மூன்று தேவதைகளையும் வணங்கி வந்தனர்.

(22-ம் பக்கம் பார்க்க)

கனவில் கவிதா மண்டலம்

அறிமுகம்

என்னை, நானாகவே உங்களுக்கு அறிமுகப்படுத்திக்கொள்கிறேன். உங்களுக்குக் கொஞ்சம் ஆவலாக இருக்குமல்லவா, யாரப்பா இவன், கனவிலே கவிதாமண்டலத்தைக் கண்டவன் என்று தெரிந்துகொள்ள! சொன்ன உடனே, "ஓ! நீயா?" என்று நீங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய, 'மேல்நிலை'க்காரனல்ல! 'இவர் தான் எட்டுக்குட்டி மிட்டாதாரர்' என்று, யாரையாவது அறிமுகப்படுத்தினால், உடனே முகத்திலே, ஒளிவிடும், கைகூப்பும், கனிவு வழியும், முன்னாலே அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிராவிட்டால் கூட, 'ஆஹா! நான் அனேககாலமாக, மிட்டாதாரரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்' என்றுகூறத்தோன்றும். சகஜம். நானோ அப்படி ஒரு மேட்டுக்குடியினனல்ல, நான் ஒரு சாமான்யன். என்னை நீங்கள் காணவேண்டுமானால், சிரமப்படவேண்டியதில்லை. நிலக்கண்ணாடி எதிரேபோய் சற்றே நில்லுங்கள்—கண்ணாடியிலே தெரிகிறதல்லவா உருவம்!—அது, நான்தான்!!

தூங்குமுன்

கனவு கண்டேன் என்றால் தூக்கத்தில்தான்! தூங்குமுன் என்ன செய்தேன்? என்ன செய்கிறோம்? ஏதேனும்வேலை; வாழ்வை நடத்த ஒரு தொழிலில் ஈடுபடுகிறோம். அதுபோலிருந்த நான், அன்றோர் நாள், ஓய்வு பெற்றேன், நண்பர் சிலர் கொடுத்த புத்தகங்களைப்படித்தேன், மாலையிலே கொஞ்சம் உலவவும் சென்றேன், உள்ளம் களிப்படைய அதுவே வழி என்று எண்ணினேன், வீடு திரும்பும்போதோ, விசாரம் என்ற பெரியபாரத்தைச் சுமந்து கொண்டுவந்தேன், சாய்ந்தேன், புரண்டேன், தூங்கினேன் நெடு நேரத்துக்குப்பிறகு, நித்திரையில்கண்டேன், கவிதாமண்டலத்தை.

விசாரமூட்டை

உலகமென்றால் நமது அரண்மனை உத்யானவனம்போலத் தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்த சித்தார்த்தருக்கு

உள்ளத்தை உருக்கும் துக்கக்காட்சிகள் தெரியவே, அவர் துறவு பூண்டார் என்று கூறுகிறார்களே, அது போல அல்ல, என் நிலை. அப்படி இருந்தால்தான் புத்தராகி இருக்கலாமே! உலகிலே உள்ள கஷ்டங்கள் தெரியும், என்பாடும் அதுதான், ஆனாலும் அன்று என்னவோ அந்தக்கஷ்டங்கள் அவ்வளவும் உருண்டு திரண்டு ஒருருவாகி என் எதிரே நின்று மிரட்டுவது போலாகிவிட்டது. எங்குபார்த்தாலும் உழைப்பு! யாரைப்பார்த்தாலும்உழைப்பு! வேலை! வேலை! வேலை!! ஏதேதோ செய்துகொண்டே இருக்கிறார்கள், ஓய்வின்றி. இவ்வளவு அலைச்சலும், எதற்கு? வாழ்வதற்காம்! என்ன வாழ்க்கை, அவர்களுக்கு!

ஒருமாது, அரைக்கிறாள், ஒருமாது சுமந்துசெல்கிறாள், அதோ அவன்மண்பாண்டங்கள்செய்கிறான், மற்றொருமாது ஏதோ இடித்துக்கொண்டிருக்கிறாள், அங்கொருவன் கூடைமுறம் முடைகிறான், மற்றொருவன் அங்கத்தை வளர்க்கப் பிச்சைஎடுத்துப் பங்கப்படுகிறான், இடுப்பில்குழந்தையுடன் எதையோபாடிக்கொண்டு, பிச்சை எடுக்கும் பிழைப்பை நடத்துகிறாள், மற்றோர் மாது; எங்கும் வேலைமயம், எல்லாம் வாழ்வதற்காம்! என்ன வாழ்க்கை இது!

கொட்டும்மழை, நடுக்கும் குளிர், கருக்கும் வெயில், எதுதான் பாடுபடுபவனைத் தடுக்கமுடியும்! பருவத்தின் கர்வச்சேட்டையை அவன் பயத்தோடு பார்ப்பதில்லை. வாடை வீசினால் என்ன! அவன்இயற்கையின் கோபத்தைக்கண்டு அடங்குவதில்லை! ஓயமாட்டான், உழைப்பான்! ஓய்ந்தால் சாய்ந்தான்! வேலை செய்தாக வேண்டும், மூச்சு இருக்குமட்டும், மூச்சு இருக்க!

இரவின் இனிமைகண்டு சொக்குவானா? இல்லை! நிலவின் ஒயில், அவனை நிறுத்துமா? இயற்கைஎனும் உல்லாசிக்கு, கவியும் வீரனும், ஓவியனும் அடிமையாவர்! அவன், உழைப்பாளி; அடிமையானவன்! இவ்வளவு வேலைக்குப் பிறகும் அவன் காண்பதென்ன?

> வேலை! வேலை! வேலை!!
> என் வேலைக்கு ஓய்வுமில்லை, ஒழிவுமில்லை.
> ஆனால் என் வேலைக்குக் கூலி என்ன?
> வைக்கோற்பாய்—ரொட்டித்துண்டுகள்
> கந்தல் உடை—ஒடிந்தபீடம்
> ஒழுக்குக்கூரை—ஒன்றும் விரியாத்தரை
> வெறுஞ்சுவர்—சித்திரமும் இல்லை.
> சிற்சில சமயம் சுவரில் என்நிழல் விழும்
> அதுதான் சித்திரம்! அதுதான் ஆறுதல்!

என்று, நான் முன்புபடித்த ஒருகவிதை நினைவிற்கு வந்தது. விசாரம் பெரும்பாரமாயிற்று. வீடு திரும்பினேன், படுத்தேன், புரண்டேன், கனவிலே கவிதா மண்டலம் சென்றேன்.

எழுப்பினார்

பாடுபட்டு அலுத்தவர்கள் தூங்கிக்கொண்டிருக்கக்கண்டேன். என் முதுகைத்தட்டிக் கொடுத்தார் ஒரு முதியவர்—ஆச்சரியத்தை என்னென்பது—கவி அரசர் இக்பால் என்னைத் தட்டியவர்.

"தூங்குகிறார்கள்" என்றார் அவர். 'ஆமாம்!' என்றேன் நான். என்னைச் சுட்டுவிடுவதுபோலப் பார்த்துவிட்டு, மறுகணம், முகத்திலே கேலிப்புன்னகை தோன்ற நின்றார்.

"முதலாளியிடம் இரத்தினம் இருக்கிறது" என்றார் இக்பால். 'ஆமாம்! இருக்கிறது!' என்று கூறிக்கொண்டே, பாட்டாளி படுத்திருந்த இடத்திலே கிடந்த கற்களைக்கண்டேன், வெட்கமும் துக்கமும் பிடித்தாட்டின.

"அந்த இரத்தினம், எப்படிச்செய்யப்படுகிறது, தெரியுமா?" என்று கேட்டார் கவி. 'எப்படி?' என்று என்விழி கேட்டது அவரை.

'இந்தத்தொழிலாளியின் இரத்தத்தைக்கொண்டு!' என்றார் இக்பால். என் இருதயத்துடிப்பே நின்றுவிடும்போலாகிவிட்டது அந்த ஆழ்ந்த பொருளுள்ள வார்த்தையைக்கேட்டு உண்டான அதிர்ச்சியால். தொழிலாளியைப் பார்த்தார் இக்பால், என்னைநோக்கினார், 'பண்ணை முதலாளி பயிரிடும் பாட்டாளியின் வாழ்நாளைப்பாழாக்குகிறான்! மணிமுடி தரித்த மன்னன் இந்த ஏழைகளைக் கட்டிப்போடுகிறான், நுகத்தடியில்!' என்றார். 'ஆமாம்!' என்றேன் நான் பெருமூச்சுடன். 'அட்டூழியத்திலே தள்ளப்படுகிறார்கள் இந்த மக்கள்' என்றார். 'உண்மைதான்' என்றேன் நான், கண்ணீர் புறப்பட்டுவிட்டது. ஒருகேலிச்சிரிப்புடன் இக்பால், 'இவர்கள் தூங்குகிறார்கள்!' என்றார். கன்னத்திலே சுரீல் என்றது, கண்ணீர் சூடாகவழிந்ததால். அருகே சென்றார், தட்டி எழுப்பினார் தரித்திரக் கொட்டிலிலே தத்தளிக்கும்அந்தமக்களை 'எழுந்திடுக!' என்றார். எழுந்தனர், கண்களைத் துடைத்தவண்ணம் நின்றனர்.

> "பாமரமனிதன்
> பாராளும் காலமிது
> பழங்காலச் சின்னங்களைப்
> பாரிலே யகற்றுங்கள்!
> வயலிலே விளையும் உணவு
> விவசாயிக்கு உரிமை யில்லை என்றால்
> அவ்வயலிலே நிற்கும்
> அவ்வளவு கதிர்மணியையும்
> அழித்துப் போசுக்குங்கள்"

என்றார் இக்பால்; வீரமுழக்கம் செய்தார். ஒருநிமிஷம், திகைத்துப்போய் நின்றனர் அம்மக்கள். பிறகு மெள்ள, ஆனால் சோகத்துடன் அவரைப்பார்த்துக்கூறினார், "ஐயனே! நாங்கள் பலமற்றவர்கள்" என்று. இக்பால், முகம் கோபத்தால் சிவந்தது. "பலமற்றவர்கள்! நீங்களா? சரி; சிலசமயங்களிலே பலமற்றவர்களின் உடலிலேயே சிம்மத்தின் இரத்தம் ஓடுவதுண்டு. நீர்த்துளியிலே நெருப்பின் தன்மைபிறப்

(11-ம் பக்கம் பார்க்க)

ஒப்பற்ற கவி

விட்டது, "பெருங்குடிமக்களே!" பிறந்தது. அக்ராசனதிபதி அவர்களே என்ற வார்த்தை மறைந்து "தலைவர் அவர்களே!" என்றதமிழ் பிறந்தது. விவாஹசுப முகூர்த்தம், திருமணமாயிற்று; வதூவரர்கள், மணமக்களாயினர்; நமஸ்காரம், வணக்கமாயிற்று; புஸ்தகம், நூல் என்ற தமிழ்மணம் பெற்றது; புஷ்பம், மலராகி ஸ்ரீமதி, திருவாட்டியாகி, எங்கும் தமிழ் மணம் பரவிற்று. ஆனால் அகமகிழ்ச்சிக்குக்காரணமாக இருந்த இதேமாறுதல், ஆபத்தையும் கொண்டுவந்து சேர்த்தது; கலை ஆர்வம் பிறந்தது, அந்த ஆர்வத்தை ஆரியம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. என்னசெய்வது? பூங்காவை அமைத்தோம், ஆனால், புன்னைமரநிழலிலே நச்சுப்பூச்சிகள் உலவுகின்றன! குளம் வெட்டினோம், முதலைகுடி ஏறிவிட்டது! தமிழ்தழைத்திட உழைத்தோம்; அதனுடன் சேர்த்துப் பழமையை நுழைத்தனர் தமிழ்ப் பகைவர்கள்.

ஒன்று அடியோடு கலையை வெறுத்துத் தள்ளிவிடவேண்டும், அல்லது கலைக்குவயப்பட்டுத் தன் மானக்கருத்தை இழந்து பாழ்படவேண்டும். இந்நிலையிலே, ஏக்கமுற்றிருந்தபோதுதான், கனகசுப்புரத்தினம், "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" பக்கம் நம்மை அழைத்துச் சென்றார். கலை, ஒரு கருவி, அதனை நாம், நற்கொள்கைகளுக்காகப் பயன்படுத்தமுடியும், என்று நமக்குரைத்தார், கலைக்களம் புகுந்தார், கவிதைகளை வீசினர் திறமையுடன். வெற்றிபெற்றார். இதோ நமக்கு ஓர் மாவீரர் கிடைத்தார்; அவரிடம் கலைப்பகுதியை ஒப்படைப்போம், கவலையை விட்டு, நம்பிக்கை பெற்று, வெற்றி நிச்சயம் என்ற உறுதியுடன், என்று தன்மான இயக்கத்தவர் கூறினர். "அந்த உவமை" என்று பழைமைவிரும்பி, பெருமூச்சுடன் கூறுவார், யாரோ ஓர் கவியை நினைவிலேகொண்டு, "கண்ணாடிக்கன்னத்தைக் காட்டி என் உள்ளத்தைப் புண்ணாக்கிப் போடாதே! போ! போ! மறைந்து விடு" என்று இரண்டடி எடுத்து விடுத்தால், கலை உள்ளம் படைத்தவர், கண்களிலே புத்தொளியுடன், நம்பக்கம் திரும்பி, "தம்பி! யார் அக்கவி! "என்று கேட்பார், அப்போது நாம், பெரியார்சொன்ன வண்ணமே, "அவரா? அவர், சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி. புதுவை புரட்சிக் கவிஞர்" என்று கூறுவோம், பூரிப்புடன்.

புரட்சிக் கவிஞரின் தோற்றம், தன்மான இயக்கத்தின் வரலாற்றிலே முக்கியமான கட்டம். கள்ளிகாளானையும், முள்ளையும் கல்லையும், உழைப்பெனும் ஏர்கொண்டு, பெயர்த்தெறிந்த பெரியாருக்கு, உறுதுணைபுரிய, கவிதைமழைபொழிந்து, வயலை வளமாக்கியவர், பாரதிதாசன். கரம்புவயலானது ஈரோட்டு வீரரால், வயல் வளமானது, புதுவை வீரரால்! ஒருகொள்கையின் வளர்ச்சிக்கு, நீதி, அதனைத் திறம்பட எடுத்துரைக்கும் திறமை, அந்தத்திறமையை விடாது பயன்படுத்தும் பண்பு, இவைமட்டும் போதாது; இவைகள் யாவும் சேர்ந்தாலும், 'வைரம்" ஒளிவிட்டுக் காட்ட, நன்குதீட்டப்படவேண்டுவதேபோல, அந்தக் கொள்கைக்குக் 'கலை அழகு' ஏறவேண்டும். அதனைத்தந்தவர், பாரதிதாசன்! நாம் நுழையமுடியாதோ என்றஐயத்துடன் இருந்தகளத்திலே, தன்னந் தனியே சென்றுதருக்கரும் தலை கவிழும் வண்ணம், வெற்றிபல பெற்றவர்; பத்து ஆண்டுகளுக்கு முன்பே, பெரியாரின் பாராட்டுரையைப்பெற்றார். கலைத் துறையிலே, தன்மான இயக்கம், வெற்றிமுரசுடன் நுழைந்தது!

●

வாழ்க பாரதிதாசன்!

(புதுவைச் சிவம்)

★

"வளமார் எமது திராவிடநாடு" என்ற மெட்டு.

வாழ்க வாழ்கவே!
மாண்புறும் பாரதிதாசன் எந்நாளும் (வாழ்க)

சூழ்புவி போற்றிய திராவிடர் வாழ்வைச்
சூழ்ச்சியால் ஆரியம் தொலைத்திடக் கண்டும்,
ஊழ்வினை பேசி உறங்கிடும் மாந்தர்
உற்சாகம் பெறச் செய்திடும் கவிஞர் (வாழ்க)

புலனழிந் திழிவைப் போற்றியே வளர்க்கும்
புலவர் ஏறெலாம் நாணிடும் வண்ணம்,
நலன்மிக விளைக்கும் நறுங்கவி தந்தே
நாட்டின் புகழ்வளர்த் திடும்உயர் கவிஞர் (வாழ்க)

"எதையுந் தாங்க இந்த
இதயம் உண்டு"
பைரன்.

★ காண்டேர்கார் ★

கலை என்றால், வானவில்லிலே தோன்றி மறைந்துவிடும் அழகை எப்போதும் மக்கள் கண் எதிரே கொண்டுவந்து நிறுத்தும் ஒருமாயாஜாலத்தந்திரம் என்றும், ஊனக் கண்ணுக்குப் புலப்படாத உருவ அழகுகளைக் கலைக் கண்கொண்டு கண்டறிந்து, மற்றவரின் பார்வைக்குக்கொண்டுவரும் 'மந்திரவாதி'யின்வேலைஎன்றும் கூறி, கலையைச் சாதாரணமக்களுக்குச்சம்பந்தமேயற்ற அதியற்புதப் பொருளாக்கினர். கலையை ரசிப்பதற்கே தனியானதோர் பண்பு வேண்டும் என்றனர். இவ்வளவு சுற்றுச் சுவர் எழுப்பி, இவர்கள் வளர்த்த கலை, எதற்குப்பயன்பட்டுவந்ததுஎன்று கவனித்தால், சுகபோகிகளின் சுந்தரிகளை வர்ணிக்கவும், சூரர்களைப் பாராட்டவும், மற்றும், இயற்கை எழில், செயற்கை அழகு என்பன போன்றவைகளை விளக்கவும்பயன்பட்டதேயன்றி,வாழ்வுக்குப்பயன்படவில்லை.

கலையிலேதிறம், கலையின் நிலையிலே உயர்வு, கலையிலே பல வகை என்று கூறுவதிலும், "கலை, கலைக்காகவே" என்று பேசுவதிலும், பூரிப்பும் பெருமையும் அடைந்தனர். கலை, நோக்கமற்ற நேர்த்தியாகக்கருதப்பட்டது. கலை,வெறும் அழகு விளக்கமா? என்று கேட்டால், இல்லை என்பர். கலை, மன எழுச்சிக்குச் சாதனமா என்று கேட்டால், அதுமட்டுமல்ல என்பர். கலையை விளக்குங்கள், அதன் தன்மை எப்படி இருக்கவேண்டும்? அது பயன் கருதும் செயலா? அல்லது விளைவு இல்லாததா? என்று கேட்டால், கலை, மணம்போல், அழகுபோல், உண்மைபோல்,முழுவதும் விவரிக்கமுடியாத வியக்கத்தக்க சக்தி என்பர். அழகு, சுவை, மணம் இவைகளால் பயன் உண்டே, அதுபோல் கலையினால் பயன் உண்டன்றோ! அங்ஙனம், கலையினால் பயன் உண்டு என்றால், யாருக்குப்பயன்தருவது கலைஎனக் கருதப்படவேண்டும்என்றுகேட்டுவிட்டாலோ, கலாரசிகர்களுக்கு முகம் கடுக்கும். 'கலை, கலைக்காக' என்பர்.

காண்டேர் கார், கதாசிரியர் மட்டுமல்ல, கலாசிரியர். அவர் கருத்து, கவிஞர் பாரதிதாசனின் கருத்தைப்போன்றதே. கலை, கலைக்காக என்று பேசுபவர்களின்பகட்டுரை அவருக்குப்பிடிக்காது. கலைக்காக வாழ்கிறேன், என்ற பொருளற்றபேச்சுக்காரரல்ல காண்டேர்கார். புரட்சிக்கவிஞர் கவிதைகளில் கூறுவதைக் காண்டேர்கார், உரைநடையில், கதைவடிவிலே கூறுகிறார். புரட்சிக் கவிஞர்போலவே, காண்டேர்கார், முற்காலத்தவர் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் ஆகியவற்றை மீறுபவர். கலை,வாழ்வுக்காக! வாழ்வுசெம்மைப்பட, மக்கள் வாழ்வை அனுபவிக்க, வாழ்வு கருகும் நிலை பெறாமல் மலர்ந்து மணம் பரப்புவதற்குக் கலைபயன்படவேண்டும் என்ற கொள்கையினர். தென்றல்போன்ற இனிமையும், சிறுதூறலுக்குள்ளஜிலுஜிலுப்பும், இசைக்கு உள்ள எழுச்சியும் மக்களுக்கு, வெறும்மாளிகைவாசிகளுக்குமட்டுமல்ல, உழைத்து அலுக்கும் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்பது காண்டேர்கார் கொண்டுள்ள கொள்கை. அவருடைய கதை அமைப்பு முறை கதைகளிலே கூறப்படும் நிகழ்ச்சிகள், கதையைத்தீட்டிச் செல்லும் போக்கு, ஆகியவற்றிலே, கலை, வாழ்வுக்காக, என்பதனைக் காண்டேர்கார் அழகுபட விளக்கியிருக்கிறார். செல்வவான்கள், சுகபோகிகள், கொண்டுள்ள 'கலைஉணர்ச்சி' கபடம்நிறைந்தது. அந்தக்'கலாரசிகர்கள்' ஏழைகளை உறிஞ்சி, இன்பம் பெற்று இறுமாந்து கிடப்பவர்கள் என்பதை நன்கு உணர்ந்து, சமுதாயத்திலே எதை எதையோகூறி, என்னென்ன காரணமோ காட்டி உழைக்கும் கூட்டத்தைப் பாடுபடாத கூட்டம் ஏய்த்து வந்தது போலவே, கலையையும் இந்தச் சுரண்டும் காரியத்துக்குச் சுகபோகிகள் பயன்படுத்துகிறார்கள் என்பதை வெட்டவெளிச்சமாக்குகிறார், காண்டேர்கார்.

கலைத்துறையிலே, நடைபெற்றுவரும், புரட்சியிலே, காண்டேர்காரின் முயற்சிக்கு ஓர் முக்கியமான பங்கு உண்டு.

காண்டேர்கார், மராட்டியர்; சுயமரியாதைக்காரர்; சமதர்ம நோக்கமுடையவர். அவருக்கு மக்களிடம் மட்டற்ற அன்புமட்டுமல்ல, வற்றாதநம்பிக்கை இருக்கிறது. கொடுமைகளைக்களைய வீரர்கள் வாள் எடுத்துக்களம் புகுவது போலக் காண்டேர்கார்,பேனாவைக்கருவியாகக்கொண்டு, சுகம் எங்கே? இருதுருவங்கள், கருகிய மொட்டு, வெறுங்கோயில்,முதலிய பல ஏடுகள்மூலம், நாட்டுக்குப் பணிபுரிந்துவருகிறார்.

கலை, கோயிலுக்கு; இல்லையானால் அரண்மனைக்கு, என்றநிலையை மாற்றிய, பாரதிதாசன் போலவே, கதை மூலம், கலையை, நாட்டு நிலையை விளக்கவும், அதனைத்திருத்தவும், காண்டேர்கார்,உபயோகிக்கிறார், கலை கலைக்காக அல்ல, கலை, மக்களுக்காக, மக்களின் வாழ்விலே மணம் பரப்புவதற்காக, சிக்

(23-ம் பக்கம் பார்க்க)

கனவில் கவிதா மண்டலம்

பதுண்டு. எழுந்திடுக!!" என்றார். எழுந்தனர், அவரைப் பின்தொடர்ந்தனர், நானும் உடன் சென்றேன்.

★

இடித்துரைத்தார்

கவியரசர் இக்பால் முன்னால் செல்கிறார், பின்னே நடக்கிறது பாட்டாளிக்கூட்டம், உடன் செல்கிறேன் நான், உலவிக்கொண்டிருக்கிறார், ஷெல்லி. பாட்டாளிக் கூட்டத்தைக் கண்டார், முகத்திலே, இருந்த பொலிவு, கோபக்குறியாக மாறிவிட்டது. கவி இக்பால், அவர்களை, ஷெல்லியின் எதிரே நிற்கவைத்தார்; சுட்டிக்காட்டினார் அவர்களை. புருவத்தை நெறித்தார் ஷெல்லி. "ஆம்" என்பவர்போல் தலையை அசைத்தார் இக்பால். விசாரணை ஆரம்பமாகி விட்டது.

"செல்வவான்களால்தானே நீங்கள் சீரழிக்கப்படுகிறீர்கள்!" என்றுகேட்டார் ஷெல்லி, மிருதுவான குரலில். "ஆம்" என்றனர் பாட்டாளிகள்.

"அப்படிப்பட்டவர்களுக்காக ஏன் நீங்கள் உழவுவேலை செய்கிறீர்கள்? உங்களைத் துன்புறுத்துபவருக்கு ஆடைநெய்து தருவது ஏன்?" என்று சற்று உரத்தகுரலில் கேட்டார் ஷெல்லி. அவர்கள் வாய்மூடிக்கிடந்தனர்.

"இவ்வளவு, அவர்களுக்காக உழைக்கிறீர்களே, உங்களிடம் நன்றிகாட்டினார்களா?" என்று ஷெல்லி குரலைமேலும் உயர்த்திக்கேட்டார். "இல்லையே!" என்றனர் ஏக்கத்துடன். "அப்படிப்பட்ட நன்றிகெட்டவர்களுக்கு நீங்கள் ஆயுட்காலம்வரை பாடுபடுகிறீர்கள்! ஏன்?" என்று முழக்கமிட்டார் ஷெல்லி.

"அவனிடம் ஆயுதமிருக்கிறது, எங்களை அடக்க முடிகிறது. அவனிடம் விலங்குஇருக்கிறது, எங்கள் மேல் அதனைப்பூட்டுகிறான்" என்றனர் பாட்டாளிகள்.

"உடலைவாட்டி உழைத்து உற்பத்தி செய்கிறீர்கள் பொருளை. அவன் அப்பொருளைப்பறித்துக்கொண்டு போகிறான். அதற்காகவே, ஆயுதங்களையும் விலங்குகளையும் வைத்துக்கொண்டிருக்கிறான்" என்று ஷெல்லி விளக்க முரைத்தார். தலையை அசைத்தனர் பாட்டாளி மக்கள். "உங்கள் பொருளைப்பறிக்க, ஆயுதங்களையும் விலங்கையும் உபயோகிக்கிறார்களே அந்த முதலாளிகள், அந்த ஆயுதங்களையும் விலங்குகளையும், செய்துதந்தவர்கள் யார்?" என்றுகேட்டார். என் நாடி நரம்பு அவ்வளவிலும் தேள்கொட்டினது போலாகிவிட்டது. பாட்டாளிகள் தலையைத்தொங்கவிட்டுக் கொண்டனர்.

"இதோபார் அப்பா! இப்படி உழைக்கிறீர்களல்லவா? உணவுஉண்டா? ஓய்வு? குடிஇருக்க இடம் உண்டா? சுகம்? சமாதானம்? காதலைக்கண்டது உண்டா? பயந்துபயந்து பாடுபடுகிறீர்களே இப்படிப்பாடுபட்டுப் பெறுகிற பொருள் என்ன? எதைப் பெற்றீர்கள்?" என்றார் ஷெல்லி. எனக்குமட்டுமல்ல, எதிரேநின்ற ஏழைகள்கூட்டமே விம்மலாயிற்று. வேகமாக முன்னேறினார் கவி.

"நீங்கள் விதைக்கிறீர்கள்—அயலான் அறுக்கிறான்! நீங்கள் நெய்கிறீர்கள்—அவன் அணிந்துகொள்கிறான்! நீங்கள் உற்பத்திசெய்ய, அவன் அனுபவிக்கிறான்" என்று மளமளவென நிலைமையை விளக்கினார். நீர்வழியும் விழியுடன் நின்றனர் பாட்டாளிகள். ஒரு பெரிய கேலிச்சிரிப்புடன், கூறினார், "இவ்வளவுதானா? உணவு உடை இவைகளை மட்டுந்தானா நீங்கள் உண்டாக்கி அவனிடம் தருகிறீர்கள்? உங்கள்மீது அவன் உபயோகிக்கும் ஆயுதங்களைக்கூடத்தான் நீங்கள் செய்து அவர்களிடம் தருகிறீர்கள்!" என்றார்.

"ஆமாம்! ஆனால் நாங்கள் என்னசெய்வது? அவன்தான் கொள்ளைகொள்கிறான் நாங்கள் உற்பத்திசெய்த பொருள்களை" என்றனர் பாட்டாளிகள். "அதுதெரிகிறதல்லவா? சரி! இனிவிதையுங்கள், ஆனால் அவனை அறுக்கவிடாதீர்! ஆயுதம்செய்கிறீர்களா, செய்து அவனிடம் தராதீர்கள்!" என்றார் ஷெல்லி. அந்தப்புரட்சிகரமான பேச்சைக்கேட்டுத் திடுக்கிட்டு நின்றனர் தொழிலாளிகள். ஓஹோ! மீண்டும்தயக்கம் வந்துவிட்டது தொழிலாளர்களிடையே என்பதைப் புரிந்துகொண்டார்கவி. உடனே, மறுபடியும், அவர்களுக்கு அவர்தம் நிலைமையைக் கவனப்படுத்தி விடவேண்டும் என்றுதீர்மானித்துவிட்டார்போலிருக்கிறது, உடனே கூறலானார், "நீங்கள்கட்டியமாளிகையிலே, அவர்கள் வாழ, நீங்கள் குடிசைகளிலே குமுறுகிறீர்கள். நீங்கள் செய்தவிலங்கை நீங்களே பூட்டிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள்செய்து தந்தவேல், உங்கள்மீதே பாய்கிறது" என்றார். தொழிலாளர்கள் துயருடன், வெட்கமுமடைந்து நின்றனர். ஷெல்லியின் முகம் கோபத்தால் ஜொலித்தது. "என்னசெய்வதய்யனே!" என்றுகேட்டனர் ஷெல்லியைநோக்கி, ஷெல்லிகேலிச்சிரிப்புடன், "என்னசெய்வதா? மண்வெட்டி இருக்கிறதல்லவா உங்களிடம்?" என்றுகேட்டார். 'இருக்கிறது' என்றனர். 'அதைக்கொண்டு சவக்குழிதோண்டுங்கள்' என்றார். நான்கூடக்கொஞ்சம் பயந்துபோனேன், ஷெல்லி, சவக்குழிதோண்டி அதிலே அக்ரமக்காரரைப் போட்டுப் புதைக்கச்சொல்லிப் பாட்டாளிகளை ஏவிவிடுகிறார்போலும் என்றெண்ணி. தொழிலாளர்களும், என்னைப்போலவே கொஞ்சம் திகைத்துப்போயினர் என்றுதெரிந்து கொண்டேன். ஷெல்லி, பேசலானார்; என்னைத்தூக்கி வாரிப்போட்டது அந்தப்பேச்சு. "உங்களுக்குச்சவக்குழியைநீங்களே வெட்டிக்கொள்ளுங்கள்! உங்கள்பிணத்தின்மேல் மூடுவதற்குச் சல்லாத்துணியையும் நீங்களே நெய்துகொள்ளுங்கள்" என்றார்கவி. உலகிலே எல்லாவிதமான ஒலி, ஒளியாவும் அசைவற்று நின்றுவிட்டதுபோலாகிவிட்டது, அந்தப் பேச்சினால். "நீங்கள் பிறந்தநாடு இருக்கிறதே இங்கு உங்களுக்குச் சுடுகாடு கிடைக்கும், கவலைப்படாதீர்",

என்றார். வாழ்வு இல்லை! வதைகிறீர்கள்! வதைக்கப் படுகிறீர்கள், யார் வதைக்கிறார்களோ அவர்களின் வாழ்வுக்காகவே உழைக்கிறீர்கள். இந்த வாழ்வுதான் உங்கட்கு என்றால் சாவுமேல் அல்லவா? சித்திரவதையைப்பொறுத்துக்கொண்டிருப்பதைவிட, தற்கொலை நல்லதல்லவா! பிறருக்குப்பயன்பட்டு, வாழ்வுகெட்டு இருக்கும் மக்களே! ஏன் உயிருடன் இருக்கிறீர்கள், மாண்டு தொலையுங்கள்! நாடு சுடுகாடு தரும், சுக வாழ்வுதாராது!—ஷெல்லியின் மொழி, இவ்வளவையும் இதற்கு மேலாகவும் தெரிவித்தது. பாட்டாளியின் முகம், பயம், சோகம், வெட்கம், திகைப்பு, எனும் பல்வேறு உணர்ச்சிகள் கூடிப்போரிடும் களமானது கண்டார் ஷெல்லி. தன் சொல் வேலை செய்யத் தொடங்கிவிட்டதைத் தெரிந்துகொண்டார். இடித்துரைத்தோம், இவருக்கு வீரமும் உறுதியும் வருமளவு என்று கண்டுகொண்டார். விம்மல், குமுறல்' முணுமுணுத்தல், இடையிடையே ஆவேசக்குரல், சூளுரை போன்ற ஒலிகள் கிளம்பின, பாட்டாளிகளின் கூட்டத்திலேயிருந்து. "முடியுமா?" என்ற கேள்வி,எல்லா ஒலிகளையும் மீறிக்கேட்டது. ஷெல்லி கேட்டார், 'எது முடியுமா? என்று சந்தேகப்படுகிறீர்கள்' என்று. "ஆதிக்கக்காரரின் பிடியிலிருந்துவிலகமுடியுமா? அவர்களை, எதிர்க்கமுடியுமா? அவர்கள்,..............." என்று இழுத்தார்ப்போல் பேசினர் பாட்டாளிகள்.

"கொடுங்கோலர்கள், என்னனென்ன செய்துவிடுவரோ என்றுதானே யோசிக்கிறீர்கள்? குத்தட்டும், கொல்லட்டும், வெட்டட்டும், அறையட்டும், அரியட்டும், இஷ்டம்போலச்செய்யஇடமளியுங்கள்" என்றார். "என்ன நேரிடுமோ பிறகு என்று கவலைப் படுகிறீர்களா? வெட்கப்பட்டுத்திரும்பி ஓடுவர் கொடுங்கோலர்கள்" என்றார் கவி.

"அடிமைத்தளைகள் சிதறும், உடலில் ஒட்டிய பனித்துளி சிதறுவதுபோல" என்று வீரமொழிபுகன்றார். அதுகேட்டு ஆவேச உணர்ச்சி உண்டாயிற்று, ஆனால், "தீர்மானம்" செய்துகொள்ளும் நிலை பிறக்கவில்லை. "எப்படி அது சாத்தியமாகும்? கொடுங்கோலரைவிரட்ட, அவர்கள் கொல்லவந்தாலும்,சரிஎன்று சாவையும் வரவேற்று நிற்க, பிறகு அடிமைத்தளைகளை உடைத்தெறிய நம்மால் எப்படி முடியும்?" என்ற சந்தேகமே, பாட்டாளிகளின் பரிதாபகரமானமுகத்திலே இருந்திடக்கண்டேன். கவி அதனைக்கண்டார். அவ்வளவு சந்தேகத்தையும், திகைப்பையும்ஒருநொடியில் போக்கக்கூடியதும், உலகின் கொடுங்கோலரின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கக் கூடியதுமான வாசகமொன்றுசொன்னார். நீங்கள் பலர், அவர்களோ சிலர்!—என்றார். கண்டறியதான கண்டேன், கேட்டறியா அவ்வுரைகேட்ட மக்கள், உலகே எதிர்ப்பினும் சரி, என்ற உறுதியுடன் நிற்கக்கண்டேன்.

எங்கும் போர் ஒலி

பற்பல பக்கங்களிலிருந்தும் போர்ஒலி கிளம்பிவிட்டது, அந்தப்பாட்டாளிமக்களின் உள்ளத்தைக் கிளறும் விதமாக.

"ஐயோ! கடவுளே! ஏன் உணவு இவ்வளவு அதிக விலையாக இருக்கிறது? மனிதனின் சதையும் இரத்தமும் ஏன் இவ்வளவுமலிவு!" என்றார் ஓர் கவி, பட்டினிச்சாவு, தற்கொலை, இவைகளுக்கு என்ன பொருள் என்பது அப்போதுதான் எனக்கு விளங்கிற்று. உலகம் என்ற இந்தக்கொடிய 'மார்க்கட்டிலே,' உணவின்விலை, மனிதனின் உயிரின் விலையைவிட அதிகம்! ஏன்? என்று கேட்டார் ஓர் கவி, ஏன்? என்ற கேட்டனர் பாட்டாளிகள்.ஏன்?என்றுஎன்னை நானே கேட்டுக்கொண்டேன். ஏன்?என்றுஉங்களைக் கேட்கிறேன்! உலகாள்பவர்களை நோக்கிக்கேளுங்கள்! ஏன், என்று உலகின் முதல்வனையேகேளுங்கள்.

"ரோஜா மடிந்திட முட்கள் வாழ்வது ஏன்?" என்று கேட்டார் மற்றோர் கவி. இந்த ஒலிக்கு இடையே ஒரு கீச்சுக்குரல் கேட்டது,

"ஆண்டவனைத் தொழலாம் வாரீர். அவர் நமது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வார்" என்று யாரோ கூறினர்.

"இருப்புச்சக்கரங்களின் இரைச்சலில் எங்கள் விண்ணப்பம் இறைவன் செவியில் ஏறுமோ?"என்று கேட்டார் ஒருகவி.

"இறைவன் பக்கம் தேவர்கள் பாடிநிற்பரே, எங்கள் அழுகுரல் அவன் செவியில் சேருமோ?" என்று கேட்டார் கவி.

'எல்லாம்சரி! இம்சைக்குஆளானோம். உண்மை! நாம் பலர் அவர்கள் சிலர். உண்மை! நாம் உழைக்கிறோம், அவர்கள் வாழ்கிறார்கள். உண்மை! ஆனால் ஏன் நாம், இந்த நிலையில் வந்தோம். ஏன் இந்தக் கொடுமையை ஏற்றுக்கொள்ள நேரிட்டது? எப்படி நாம் ஏமாளிகளானோம்?" என்று கேட்டான் ஒரு பாட்டாளி. இக்பால், ஷெல்லி,மற்றப்பலகவிவாணர்கள், அப்போது அங்கு இல்லை! பாட்டாளிகள், தங்களின் நிலைமைக்குக்காரணம் என்ன என்பதைக்கண்டறியத்துடித்தனர்; சுற்றுமுற்றும் பார்த்தனர்; நானும் அதேசந்தேகத்தால்தாக்கப்பட்டு, நின்றேன். ஒரு உறுதியான குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தேன், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பண் இசைத்துக் கொண்டுவரக்கண்டேன். "பாடுபட்டீர்கள், பருக்கை இலாதொரு, பட்டியின்மாடென வாழ்கின்றீர்"—என்றார் கவிஞர். "அதைத்தான் இப்போது தெரிந்துகொண்டோம்! ஆத்திரமும் அடைந்துள்ளோம்" என்றனர் பாட்டாளிகள். புரட்சிக்கவிஞர் மேலும் பாடினர்,

"மதக் கேடர்கள் காலினில் வீழ்கின்றீர்
ஒண்ட வீடும் இலாமலே தாழ்கின்றீர்"

என்றார். ஆமாம், ஒண்டக்குடிசையும் இல்லை, இழிவான நிலைமைதான். ஆனால், எங்களுக்குப்புரியவுமில்லை, மற்றவர்கள் கூறவும் இல்லை. எங்கள் 'சக்தி' அது பிறரால் சுறண்டப்படும் விதம், அவர்களை

எதிர்க்கவேண்டியதன் அவசியம்,எதிர்த்தால்வெற்றி கிட்டும் என்ற உறுதிமொழி, இவைகளைப்பலரும் கூறிவிட்டனர்: ஆனால் எங்கள் மனதைக்குடைகிறது ஒரு சந்தேகம், அதை தெளிவாக்கவேண்டும். நாங்கள் ஏன் இந்தக் கதிக்கு ஆளானோம்? என்னகாரணம், எங்கள் ஏமாளித்தனத்துக்கு?" என்று கேட்டனர்.

ஏழையின் துயருக்குக்காரணம், பாடுபட்டும் அதன் பலனை அவன்பெறஒட்டாதபடி பிறர்சுறண்டுவது.இது புரிந்துவிட்டது, எனக்கும். முதலைகாலைப் பிடித்து இழுத்துக்கொண்டு போயிற்று,ஆள் இறந்தான்: ஆனால் முதலை, எப்படி இவனைப்பற்ற முடிந்தது! இவன் அது உலவும் ஓடையிலே இறங்கினான்! அதுபோலக்கொடுங்கோலர்களால் கொடுமைப்படுத்தப் பட்டதால்,ஏழை துயருறுகிறான். புரிகிறது! ஆனால், ஏன், அந்தஏழை, கொடுங்கோலருக்கு இடமளித்தான், தலைசாய்த்தான்? புரியவில்லை!

பாட்டாளிகள், அதனைத்தான்கேட்டனர், "பாடுபட்டவர்கள் பட்டியில் மாடெனஉள்ளீர்." என்றபண் பாடிய பாரதிதாசனைப் பார்த்து.

"மத ஓடத்தில் ஏறிய மாந்தரே!
பலி பீடத்தில் சாய்ந்தீரே"

என்றுபதிலிறுத்தார் பாரதிதாசன்.மின்சாரவேகத்திலே உண்மைபாய்ந்தது, எங்கள் நெஞ்சிலே.ஆமாம்! ஏதோ ஓர்ஓடம். பவக்கடலைத்தாண்ட இதிலே ஏறிச் செல்வோம் வாரீர் என்றமுன்பு ஓர்நாள் அழைத்தனர். ஏறிக்கொண்டோம். தன்னலம்என்றதீவிலேகொண்டு வந்துதள்ளிவிட்டனர். அங்குமுதலாளித்வ பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கிறது, அந்தப்பலிபீடத்திலேதான் சாய்ந்தோம். இந்தப்பழங்கதையைமறந்து,ஏதேதோ எண்ணி நொந்தோமல்லவா! ஆம்! மதஓடத்தில் ஏறினோம்! பலிபீடத்தில் சாய்ந்தோம்! –உண்மை புலப்பட்டுவிட்டது. உறுதிபிறந்துவிட்டது.

"கவிஞரே! என்னசெய்யச் சொல்கிறீர்.கட்டளையிடுக!" என்ற பெருமுழக்கம் கிளம்பிற்று. அந்தப் பேரொலியை அடக்கிக்கொண்டு கிளம்பிற்று கவிஞரின் குரல்.

"கொலை வாளினை எடடா!
மிகுகோடியோர் செயல் அறவே!" என்றார்; என்ன நேரிட்டது! புரட்சி! புலர்பிக்கிடந்த மக்களின்போர்! படைவரிசை முன்னேறிச்செல்லும் பண்ணும் பாடினார் பாரதிதாசன்.

'வலியோர்சிலர், எளியோர்தமை வதையேபுரிதுவதா?
மகாராசர்கள் உலகாளுதல் நிஜமாம்எனும்நினைவா?

என்றார். "கொலைவாளினை எடடா" என்று ஆர்ப்பரித்தது அப்பெரும்படை! புரட்சி கிளம்பிவிட்டது,போர் மூண்டுவிட்டது.

பிணம் சிரித்தது.

அந்தப்பயங்கரமான சண்டை எங்கும் நிகழ்ந்தது. ஆதிக்கக்காரர்களின் ஆணவமும் குறையவில்லை "பிடி, சுடு! விலங்கிடு! வெட்டு!" என்றுகொடுங்கோலர்காட்டுக் கூச்சலிட்டனர். சிலபாட்டாளிகளைப் பிடித்தும் கொண்டனர். இரத்தம் தோய்ந்த பாதையிலே,பாய்ந்தோடிவந்தார், ஹரிந்திரநாத் சட்டோபாத்யாயா, பாட்டாளியின் படைவரிசை குலையாதிருக்கும் வகையான பரணிபாடிக்கொண்டு. வெட்டு! குத்து! கொல்லு! என்றுகூச்சலிட்ட ஒருகொடுங்கோலனின் கரத்தைப் பிடித்து இழுத்தார் கவி. அவன், அந்தத்துணிவுகண்டு கொஞ்சம் அஞ்சினான். ஆனால் அவருடைய பேச்சைக் கேட்டோன் மிரட்சியால் மாண்டே போனான் என்னலாம். அவர் கேட்டார்,

"சாவு, சாவு, என்று கூறி மிரட்டுகிறாயே! சாவு வரும் என்று நீ சொல்லும்போது, நாங்கள்சிரிப்பதா இல்லை, ஆச்சரியப்படுவதா? அப்பா! சாவு, சாவு, என்று சொல்கிறாயே, என்னப்பா அது! நாங்கள் எப்போது பிழைத்திருந்தோம்? இப்போது சாகடிக்கிறேன் என்று பேசுகிறாயே, நாங்கள் ஒரு நாளும் வாழ்ந்ததுகிடையாதே!" என்றார். அவன் திகைத்தான். யாருக்குத்தான் அந்த வார்த்தையைக் கேட்டுவிட்டுத் திகைப்பு ஏற்படாமலிருக்க முடியும்?

"சுட்டு வீழ்த்துவீர்களோ? வீழ்த்தி? உயிரையா காணமுடியும்? முட்டாளே! சாவுக்கு அஞ்சமாட்டோம். உங்கள் விலங்குகளுக்கும் அஞ்சமாட்டோம்! எங்கள் நரம்புகள் அத்தனையும் விலங்குகள் என்று அறிவோம். அக்ரமக்காரரே! நாங்கள் உங்கள் அக்ரமத்தைக்கண்டு சிரிக்கிறோம்," என்றார். அவன் சாய்ந்தான் கீழே. மற்றோர் பக்கத்திலே ஒரு பாட்டாளி பிணமாகிக் கீழே கிடக்கக் கண்டேன். ஹரிந்திரநாத் குறிப்பிட்ட சிரிப்பு, அந்தப் பிணத்தின் முகத்திலே இருக்கக்கண்டேன். சாகு முன்பு, கொடுமையை எதிர்த்தோம் என்ற சந்தோஷம் அந்த முகத்திலே இருந்தது.

தேவநீதி

"வருகிறாயா, கடவுளின் கொலுமண்டபம்போகலாம்?" என்று கூப்பிடும் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தேன், ஆஸ்கார்ஒயில்ட் எனும் கவிஞர் நிற்கக்கண்டேன், சம்மதம் என்றேன்.இருவரும்இறைவனில்லம் சென்றோம். அங்கே மனிதனை விசாரித்துக் கொண்டிருந்தார் கடவுள். "கவனி, அவன் நமது இனம்!" என்றார் ஆஸ்கார்ஒயில்ட். குற்றச்சாட்டுகளுக்கு அவன் மறுப்புரைக்கவில்லை. ஒப்புக்கொண்டான். தேவன் தீர்ப்புக்கூறினார்.

"உன்னை நரகலோகத்தில் தள்ளப்போகிறேன்" என்றார் கடவுள்.அந்தமனிதன், "உம்மால் முடியாது" என்று கடவுளிடம் கூறினான்.

"முடியாதா? என்னசொன்னாய்?உன்னைஎன்னால் நரகத்துக்கு அனுப்பமுடியாத என்றுசொல்கிறாய்? ஏன்முடியாது?" என்றுஇறைவன் கொஞ்சம் கோபத்துடனேயே கேட்டார். பூ லோ க த் தி லே யே, கோர்ட்டை அவமதிப்பதுகுற்றமாயிற்றே, இந்தமனிதன்தேவநீதிசபையிலே, அவமதிப்பாகநடந்துகொண்டால் கடவுளுக்குக்கோபம்வராமலிருக்குமா? ஆகவே தான் கடவுள்கோபமாகவே கேட்டார். "ஏன்உன்னை என்னால் நரகத்துக்கு அனுப்பமுடியாது" என்று. கடவுளே கலங்கும்படிப்பதில் கூறினான் அந்தமனிதன்.

"ஏனா? கடவுளே! நான் நரகத்தில்தானேஎப்போதும் வசித்துவருகிறேன். இனி என்ன தாங்கள் புதிதாக அனுப்புவது! அதனால்தான் தங்களால்என்னை நரகத்துக்கு அனுப்பமுடியாது என்றுகூறினேன்" என்றான். என்னயோசித்தாரோ இறைவன், நானறியேன். மறுபடிபேசினார், "சரி! நரகத்துக்கு அனுப்பமுடியாது என்று வைத்துகொள்வோம். என்றால் நிச்சயமாக உன்னைச்சுவர்க்கத்துக்குஅனுப்பமுடியும்" என்று கூறினார்.

போக்கிரித்தனமான மனிதன், அதற்கும் சும்மா இல்லை. 'உம்மால் அதுவும் முடியாது!' என்றான். 'ஏன்' என்றார் இறைவன். 'சுவர்க்கம் என்றால் எப்படி இருக்கும் என்று எனக்கு எப்போதும் தெரிந்ததில்லையே. அப்படி இருக்க, நீர் என்னை அனுப்புகிறஇடம்சுவர்க்கம்தான் என்று நான் எதைக்கொண்டு நிச்சயப்படுத்திக்கொள்வது. ஆகவேதான், என்னைச்சுவர்க்கத்துக்கு —அனுப்பவும் உம்மால் முடியாது என்று சொன்னேன்" என்றான் அம்மனிதன். தேவநீதி மன்றத்திலே பேச்சில்லை. ஆஸ்கார் ஒயில்ட் என்னைச் சீண்டினார், "அவன் எனதுமாணாக்கன்" என்றார். ஓஹோ! அதனால் தான், கடவுளே சரி. என்று ஒப்புக்கொள்ளக்கூடிய விதமாகப்பேசினான் என்றேன்.

அழிவு: புதுமை

"உலகம் அழிந்துவிட்டது" என்றஒலம்கேட்டது, நாங்கள் இருவரும் வேகமாக தெய்வசபையைவிட்டு வெளி ஏறினோம்; உலகிலே, எங்குபார்த்தாலும், புகைமயமாக இருக்கக்கண்டோம்! அடடா! கடைசியில், உலகையே அழித்துவிட்டார்களே!! என்றுகூறி நான் விசனித்தேன். ஒருகணந்தான். மறுகணம், மதுரமான பண் செவியிலே வீழ்ந்தது; புரட்சிக்கவிஞர் பாடுகிறார்,

"புதியதோர் உலகு செய்வோம்......................
...."

விழித்துக்கொண்டேன்

என்னங்க இது, புதிய உலகம் பழைய உலகம்னு கூவுகிறீர்கள்! என்று கேட்டாள் மனைவி, என் துயிலையும் கனவையும் கலைத்துவிட்டு. கண்ணே! நான் கனவிலே கவிதாமண்டலம் சென்று வந்தேன் என்றேன். அவள் என்னைப்புரிந்துகொள்ளவில்லை. அது அவள் குற்றமுமல்ல. அவள்மட்டுமா, நம்மிலே எவ்வளவு பேர்களுக்கு இக்பாலும், ஷெல்லியும், பைரனும் பாரதிதாசனும், ஆஸ்கார் ஒயில்டும், ஹரீந்திரரும் தெரியும்! நமக்கெல்லாம், இவர்களுடைய கவிதை உலகில் உலவநேரம் இல்லையே! இன்னமுந்தான் நாம், "முத்தைத்தருபத்தித்திருநகை' சத்திக்கிறை சத்திச்சரவணச்" சிந்துகளிலேயே காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறோமே. புத்துலகக் கவிகளைக்காண நேரம் ஏது!

—●—

மாஜி கடவுள்கள்

(இஸிஸ் Isis)

ஈஜிப்ட்நாட்டு மூலதெய்வங்களில் ஒன்று இஸிஸ், ஆசிரீஸ் எனும் கடவுளின் தங்கை; மனைவியுமானாள். இருவருக்கும் பிறந்தமகனே ஹோரஸ். இம்மூவரும், ஈஜிப்ட் நாட்டுக்கு மும்மூர்த்திகளாக விளங்கினர்.

ஜானஸ் (Janus)

இரட்டைத் தலைக்கடவுள். ஒருமுகம், இறந்த காலத்தையும் மற்றோர் முகம் எதிர்காலத்தையும் நோக்கியபடி உள்ள ஜானஸ் என்ற கடவுள், இத்தாலியருக்கு முக்யமானவராக இருந்தவர். ஜானசின் கோயில், யுத்த சமயத்தில்மட்டுமேதிறக்கப்படும், மற்றபோது மூடியே இருக்கும்.

ஜூனோ (Juno)

ரோம் நாட்டவரின் கடவுள். ஜூபிடருக்கு மனைவி, ஜூனோ. மணமான மாதருக்கு ஜூனோ பாதுகாப்பளிக்கும் கடவுளாகக் கருதப்பட்டு ரோம் நாட்டவர் வணங்கி வந்தனர்.

ஜூபிடர் (Jupiter)

ரோம் நாட்டவரின் மூலமூர்த்திக்கடவுள். ஜூபிடரின் மனைவி, ஜூனோ.

மார்ஸ் (Mars)

ரோம்நாட்டவர், மார்ஸ் என்ற கடவுளை யுத்ததேவதை என்று வணங்கினர்.

மெர்குரி (mercur)

ரோம்நாட்டவருக்கு நாரதர். ஜூபிடர்எனும் கடவுளுக்கும் மாயாவுக்கும் பிறந்தவர். தேவர்களின் தூதர். இந்தக்கடவுள்வியாபாரிகளின்ரட்சகராக இருப்பதுடன் இறந்தவரின் ஆத்மாவை மேலுகம் கொண்டு செல்லும் வேலையிலும் ஈடுபட்டிருந்தார்.

ஓடின்: (Odin)

நார்வே, ஸ்வீடன் நாடுகளின் பிரதானக் கடவுள் ஓடின். இந்தக் கடவுளின் தேவி பெயர் பிரிகா. பால்டெர் (Balder) தார் (Thor) என்ற இரு குமாரர்கள் இவருக்கு. வெற்றி தருவது, விவேகம் தருவது ஆகியவை இவருடைய குணாதிசயம்.

ப்ளூடோ (Pluto)

கிரேக்கக் கடவுளருள் ஒருவர். ஜூவசுக்குத் தம்பி. நரகலோகத்தின் நாதன்.

ப்ளூடஸ் (Plutus)

கிரேக்க நாட்டுக் குபேரன். ஜூவஸ், இந்தக் கடவுளின் கண்களை அவித்துவிட்டார், தயவு தாட்சணியம் பார்த்து செல்வம் கொடுக்காமலிருக்க.

(15-ம் பக்கம் பார்க்க)

மாஜி கடவுள்கள்

ஈஸ்கால்பியஸ் (Aescualpius)

அபாலோ கடவுளின் குமாரன். மருந்துக்குக்கடவுள். பாம்பு சுற்றிக்கொண்டிருக்கும் தடியைக்கையிலேவைத்திருப்பான்.

போமோனு (Pomona)

ரோம் நாட்டவர் தங்கள் தோட்டங்களில் பழ வகைகள் செழிப்பாகக் கிடைப்பதற்காக, போமோனு என்ற தேவதையைப் பூஜித்து வந்தனர்.

ப்ரோடியஸ் (Proteus)

கிரேக்கநாட்டுக் கடல் தேவன், இந்த ப்ரோடியஸ், எதிர் காலத்தில் நடக்க இருப்பதைக் கூறும் சக்தி இக்கடவுளுக்கு. ஆனால், திடீர் திடீரென்று உருமாறும். அப்போது ஆருடம் பலிக்காது. இயற்கையான உருவிலிருக்கும்போது சொன்னால்தான் ஆருடம் பலிக்கும்.

ரா (Ra)

ஈஜிப்ட் நாட்டவரின் முக்கியத்துவம் வாய்ந்த கடவுள். அந்நாட்டுச் சூரிய பகவான்.

ரியா (Rhea)

கிரேக்கக் கடவுள்களான ஜூவஸ், ப்ளூடோ, ஹீரா முதலியவர்களின் தாயார்.

வீனஸ் (Venus)

காதல் தெய்வமாக, ரோம் நாட்டவர் வீனசை வணங்கினர்.

வெஸ்ட்டா (Vesta)

ரோம் நாட்டிலே குடும்பத் தேவதையாக வெஸ்ட்டாவை வணங்கி வந்தனர். ஒவ்வொரு வீட்டிலும் வெஸ்ட்டாவுக்குப் பூஜை அறை உண்டு.

வல்கன் (Vulcan)

ரோம் நாட்டுக்கு வல்கன், அக்னி தேவனாக விளங்கினான். ஜூபிடர் கடவுளுக்கு வல்கன், இடிமின்னல் எனும் ஆயுதம்தயாரித்துக் கொடுப்பான்.

கிரீட்தேவி (Crete Devi)

கிரீட் நாட்டு நாக கன்னிகையாக ஒரு தெய்வம் இருந்தது.

ஜூவஸ் (Zeus)

கிரேக்கரின் மூலக் கடவுள் ஜூவஸ். தேவலோகத்தில், கையில் (மழுவாயுதம்போல) இடிமின்னல் ஆயுதம் தாங்கிகொண்டு வீற்றிருக்கிறார். தேவதேவனாகப் போற்றப்பட்ட ஜூவஸ், க்ரோனுசுக்கும் ரியாவுக்கும் தோன்றி தன் சகோதர சகோதரிகளின் துணையுடன், தகப்பனுக்கு எதிரிடையாகப் புரட்சி நடத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றி, சகோதரர்களுக்கு சில லோகங்களையும் அதிகாரங்களையும் பங்கிட்டுக் கொடுத்து, தன் தங்கையைத் தானே மணம் செய்துகொண்டு, உலகை ரட்சித்து வருகிறார் என்பது கிரேக்கரின் கடவுட் கொள்கை.

★

இன்னும் எண்ணற்ற கடவுள்கள், கோயில்கொண்டு எழுந்தருளியிருந்த நாடுகளிலே, இன்று, நிலைமை அடியோடு மாறிவிட்டது. காளிதாசன், கம்பன், போன்ற கவிவாணர்களால் போற்றிப் புகழப்பட்ட அந்தக் கடவுள்களெல்லாம், இன்று மாஜிகள்! இன்றும் நம் நாட்டிலே, நம்மவர்கள் நம்புகிறார்களே, அதுபோலவே அந்தக் காலத்திலே அந்த நாடுகளிலெல்லாம் இன்று மாஜிகளாகிவிட்ட கடவுள்களிடம், பலவகையான அஸ்திரங்கள் உண்டு என்றும், அற்புதம்புரிவதிலே அபாரமான திறமை உண்டென்றும் மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையை நாட்டிலே பரப்பவும் பலப்படுத்தவும் பல புராணங்களும் இருந்தன. அந்தப் புராணங்கள் புண்யகதைகளென்று போற்றப்பட்டு வந்தன. அவ்வளவும் இன்று அங்கு பழங்கதைகளாகிவிட்டன. மதம்வேறு, மக்களின் மனதிலே மாசுபடிந்திருந்தபோது, கட்டிவிடப்பட்ட இந்தக் கதைகள் வேறு என்பதை மதிவாணர்கள் தைரியமாக எடுத்துக்கூறினர். மருண்ட மக்கள்செய்த கொடுமைகளைச் சகித்துக்கொண்டனர். புராணிகன், தேவ அம்சம் பெற்றவன், புராணப் புலவன் அருட்கவி, பூஜாரி தேவதூதன் அவர்களைக் குறைகூறுவது கொடியபாவம் என்றுதான், அங்கெல்லாம் மக்கள் முன்பு நம்பினர். யாராவது தைரியமாக, இவைகளைக் கண்டிக்க முன்வந்தால், ஆத்திரம் கொண்டு, அவர்களை அடித்தனர், இம்சித்தனர், கொளுத்தினர், சித்திரவதை செய்தனர். இவ்வளவு கொடுமைகளையும் சகித்துக்கொண்டவர்களின், தொண்டின்பயனாகவே இன்று அங்கு அறிவாலயங்கள் ஆயிரமாயிரமாகி, மக்கள், முன்னேற முடிந்தது. ஒருகாலத்திலே, ஓங்கார சொரூபங்களாக விளங்கிய ஆயிரக்கணக்கான கடவுள்கள், இன்று மாஜிகளாயினர்.

பலகாலமாக மக்கள், பயபக்தியோடு தொழுதுவரும் தெய்வங்களைப் பொய் என்று கூறுவது, சுலபமானவேலை அல்ல, எல்லோரும் செய்யக்கூடிய வேலையுமல்ல, அதற்கு இருக்கவேண்டிய நெஞ்சு உரமே வேறுவிதமானது. அறியாமை என்னும் முரட்டுக்குதிரை மீது ஏறிக்கொண்டு, கொடுமை எனும் வேல் பிடித்துக்கொண்டு, கூட்டம் கூட்டமாக, மக்கள் பாய்ந்துவருவர். கடவுளை நிந்திக்கிறான் கயவன், இவனைக் கொன்று, உடலைக்காக்கை கழுகுக்கு இரையாக்குகிறோம் என்று கூவுவர், இந்தப் பயங்கரமான சூழ்நிலையிலேஇருந்துகொண்டு. எதுவரினும் வருக என்ற நிலையில் பாடுபட்டனர், சில புரட்சி வீரர்கள். ஒருபிரபுவின் ஆதிக்கத்தை, ஒரு அரசனின் ஆதிக்கத்தை எதிர்த்து புரட்சி நடத்துவது என்றாலே உயிர்போகும். மக்கள் மனதிலே நெடுநாட்களாகக்குடிகொண்டுள்ள, எண்ணற்ற தெய்வங்களை, அவைகளைப்பற்றிக் கட்டிவிடப்பட்ட கதைகளை, அந்தக் கதைகளுக்கேற்றபடி நடைபெற்றுவரும் திருவிழாக்களை சடங்குகளை, அவைகளால் பிழைத்துவரும் பூஜாரிக்கூட்டத்தை எதிர்த்துப் பணிபுரிவதென்றால், சாமான்யமான காரியமல்ல. வாழ்விலே பற்றுஅற்றால் மட்டுமே, அந்தப் பணிபுரியமுடியும்.

புத்தறிவு பரப்புவதற்கு நடத்தப்படவேண்டிய போர், பலம் பொருந்தியதோர் கோட்டைக்குள் இருக்கும், மாயாவாதியை, வெளியே, வெட்ட வெளியில் நின்றுகொண்டு, எதிர்க்கும் ஆபத்தான காரியம் போன்றது. கோட்டைக்குள்ளே காவல் இருக்கும், ஆட்பலத்துடன் ஆயுத பலமும் ஏராளமாக இருக்கும், சுற்றுச் சுவர் பாதுகாப்பு அளிக்கும், சூழ்ந்திருக்கும் அகழியும் பாதுகாப்பு அளிக்கும். இத்தலைய பலமான கோட்டைக்குள் இருக்கும் எதிரியின் ஆதிக்கத்தை, தன்னந்தனியனாய் வெட்ட வெளியில் நின்று எதிர்ப்பது மிகக் கஷ்டமான காரியம். ஆனால், ஒரு சிலராவது முன்வந்து அந்தக் கஷ்டமான காரியத்தில் ஈடுபட்டால்மட்டுமே, தட்டை உலகம் உருண்டையாகிவிட்டது, தலை பல கொண்ட தேவன், பலி பல கேட்கும் பகவான், தேவியருடன் திருவிளையாடல் செய்யும் கடவுட் கூட்டம், என்ற எண்ணங்கள் மாறி ஆண்டவன் ஒருவன், அவன் உருவமற்றவன் என்ற உண்மை துலங்கலாயிற்று.

—●—

திராவிட நாடு

காஞ்சி] 21—7—46 [ஞாயிறு

விழா!

தமிழகம் விழாக்கொண்டாடுகிறது, களிப்புடன், பெருமையுடன். தனது அருமருந்தன்ன புதல்வனின் வெற்றி கண்டு பூரிப்படைகிறது. தமிழர் எங்கும் தலைநிமிர்ந்து நடந்து, எமது கவிஞரின் விழா காண வாரீர் என்று அன்புடன் அழைக்கின்றனர். எந்த நாட்டிலும், இத்தகைய விழாக்கள், அடிக்கடி நடைபெறாது; வாழ்நாளிலே, இவ்விதமான விழா ஒருமுறை, இருமுறை ஏற்படக்கூடும். பல தலைமுறைகளுக்கொரு முறை மட்டுமே, இத்தகைய விழாவினைக் காணும், நாடுகளும் உள. நம்நாடு, மற்ற நாடுகளைவிட, இத்துறையில், முன்னணியிலுள்ளது. எழிலும் திறனும், வளமும் செயலும் நிரம்பிய நாடு. "வாழ்வின் அலைகட்கு அஞ்சா நாடு," இயற்கையின் இன்பச் சோலை, வீரர் கோட்டம், கற்புடை மாதரின் பொற்கோட்டை மட்டுமல்ல; நம்நாடு, கவிதா மண்டலம். இதன் வனப்பு, கவிதா உள்ளத்தைக் கிளறக்கூடிய விதமாக அமைந்திருக்கிறது. இங்கு வானிடம் உறவு கொண்டாடும் மலை உச்சிகள், தேனிடை தோய்த்தெடுத்த செந்தமிழ் நடையில், பலரைப்பாமாலைதொடுக்கப்பணித்திட்டன. ஆறுகள், கலை உள்ளத்தில் ஊற்றுப்பெருக்கெடுத்தோடும் வண்ணம் செய்தன. சாலையும் சோலையும், அவை தம்மில் உலவும் மாந்தரும் மயிலும், கவிதையை வழங்கும்பண்பினைத் தருபவையாயின. கடலைத்தொட்டுமுத்தமிடும் ஊர்களும், ஆறுகளை மாலைகளாகக் கொண்ட அணிபுரிகளும், மலைக்கோட்டை கொண்ட இடங்களும், ஆங்கெலாம் வதியும், ஆற்றல் மறவரும் அவர்தம் அழகு மகளிரும், வீரக் கழலொலியும், மதலையர்குதலையும், மாதரின்மதுரமொழியும் பிறவும், மாண்பினைமீறு மகிழ்ச்சியைத் தந்து, எங்கும் கவிவாணர்கள் உலவிடும் பெருமைக்குரிய நிலையைத் தந்தது—எனவேதான் வேறு பலநாட்டினர் விழித்தெழா முன்பு இங்கு, சங்கம் நிறுவியிருந்தனர், புலவர்கள் அரசோச்சு பவனை ஆள்வோராயினர், அறிவும் அழகும் பின்னிக்கொண்டுள்ள அருங்கவிதைகளை இயற்றினர். தமிழகம், வெண் மணற்பரப்பில் தண்நிலவொளிவீசியதுபோன்றகாட்சி தந்தது. அது ஓர் நாள்.

இடையே வந்தது இடர். இருள் புகுந்தது, இடரின் துணைகொண்டு. மன மருள் மிகுந்தது. மதிமறைந்தது, முகிலிடை மதியென! மன்னர்கள்கோலாகலராயினர்! புலவர்கள் பூஜாரிகளாயினர்! பிறகு மக்கள், மனவளம் கெடாது வேறென்ன விளையும்? பச்சை மாமலையைக் கண்டு பா பாடியது போயிற்று! பவளவாய்ப் பெண்ணினைப்பாராட்டிய பாடல் குறைந்தது! குழந்தையின்கொஞ்சுமொழியும் குறுநடையும்பிறவும், கவிதைகட்கேற்றகருத்தாக அமையும் நிலையும் போயிற்று! வீரன் கைவாள், அவன் மார்பின் வடு, இவைபற்றிய நினைப்பு குறைந்துபட்டது. பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய்க் கமலச் செங்கண், அச்சுதா, அமரர் ஏறே! என்பனபோன்ற பஜனைப்பாடல்களைப், புலவர்கள் இயற்றலாயினர். தமிழகத்தின் மாண்பு, ஆரியக்கற்பனைக்கு வாழ்க்கைப்பட்டு, வகை குன்றிப் போயிற்று.

கிழக்கு வெளுக்கலாயிற்று! ஒளியின் கீறல்கள் மெள்ள மெள்ளத் தலை தூக்கலாயின. தாளச் சத்தமும் மேளமுழக்கமும்மிகுந்திருந்த போதிலும், புரட்சிக்குரலொலியும், கிளம்பலாயிற்று. விண்ணை நோக்கி நின்ற கண்கள், மீண்டும் மண்ணை நோக்கலாயின. மக்கள்மீது மீண்டும் சிந்தனை சென்றது. தமிழ் வென்றது!

அந்த வெற்றி விழாவே, நாம் குறிப்பிடுவது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கட்குத் தமிழகம் இதுபோது அளிக்கும் 'பொற்கிழி" ஒரு தனி மனிதருக்குக்காட்டும் அன்பு, ஆதரவு, மதிப்பு மட்டுமல்ல, கலைத்துறையிலே, மீண்டும் மக்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்துவிட்டது என்பதனை உணர்ந்து உள்ளம் மலர்ந்து, அந்த வெற்றிக்கு அளிக்கும் விழாவுமாகும். இதனைநாம், "புதிய காலம் பிறந்தது" என்பதைக் காட்டும், களிப்புக்குரிய விழாவாகக் கருதுகிறோம்.

விழா, பலவகை. வீழ்ந்துவணங்கும் விழா, வியந்து வணங்கும் விழா, கூவி மகிழும் விழா, கும்பலில் கூடுவிழா, கொஞ்சி மகிழும் விழா, எனப்பல உண்டு. திருவிழா, பலன் கோரிப் பரமனை வேண்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மன்னரின் பொருட்டு நடைபெறும் விழாவில், மக்களில் ஒருவன் எனினும் நமக்கெலாம் மன்னனானான்! அவன் பொன்னுடையைப் பாரீர்! பட்டத்துக் குதிரையின் புதிய சேணம் காணீர்! பவனி அழகைப் பாரீர், என்று வியந்துகூறி, கோல்கொண்டோனுக்குமரியாதைகாட்டுவது, சட்டதிட்டம் என்பதனால், வணங்குவது நடைபெறுகிறது. வீரன், வெற்றிபெற்று நாடு திரும்பும்போது, களம் காணாதாருங்கூட, வர இருந்த ஆபத்தை ஒழித்தான், வாகை சூடினான் நாட்டின் பெருமையை நிலை நாட்டினான் என மகிழ்ந்து, அவன் புகழினைக்கூவிடும் விழா நடைபெறுகிறது. மணவினையிலே கும்பலில்கூடி மகிழ்கிறோம். கொஞ்சி மகிழ்கிறோம், காதல் கைகூடியதால் ஏற்படும் விழாவில்! கவிஞருக்குக் காணிக்கை செலுத்தும் விழா, இவை அத்தனையையும் மிஞ்சிடும், அளவுக்கு நெஞ்சில் இடம் பெறுகிறது! வெற்றி விழா களிப்புத்தரும், ஆனால், பல உயிர் பறிகொடுத்து, பலர் உறுப்பிழந்து, பிறகு கிடைத்தது வெற்றி என்பதனால், அந்தக் களிப்புக்குப் பிறகு கவலையும் உண்டு! முற்றும் மகிழ்ச்சி என்பதில்லை! ஈசனைத் தொழுது விழாக்கொண்டாடி, மகிழ்வோம், ஆனால்மோசக்காரன்

வாழவும் நல்லவன் நாசமாகவும் காண்கிறோமானதால், விழாவின் போது, சித்தத்தைச்சிவன்பாலோ அவர் பொருட்டு எழும்சக்தத்தின் பாலோ விட்டோமெனினும், பின்னர், மிகவிரைவிலே, சித்தத்தைச் "சலிப்பு" சிறை கொள்கிறது. மன்னர் பொருட்டெழும் விழாவிலே, மகிழ்ச்சி உண்டு, ஆனால், அதனுடன் அச்சமும் கிளம்பும்! மணவினையிலே, மனத்தாங்கல் எழுவதுண்டு; மார்பில் பூசிய சந்தனம் உலரா முன்னம், மனையிலே சினமும் சிறு சச்சரவும்பிறப்பதுண்டு. காதல் விழாவிலே, கண்மூடித் திறப்பதற்குள் "ஊடல்" உண்டாகும்! 'அவ்விழாக்களில், மகிழ்ச்சி நிச்சயம் உண்டு, ஆனால் முற்றும் மகிழ்ச்சி என்று துணிந்துரைக்க முடியாது. கவிஞர் விழா, தனி இன்பம் நல்குவது.

கோரிக்கொள்ளாமல் கிடைத்த பலன், கோல்காட்டாது செலுத்தும் அரசு, மனைதோறும் நடைபெறும் மணவிழா, கவலையற்ற காதல் விழா! பலவகை விழாக்களிலேஉள்ள'இன்பங்கள்'இதிலே உண்டு; அவைகளிலே காணப்படும் குறைகள் கிடையாது! மாற்றுக்குறையாத பசும்பொன், மாசு இல்லாத மணி, கவிஞர் விழா!

நமது நாட்களிலே, இத்தகைய விழா நடைபெறுவதும், அதிலே பங்குகொள்ளும்வாய்ப்புக்கிடைத்திருப்பதும், உண்மையிலேயே ஓர் பேறு.

அறிஞரை மறந்து, வீரரைஇகழ்ந்து, கவிஞரைக் கவலையில் ஆழ்த்தி, கலையைப்படுகுழியில்வீழ்த்தி,வைதிகத்தை வாழ்க்கைக்குத் துணையாகக்கொண்டு, வாடிய மலரோ, படர்ந்துபோகும் விளக்கோ, விழியற்றவனிதையோ, என்ற பலரும் தமிழகத்தைக்கண்டு மனவேதனை அடைந்தனர். 'இல்லை' என்றுதமிழ்நாடு கூறுகிறது! துயில் இல்லை! பண்பை இழக்கவில்லை! கவிஞரைக் கைவிடவில்லை! காரிருளைப் போக்கிடக்கலையைப்பணித்திடும் செயலைச் செய்யப் பின்வாங்கப் போவது இல்லை! என்று தமிழகம் முழக்கமிடுகிறது. தமிழகம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குத்தரும், இருபதனாயிரம் வெண்பொற் காசுகள், ஒவ்வொன்றும், பாடும் சிந்து இதுவே!!

அருள் மழைபொழிபவர், அம்பிகை உபவாசி, அறுமுகன்மீது அகவல் இயற்றியவர், காவிலேதிரிசூலக்குறி பொறிக்கப்பட்டவர், நாகத்தைக் காகமாக்கியவர், நரியை நாமாவளி பாடச்செய்தவர், என்பதல்ல, இவருக்கு விழாக் கொண்டாடுவதற்குக்காரணம்.

தில்லை மூவாயிரவர் திருநீற்று மகிமையோ, எல்லைக்காளிக்குஎழு சீரடியில் நூலோ, இயற்றினதற்கல்ல, அவருக்குத் தமிழகம் விழா கொண்டாடுவது.

வட்டிநாட்டுவேந்தரோ,பித்தபுரி பூபதியோ,அல்ல, அவருக்குவெண் பொற்காசுகள் வழங்குவது.

நாட்டு விடுதலைக்கான போர் ஆர்வம் என்ற சூழ்நிலையில் உள்ளவர் என்பதல்ல, தமிழகம்பாராட்டுவதற்குக்காரணம்.

மக்களில் ஒருவராக இருந்து,மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், மக்கள் முன்னேற்றத்துக்கான கருத்துகளை, மக்களுக்கு மகிழ்ச்சியும் மனஎழுச்சியும்மலரும் வண்ணம், மக்கள் மன்றத்திலே 'மக்கள் கவிதையை' மழையெனப் பொழிந்ததற்காக, மக்கள்காட்டும் மரியாதை, மக்கள் தெரிவிக்கும் மகிழ்ச்சி, மக்கள் வழங்கும்பொற்காசு! நான்கணா நல்கிய நண்பர்களையே நாம் முதலிலே பாராட்டுகிறோம், நடுக்கடலிலே நாவாயில் பணிபுரியும் ஏழைத்தமிழன் நான், என்று அன்பு மொழியுடன் கலந்து ஒரு ரூபாய் அனுப்பிய நண்பர்கள் பால், நெஞ்சம் நெகிழ்ந்து செல்கிறது; கிடைத்தது எட்டணா, எனினும் பெறுக, என்று கூறி அனுப்பியவர்கள், ஆகியோரை மிகவும் பாராட்டுகிறோம். அவர்களின் தொகையின் அளவு சிறிது ஆனால், எவ்வளவு ஆழ்ந்த அன்பு அவர்களை, அதனையேனும் அனுப்பித்தீரவேண்டும் என்று எண்ணச் செய்தது என்பதை நோக்கும்போது,மகிழ்ச்சியால் நமது அகமும் முகமும் மலர்கிறது. வண்டு மலர் தோறும் மொண்டுவரும் தேன், துளி துளியாகத்தான்! தமிழர் தந்தபணமும் அத்தகைய முறையிலேயே அமைந்திருக்கிறது.பெருமைக்குரியபொற்கிழி இதுவே.

தமிழகத்திலே, சாதாரணமாக ஒரு 'பொற்கிழி' தயாரிக்கப்படுகிறதென்றால், ராஜா சர் அண்ணாமலையாரின் புன்னகையும், சர். அழகப்பாவின் அருளும், குமாரராஜாவின் குளிர்பார்வையும், கோலாகலச் சிற்றரசர்களின் சிரிப்பும், இருந்தாக வேண்டும், என்ற ஓர் நிலை இருந்தது; அது, இதுபோது குலைந்தது.இவர்கள்யாரும்,இதிலே பங்கு கொள்ளவில்லை! எதிர்பாராத இன்பம்! வரலாற்றில் இடம்பெறத்தக்க வெற்றி!!

இந்நிதிவிஷயத்திலே மற்றுமோர் வெற்றியும் கிட்டியது; இதிலே கட்சிக் கட்டுகள் உடைபட்டுப் போயின!

இந்த மகத்தான வெற்றி, எதனைப்பாடி? எத்தி எத்தித் தொழுவோம்பாமே! பார்த்திபன்கனவில் பாவையும் நின்றாள்! என்ற பஜனை பாடியல்ல! வெள்ளைப்பரங்கியை விரட்டிடக்கூடிடுவீரே!என்றதேசியம் பாடி அல்ல! மக்கள் ஏற்கனவே போற்றிவந்தஎண்ணங்களையே ஆதரித்துப்பாடி அல்ல! அவர்களை, 'மூக்கின்மேல் விரல் வைக்கச்செய்த' கவிபாடி! 'யார் இக்கவி?' என்று புலவர் குழாம் கோபித்துக்கேட்கும் தன்மைவாய்ந்தபாடல்கள்பாடி! வெற்றியின் முக்யத்துவம் இங்கேதான் அதிகம்! மக்களுக்கு மதி புகட்டினார்கவி! அதற்கு நிதி தந்தனர்!தமிழகத்தில் மட்டுமல்ல, தரணியில் பல்வேறு இடங்களிலேயும், மதிபுகட்டுபவருக்கு மக்கள் நிதி தரும் வழக்கம் கிடையாது, விரட்டி வதைக்கும் வழக்கமே இருந்தது. இவரிடம் முடியவில்லை! இவர் அதற்கு அஞ்சுபவரல்ல என்பதை அவரதுவிழியும் மொழியும் விளக்கமாக்கிவிட்டன. மறைத்துப் பார்த்தனர், முடிய

வில்லை! மாற்றுத்தேடினர், கிடைக்கவில்லை! காலத்தின்கூற்று என்றும் நேற்றுவந்துநாளை போகும்நேர்த்தி என்றும், கீர்த்திக்குக் காவலராகத் தம்மைத்தாமே கருதிக்கொண்டோர் எண்ணி அவரை, அலட்சியப்படுத்திப் பார்த்தனர், முடியவில்லை. அவர்களையும் அறியாமல், அவர்பக்கம் சென்று நின்றனர்! வீரன், தனது படைவரிசையிலே இருந்த சோர்வைப்போக்கிஎதிரிப் படையினை முறியடித்துப் பெற்ற வெற்றிபோன்றது பாரதிதாசன், தமிழகத்தின் பாராட்டுதலைப் பெற்றுள்ள சம்பவம்.

புரட்சிக் கவி பாரதிதாசனுக்கு தமிழகம் தனது அன்பினைத் தெரிவிக்கப் பொற்கிழி அளிக்க முனைந்தது கேட்டு, போரினால், தாக்கப்பட்டு ஜப்பானியஆட்சியினால்நசுக்கப்பட்டு பஞ்சமும் பிணியும் வாழ்க்கையை வாட்ட, தாயகத்தைப் பற்றிய ஏக்கம் தூக்கத்தைக் கலைக்க துயருற்றுக் கிடந்த நிலையிலும், மலாய் வாழ் தமிழர்கள் தமிழ்க் கவிஞரைத் தாமும் போற்ற, பாராட்டக்கடமைப்பட்டிருப்பதை எண்ணி, துள்ளி எழுந்து, வெண்பொற்காசுகளை மனமுவந்து வழங்கினர்.

25—11—45ல் சிங்கப்பூர், கின்சாங் வீதியில் உள்ள தமிழ் நூல் நிலயத்தில் தோழர் பழனிவேல் அவர்கள் தலைமையில்நிருவப்பட்ட வசூல்கமிட்டியார், வழங்கிய அன்பளிப்புக்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பிடத்தக்க மற்றோர் உதவி, சக்தி நாடகசபை உரிமையாளர்தோழர் டி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் மூலம் கிடைத்தது. நாடக வசூல் தொகையாக ஓராயிரத்துக்குமேல் அனுப்பிவைத்த அன்பரை நாம் பாராட்டுகிறோம். காஞ்சி தங்கவேலர், கவிஞருக்குப் பொன்னாடை அளித்திட முன்வந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், அவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தகைய வெற்றி விழாவிலே, அவருடைய மாண்புகளையும், அவர் போற்றும் கருத்துகளையும் அது போன்ற கருத்துக்களைப் பரப்பிய, பண்பினரைப்பற்றிய குறிப்புகளையும், தொகுத்து இந்த இதழை, நமது காணிக்கையாக, விழாக் கொண்டாடும் தமிழ் நாட்டுக்குத் தருகிறோம். வாழ்க பாரதிதாசன்! வாழ்க திராவிடம்!

(19-ம் பக்கத்தில்)

பாரதிதாசன் நிதி அளிப்பு விழா

இடம் :— சென்னை சைனுபஜார், பச்சையப்பன் மைதானம்

நாள் :— 28—7—46, மாலை 4 மணிக்கு

தலைவர் :— நாவலர் எஸ். எஸ். பாரதியார்

இசை அரசு தேசிகர்

இசை அரங்கு

குளிக்கரை பிச்சையப்பா

அறிஞர் பலர் சொற்பொழிவாற்றுவர்

அன்பர்கள் திரண்டு வருக!

"எல்லாரும் ஒரு தடவை
கை தட்டுங்கோ.
தட்டமாட்டிங்களா? பரவாயில்லே!"

வெறும் நகைச்சுவைப் பேச்சல்ல, அல்லது திரைப்படத்துக்காக மட்டுமே தீட்டப்பட்டவாசகமல்ல. இது, நகைச்சுவை மன்னன், தோழர் என். எஸ். கிருஷ்ணனின், உள்ளத்தின் படப்பிடிப்பு; அவர் வாழ்க்கையிலே, கொண்டுள்ள வழிகாட்டி. நண்பர்கள் புடைசூழ நகை குலுங்க, நாளெல்லாம் விழாவாகக்கொண்டாடிவாழ்ந்தவர். இன்று? விவரிக்க நமக்கு வேதனையாடஇருக்கும். அவரோ, "பரவாயில்லே" என்றபாணியிலே தான்இருப்பார். ஏனெனில், அது வெறும் வாசகமல்ல, அவருடைய உள்ளம்.

நகைச்சுவை, என்றதுறையைப்பலர் பலவிதத்திலே பலகாரியத்துக்குப் பயன்படுத்திப் பல்வேறு வகையான பலனைப் பெற்றனர்; இதுவரை ஒருவராவது, நகைச்சுவையை, நாட்டுமக்களுக்கு நற்கருத்துகளைப் புகுத்தும் கருவியாக்கியதில்லை, அதன்பயனக நடிகர் உலகில் நடுநாயக மணியாக மட்டுமல்ல, நாட்டுச் சிந்தனைச் சிற்பிகளின் முன்வரிசையிலே முக்கியமான இடமும் பெற்றதில்லை; அவரைப்போல, நம்மைச்சிரிக்கவைத்தவர்களுமில்லை; அவர்போல்வேறயாரும் நம்மை இதுவரை அழவைத்தவர்களுமில்லை. அன்று தமிழகம் விட்ட கண்ணீர், ஊற்று நிலையை அடைந்துவிட்டது. தமிழகம், நடிகர்களைப்பாராட்டி இருக்கிறது, பழக்கமான மொழியில் கூறுவதென்றால், சொர்ணாபிஷேகம் செய்திருக்கிறது; ஆனால் நடிகருக்குஇடுக்கண் வந்தபோது கண்ணீர் சொரிந்தது இல்லை. கிருஷ்ணன்—பாகவதர் சம்பவத்தின்போதுதான், ஒரு பெருங்கூட்டம், கட்சி முதலிய கட்டுகளையும் தாண்டிக் கண்ணீர் விட்டது.

என். எஸ். கே. வெறும் நடிகர் மட்டுமல்ல, அவர் ஒருசின்னமாகவிளங்கினர். எங்ஙனம் பாரதிதாசன், கவிதை உலகிலே புரட்சி புகுந்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டும் சின்னமானரோ, அதுபோலவே நகைச்சுவைத் துறைஎன்பது நாட்டுமக்களைச் சிரிப்பூமூட்டும் 'வெறும் வெட்டிவேலை என்ற நிலையைவிட்டுக் கடந்து, நற்கருத்துக்களை மிக 'இலாவகமாகப்' புகுத்தும் நிலை பிறந்துவிட்டது என்பதை விளக்கும் சின்னமாக என். எஸ். கே. விளங்கினர். சீர்திருத்தக் கருத்து எனும் சூரணத்தைத் தேனில் குழைத்துத் தந்தார் நாட்டுமக்களுக்கு.

என். எஸ். கே.

அதனைத் தந்ததுகூட, தாய் அன்புடன் தன் குழந்தைகளுக்கு மருந்தூட்டுவது போன்ற பக்குவமான முறையிலே!

கோணல் சேட்டைகள் செய்து மக்களைக் குலுங்கக் குலுங்க நகைக்கச்செய்தனர்; கண்ணுக்குமேலே சுண்ணம் பூசியும் வாய்சுற்றிச் சிகப்புச் சாயம் பூசிக்கொண்டும், வளைந்து நடந்தும், திக்கிப் பேசியும், தடுக்கிவிழுந்தும், தலைகீழாக நடந்தும், மக்களைப் பல நடிகர்கள், வயறுவெடிக்கும்படிச் சிரிக்கச் செய்திருக்கின்றனர். வயறு வெடிக்கும்படித் தான் அவர்களால் செய்ய முடிந்ததே யொழிய பதிய கருத்து டகுத்தமுடியவில்லை

"வயறுவலி தாங்க முடியவில்லையப்பா!

"ஏன்?"

"நேற்றிரவு நாடகத்திலே, பபூன் பக்கிரி, செய்தகாமிக்,இருக்கிறதே,அடடா, ரொம்ப ஜோர்"

"என்ன செய்தான் பபூன்?"

"அடே யப்பா! எத்தனை சேஷ்டைகள் தெரியுமோ! அனுமார் வேஷக்காரன் வந்தான் ஸ்டேஜுக்கு; பபூன் பின்னோடு வந்து, வாலை எடுத்துத் தன் மூக்கில் திணித்துக்கொடு தும்ம ஆரம்பித்தான்—தும்மினான் தும்மினான் பத்து நிமிஷம், கொட்டகையே அதிர்ந்து போய்விட்டது! ஜனங்கள் சிரித்துச் சிரித்த வயற்றுவலி வந்துவிட்டது. ரொம்பத் தமாஷ் செய்தான். நாய் போலக் குலைக்கிறான், அப்படியே அசல் நாய் போலேயே இருந்தது"

இவ்வளவுதான், மக்கள் தாம் கண்ட காமிக் கைப்பற்றிப்பேச முடிந்தது, என். எஸ். கே. யின், வருகைக்குமுன்ட. அவர் வந்ததும், அந்தத் துறையிலே, இருக்கும் அற்புதமான ஆற்றலை மக்கள் உணர முடிந்தது. அவர்கள் சிரித்துவிட்டு, மறந்துவிடக்கூடியதாக இல்லை, சிரித்துவிட்டு, அத்துடன் சில புதிய கருத்துக்களையும் உடன் அழைத்துக் கொண்டு சென்றார்கள்!

"சின்ன வயதிலே கன்னித்தமிழிலே
சொன்னான் ஒரு பாட்டு
என்று போடுறயே வேட்டு
கல்விகற்றுத் தேற முன்னம்
கவி எழுதிட வருமா?
கட்டுக் கதைகளை விட்டுத்
தள்ளடா
தூட்டு வெளிப்படுமே!

என்று 'பூம்பாவை"யில் கிருஷ்ணன் பாடினர்; நாம்கேட்டோம், சிரித்தோம்; சிரித்தோடு நின்றுவிடவில்லை, சிந்தித்தோம்," "உண்மைதானே, கல்வி கற்றுத் தேரு முன்னம் கவி எழுதிட வருமா?" என்று நம்மை நாமேகேட்டுக் கொண்டோம், 'முடியாது!" என்று நமக்கு அறிவு கூறுகிறது. உடனே, மறுநிமிடம், "சரியான கேள்வி கேட்டானப்பா!" என்று வாய்விட்டுக் கூறுகிறோம் நம்மையும் அறியாமல்; மறுபடியும் ஒரு முறை சிரிக்கிறோம்! உண்ணும் போது சுவை தரும்பண்டம் பல. உண்டான பிறகு, நெடுநேரம் வரையிலே, உமிழ் நீர் உள்ளே செல்லும் போதெல்லாம், சுவைதரும் பண்டம் சில! அத்தகைய நகைச்சுவையைநாட்டுமக்களுக்குத் தந்தார் கிருஷ்ணன். நாட்டுமக்களின் நிலைமை உயர்ஜாதிக்காரரின் உளப்போக்கு, தொழிலாளியின் துயரம், ஜாதி பேதத்தால் உண்டாகும் மனப்போக்கு, இவைகளை விளக்கினர். புனிதமான கொள்கைகள் என்று மக்கள் கருதும்பல எண்ணங்கள், வெறும் பாட்டு அல்லது பொருளற்றவை என்பனபோன்ற பலப்பல புத்துலக அமைப்புக்கான கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்தூட்டிய நற்காரியத்தை, வெறும் கோமாளிச் சேட்டைக்கு மட்டுமே பயன்பட்டுவந்த, நகைச்சுவை நடிப்பத்துறைமூலம், நாட்டுக்குச் செய்துவந்தார். நகைச்சுவைத் துறையை இத்தகைய சீர்திருத்தமேடையாக்கிய நடிகர்கள், இங்கு இதுவரை தோன்றினதில்லை, மேனாட்டுக்காமிக் நடிகர்களிலேகூட, ஹெரால்ட் லாயிட், பஸ்டர் கீடன், லாரல் அண்டு ஹார்டி, ராபர்ட் உல்சி, போன்ற புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர்கள்கூட, வெறும் பொழுது போக்குக்கான விளையாட்டுகளைக் காட்டுபவராயினரே தவிர, "போதனை" செய்பவர்களாகவில்லை. ஓரளவுக்கு, சார்லி சாப்ளின், சிற்சில படங்களில், சிறப்பாக "சிடிலைட்" போன்ற படத்திலே, கருத்துகளைத் தருவதற்குக் "காமிக்" துறையைப் பயன்படுத்தினர்.மற்றவர்கள்,பெண்ணென்று எண்ணி ஆணை முத்தமிடுவது வழுக்கி விழுவது, சாமர்த்தியமாக எதிரியை ஏய்த்துவிடுவதுபோன்ற 'காமிக்'குகளைச் செய்தவர்களேதவிர,என்.எஸ்.கே.வைப் போல,'ஆண்பெண்ணும் ஒண்ணு அதை

அறியாதவன் மூளை அது களிமண்ணு'' என்று காரமருந்தை இனிப்புப்பூச்சுடன் கலந்து, நாமாக வாங்கி அதனை ஒன்றுக்குப்பத்தாக உள்ளேபோட்டுக்கொள்ளக்கூடிய விதத்திலே நகைச்சுவைநடிப்பைச்செய்ததில்லை. தமிழகத்திலேமட்டுமல்ல, கொஞ்சம் சிந்தனையைச்செலவிட்டால், "இந்தியாவிலேயே" இந்தநகைச்சுவைத்துறையை இதமாகச் சீர்திருத்தம் புகுத்தும் கருவியாக்கிய காமிக் நடிகர் வேறு கிடையாது என்பது விளங்கும். கணக்கெடுத்து அந்த அளவைக்கூறமுடியாதே தவிர, அவருடைய 'காமிக்' கண்டதன்மூலம், புதிய, சீர்திருத்தக் கருத்துகளை ஒப்புக்கொண்டவர்களின் தொகை ஒரு மேடைப் பிரசங்கியின் பிரசாரத்தால் திருந்தியவர்களின் தொகையை விட அதிகம் என்று தைரியமாகக்கூறலாம். சீர்திருத்தக் கருத்துகளை கண்டன உருவிலே காட்டாமல்,வேடிக்கைப்பேச்சின்மூலம் புகுத்திய முதல் நடிகர் என்பதால், நாட்டைப் பண்படுத்தப் பாடுபட்ட, கவிஞர்கள், பேச்சாளர், எழுத்தாளர், ஆகியோரின் வரிசையிலே, N. S. K. எனும் நடிகரும் நிச்சயமாகஇடம் பெறுகிறார். கவிஞர்,எழுத்தாளர்,சொற்பொழிவாளர்கள் ஆகியோரின் பணியினால் விளைந்த பலன்போலவே, நகைச்சுவை மன்னனின் பணியினாலும்பெரும் பயன் விளைந்திருக்கிறத என்பதை,நாடு இன்று ஏற்றுக்கொள்ள மறுக்கலாம், ஆனால் உண்மையான 'எடை போடும் நாள் வரும்போது, நாடு, இந்தத்தொண்டின் மதிப்பைச் சரியாகக்குறித்தேதீரும் இன்றுங்கூட எங்காவது நாம் குளத்தங்கரைப்பக்கம் போனால், அங்குயாராவது வைதிகப்பிராமணர் சந்தியாவந்தனத்திலே ஈடுபட்ட வண்ணம், சுற்றுமுற்றும் பார்த்தால், 'உத்தமபுத்திரன்' கவனத்துக்கு வாராமற்போகாது!

"நன்னா இருக்கா! அழகா! இலக்ஷ்ண்மா, பிராமணப்பெண்போலவே இருக்கா'' என்று கிருஷ்ணன் கூறுவது நம் செவியிலே விழுவதுபோ[illegible]க் கேட்கிறதல்லவா! அசல் அய்யங்கா[illegible] வீட்டுஅம்மா போல மதாம் நிற்பதும் [illegible]பேந்தப்பேந்த விழிக்கும், 'ஆத்துக்காராரை' பார்த்து 'அரிஜன சேவை செய்கிறீ[illegible]ா, அரிஜன சேவை'' என்றுஇடித்து[illegible]றுவதுமான காட்சி தெரிகிறதல்லவா! [illegible]வெறும்நகைச்சுவையா அது! நாட்டு நிலையின் படிப்பிடிப்பு அல்லவா! சிரித்துவிட்டு மறந்துவிடமட்டுமா அவருடைய நடிப்பு பயன்பட்டது? நமது நெஞ்சிலேஇடம்பெற்றுவிட்டதே! ஜாதிச்சிக்கலைப்பற்றிய பேச்சு வரும்போதெல்லாம், எப்படி நாம் 'சாலிவாகனனை' மறக்கமுடியும்.

"உப்பு கரிக்கிறது
மிளகா உரைக்கிறது
தண்ணீர் குடித்தால் நெஞ்சு
அடைக்கவில்லை,
சந்தேகமிருந்தா சாப்பிட்டுப்
பாருங்கோ, சமயல் ரெடியாக
இருக்கு''

என்று அந்தப்படத்திலே, பாடத்தை எவ்வளவு பக்குவமாகப் புகுத்துகிறார். எப்படி இதனை வெறும், நகைச்சுவை என்று கருதமுடியும்! பாட்டாளியின் துயரைப்படம்பிடித்துக்காட்டும், பண்பு, அவர் நடித்த 'சகுந்தலை'யில் பார்க்கலாம்.

"ஐயா! ஆத்திலே, நாங்க
ஆத்திலே தூண்டிபோட்டு
அதிலே ரெண்டுமீன் கிடைச்சா
அரைவயத்துக் கஞ்சிக்காகும்
கடவுனே
குடும்பம், ஆலாப்பறக்குதடா
கடவுளே!''

என்ற பாடலை N S.K. பாடிக்கேட்டிருக்கிறீர்கள். அப்பாடலில், எவ்வளவு உருக்கமாக, பரதவர்குல மக்களின் பரிதாபகரமான வாழ்க்கையைப்படம்பிடித்துக்காட்டுகிறார்! பரிதாபநிலைமை பாடலுடன் தோய்ந்து வருகிறது, நமது மனதைவிட்டு அதனைப் பெயர்த்தெடுக்க முடியாத நிலைமையில், இடம் பெற்று விடுகிறது. எந்தப்படத்திலும், ஏதாவதொரு புதிய, முற்போக்கானகருத்தைப் புகுத்தும் பணிபுரிய அவர் தவறியதில்லை. மூலக்கதை புராணமாக இருப்பினும் சரியே முடிந்தமட்டும், தமது 'தொண்டு' அதிலே இடம் பெறச்செய்து விடுகிறார் திறமையாக; சுவை துளியும் கெடாத விதத்திலே.

நகைச்சுவைத்துறையின்மூலம் நாட்டு மக்களுக்குநற்கருத்தைப்புகுத்தியவெற்றிகரமான பணி அவருடைய "கிந்தனார்'' அதிலே கிண்டல் அல்ல, பாடம் அருமையாக இருக்கக்காணலாம். கல்வித்துறையிலே பழங்குடி மக்கள்முன்னேறினால், ஜாதிச்சனியனின் பிடியிலிருந்து விடுபடலாம் என்ற கருத்தை "கிருஷ்ண பாகவதராகி,'' "கிந்தனாரில் கூறினார். கதைமட்டும் அல்ல நாடுகேட்டது; கருத்தையும் உட்கொண்டு விட்டது. சிறைவாசம் ஏற்பட்டிராவிட்டால், நாடு இன்று, அவருடைய "நீலகண்டர்'' மூலம், புத்துலக ஆக்கத்துக்கான புரட்சிக்கருத்துக்களைக்கேட்டு இன்புற்றுப் பயனும் பெற்றிருக்கக்கூடும்.

"பண்டாரப்பரங்கள் வேஷம் பறந்து போச்சுதுபார், தெண்டாயுதபாணி,பரங்கிரிசெந்தூர், பழனி, திருப்பதி பண்டாரப்பரங்கள் வேஷம் பறந்து போச்சுது பார்'' என்ற பாடலைக்கேட்டு இரசித்து அந்த "ரசனை''யுடனேயே புரட்சிக்கருத்தையும் உட்கொண்டிருக்க முடியும்நாம் அனைவரும்.

இவ்விதமாக, யாரும் இதற்குமுன் கையாளாதமுறையை, நெடுங்காலமாக இருந்துவரும் நகைச்சுவைத் துறையில் புகுத்தி வெற்றி கண்டதுடன், அந்த வெற்றியின் மூலமாகவே, நாட்டுச்குநற்கருத்துக்களைப் புகுத்தும் நற்தொண்டு புரிந்த , புரட்சிபரப்பிய பெருமக்கள்வரிசையி[illegible] அவர் இ[illegible]ம் பெற்றார்என்பது மட்டுமல்ல, அந்த முறையைப் பின்பற்றித்தீரவேண்டிய நிலைமையை நடிகர் உலகிலே உண்டாக்கிவிட்ட காரணத்தால், அந்த நற்காரியத்துக்கு பலர் முன்வரவும் செய்துவிட்டார். அதாவது ஓர்சூழ்நிலை உண்டாக்கிவிட்டார். நகைச்சுவைத்துறையிலே அவர் ஆற்றியஅரும் பணிக்கு எதையாவது ஈடாகக் கூற வேண்டுமானால், புரட்சிக்கு முன்பு, பிரான்சிலும், ரஷியாவிலும்,கவிஞர்கள், எழுத்தாளர், பிரசங்கிகள் நடிகர்கள்ஆகியோர், உண்டாக்கிவைத்தசூழ்நிலையைத் தான் குறிப்பிடமுடியும். இந்த அரும் பணியினை அவர் திறம்பட ஆற்ற உறுதுணையாக இருந்து வந்தவர் கொங்கு நாட்டுக்கவிஞர் உடுமலை நாராயணக்கவி. அவரும், இந்த அரும்பணியில் சரிபங்கு கொண்டு பணியாற்றிய மதுரம் அம்மையாரும் மட்டுமல்ல, நாமும் நாட்டிலே நற்கருத்துபரவ வேண்டுமென்ற ஆர்வத்தால் தூண்டப்பட்ட இலட்சக்கணக்கானமக்களும், நகைச்சுவை மன்னர், மீண்டும் நாட்டுக்கு நகைச்சுவைத்துறை மூலம் பணிபுரியவேண்டுமென்பதற்காக, அவரை என்று நம்மிடை பெறுவோம் என்று எக்கமுற்று இருக்கிறோம்.

சோவியத்தில் கலையின் சோபிதம்

தொழிலரசு அமைத்த சோவியத்ரஷியாவிலே, கலை உணர்ச்சியே அருகிப் போய்விட்டது என்று, முதலாளித்வ அரசுகள் முணு முணுத்தன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? கலை, காசுபறிக்கும் யந்திரமாக்கப்படாமல்,மக்களின் மன மகிழ்ச்சிக்கும், முற்போக்குக்கும் பாடுபடும் அபூர்வமான முறையாக்கப்பட்டது. சிறுவர் சிறுமியர் கண்டு களிப்பதற்கென்றே பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள சினிமாக்கள், ரஷியாவில் இப்போது 1400 உள்ளன. இந்தப்பெருமை உலகில் வேறு எந்த நாட்டுக்கும் இல்லை.

காண்டேகார்

கண்ணுக்குத் தென்படுவதுதான் அரிதாக இருக்கிறது. குடி, கூத்தி, பந்தயம், போட்டி, இவ்வெல்லாத் துர்ப்பழக்கங்களுக்கும் வேர் இந்தப் பணவிசனமே. வேறுபாட்டுக்குக் காரணம் பணம்; தன்னலத்துக்குக் காரணம் பணம்; உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களுக்கும் காரணம், விரல்விட்டு எண்ணக்கூடிய சில பேர்களின் கையில் உருளும் இந்தப் பணந்தான். இன்றைய உலகத்திலுள்ள பணம் சிறு குட்டையில் தேங்கிய நீரைப்போலல்லவா இருக்கிறது? குடிப்பதற்கு இந்த நீர் உபயோகம் இல்லை. மாடுகளுக்கு உபயோகம் இல்லை; ஊர்ந்து செல்லும் சது சதுப்பான விஷக் கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்றாக வளர்கின்றன. இந்தக் கிருமிகள் பரவிய உடனே, இதன் அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்கள் நொடி நேரத்தில் பொட்டுப்பொட்டென்று சாவதில் வியப்பு ஏது?' என்று கேட்கிறார் காண்டேகார். மனிதனல்ல, யந்திரம்! பிறருக்குப் பயன்படும் யந்திரம்! என்று பாட்டாளி உலகுக்கு அறிவித்து, அவர்களைப் புரட்சி உருவினராக்கும் பணியினை அருமையாகச் செய்கிறார். வாழ்வு பொய்யல்ல, நிஜம்! வாழ்வு மாய்கையல்ல, நல்லது பெறச்சந்தர்ப்பம், வாழ்வுக்கு இரு நரம்புகள், ஒன்று தொண்டு மற்றொன்று அன்பு, இவை இரண்டும் மீட்டப்படுவதால் வாழ்க்கைக் கீதம் கிளம்பும், ஆனால் அந்த இன்னிசையை அனுபவிக்க முடியாதபடி, சமூகத்திலே இருபரம்பரைகள், இரு துருவங்களிலே இருப்பதால், வாழ்வு வெறுங் கோயிலாகி, களிப்பு, கருகிய மொட்டாகி விடுகிறது, மக்கள் சுகம்எங்கே? என்று தேடி அலைகிறார்கள், எங்கும் எரிநட்சத்திரமே காண்கின்றனர், புயலும் படகும்போல சுயநலமும் இலட்சியமும் மோதுவது காண்கின்றனர்—இதுவே காண்டேகாரின் கருத்து. உஷா, ஆனந்தன், முத்தண்ணா, கருப்பன், என்று பலப்பல கதாப் பாத்திரங்களை நம் முன்கொண்டுவந்து நிறுத்திவைத்து அவர்களைக்கொண்டு, கூறவைக்கும் கருத்து, இவைகளே. கதாபாத்திரங்கள் அவ்வளவும், காண்டேகார் அமைக்கும், மேடைமீது ஏறி நின்று, புரட்சி முழக்கம் செய்யும், பிரசாரகர்கள்!

இவ்வளவு கொடுமைகள் இருந்தும், ஏன் இந்தமக்கள், பிறரால் சுரண்டப்பட்டு, சுருண்டு போகிறார்கள்? ஏன் புரட்சி உணர்ச்சி தோன்றவில்லை? இதேகேள்வி நமக்குப் பலதடவை தோன்றுகிறதல்லவா? இதுவரைக் கலைத்துறையின் காவலர்களாக இருந்தவர்கள், "இதெல்லாம் கர்மம்" என்றனர், சிலர், வெறும் மனப்பிராந்தி என்றனர், புரட்சிமுரசுகொட்டவில்லை. ஓடப்பர் ஒப்பப்பர் ஆகவேண்டும் என்று புரட்சிக்கவிபாடினார் பாரதிதாசன். அவ்விதமே, உரைநடையில் கூறுகிறார் காண்டேகார்.

புரட்சி செய்ய வேண்டியதுதான், கொடுமைகள் பொடிபட, புதுஉலகுதழைக்க. ஆனால் அவர்களால் முடியாது, என்றுகாண்டேகார், உள்ளம்உருக்கும்முறையிலே எடுத்துக்கூறி, அவர்களால் முடியாது என்பதனால், கைகட்டிக் கொண்டு வாய்பொத்திக்கொண்டு நீஇராதே, இந்தப்பணி உன்னுடையது, மகத்தானவேலை உன்முன் இருக்கிறது, என்றுநமக்கெல்லாம் அறிவுறுத்தும் முறையில் கூறுகிறார்.

"புரட்சிசெய்வதற்கும், போரும் சச்சரவும் நிகழ்த்திஅதில் வெற்றி பெறுவதற்கும்வேண்டிய தைரியம் இவர்களிடம் ஏது? தம்வேலைக்காரர்கள் பயங்கொள்ளிகளாக இருப்பதற்குவேண்டிய முயற்சிகளையே எஜமானர்கள் எப்போதும் செய்து வருகிறார்கள். கஷ்டப்பட்டு வாழும் இந்தமனிதர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிவதில்லை. மனிதனின்விதி அவனுடைய தலைஎழுத்தில் இல்லை. அவனுடைய புஜபலத்தில்தான் இருக்கிறது என்றவிஷயம் இவர்களுக்குப் புரிவதில்லை. ஆண்டவனுக்கு எப்போதாவது நம்மீது இரக்கம் பிறக்கும் என்ற பைத்யக்கார ஆசையும் இவர்களைவிட்டு விலகுவதில்லை. அப்படி இருக்க, எந்தச்சமூகத்துக்காக நாம் செத்துச்சுண்ணாம்பு ஆகிறோமோ அந்தச்சமூகம் நாம் உயிர் வாழ்வதற்குரிய சாதாரணமான சுகங்களைக்கூட நமக்கு அளிப்பதில்லை, என்பதைப்பற்றிக் கிளர்ச்சி செய்யும் அறிவு இவர்களுக்கு எங்கிருந்து வரும்?

"மிதிபட்ட ஜனங்களைவிழிக்கச் செய்வது, மனிதர்கள்என்றமுறையில் அவர்கள் தமக்குஉரிமையானவற்றைப் பெறுவதற்காகச் சச்சரவும் நெருக்கடியும் போரும் விளைவிக்கவும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தார்போல், அப்போர்களிலே தங்கள் உடல்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவர்களைத் தயார் செய்வது, எவ்வளவு பெரியவேலைகள், நம் தலைமுறைக்கு இருக்கின்றன." என்று கூறுகிறார்.

இவ்வளவு விளக்கமாகக் கூறினாலும், நம் நாட்டு மேதைகள் 'கல்வி பரவினால், எல்லாப்பிணியும் அகலும்' என்று கூறுகிறார்களல்லவா! காண்டேகார், அவர்களையும் விடவில்லை, கல்விவரட்டும், என்றுகாத்திருந்து பயன் இல்லை, கல்வி வராதபடி ஒருதடை இருக்கிறது என்று காட்டுகிறார்.

"கல்வி என்பது தண்ணீர்! அதைச் சமூக விருட்சத்தின் வேரில் ஊற்றினால் நம்வேலை ஆகிவிட்டது என்று நினைத்தேன். ஆனால் இந்த மரத்தின் வேரிலுள்ள ஜாதித்துவேஷமும், பேதபுத்தியும் பணத்துக்கு அடிமைத்தனமுமாகிய புழுக்களா அதை வளரவிடப் போகின்றன? இந்தப்புழுக்கள் சாக வேண்டும். அவற்றைக்கொல்லவேண்டும்.' என்றுகூறுகிறார். இனிஎன்ன வேண்டும், காண்டேகார். மராட்டியபாரதிதாசன், உரை நடைப் பாரதிதாசன் என்று உவகையுடன் கூற.

'வாழ்வின் அலைகட்கு அஞ்சாநாடு
எங்கள் தந்தையர் நாடே!'

மாஜி கடவுள்கள்

பானஸ் (Paunus)

இங்கே சனிபகவான் இருப்பதுபோல்,கிரேக்கநாட்டிலே சாட்டர்ன் என்றோர் கடவுள். அந்தக்கடவுளின் பேரப்பிள்ளை பானஸ். பானஸ் வயல்கள், ஆடு மாடுகள் இவற்றின் ரட்சகன், என்று கொண்டாடப்பட்டு, கடவுளாகக் கும்பிடப்பட்டார், லாட்டியம் தேசத்தில்.

பைடிஸ் (Fides)

சொன்னசொல்தவறாத குணத்தைக் கடவுளாக்கி,பைடிஸ் என்ற பெயரில் ரோம் நாட்டவர்கள் வணங்கினர். இந்தக்கடவுளுக்கெனத்தனிக்கோயில் கட்டித்திருவிழா நடத்திவந்தனர்.

ப்ளோரா (Flora)

தோட்டங்களின் தேவி, மலர்களின் மாதா, ப்ளோரா. ரோம் நாட்டவர் இப்படி ஒரு கடவுளையும்வழிபட்டுவந்தனர்.

ப்ரியர் (Prear)

நார்வே ஸ்வீடன் காடுகளின்கடவுள், ப்ரியர். வெளிச்சம், மழை, முதலியவற்றைத்தந்து, சாந்திசுபிட்சம் சகலமும்தரும் கடவுளாகப் ப்ரியரைக் கும்பிட்டனர்.

ப்ரிகா Frigga)

நார்வே நாட்டுக் கடவுள். பூமாதேவி, என்று இங்கு புராணத்தில், கூறப்படும் கடவுள்போல, அந்த நாட்டுக்குப் ப்ரிகா, இந்தக் கடவுளை, ஓடின் Odin என்றகடவுள்கலியாணம் செய்துகொண்டார்.

காட் (Gad)

அதிர்ஷ்ட தேவதை என்று பாபிலோனிய மக்கள் காட் என்ற ஒரு கடவுளை, வணங்கி வந்தனர்.

டிமிடர் (Dameter)

பூலோகத்திலும், மேல் உலகிலும் உள்ள சகல ஜீவராசி களுக்கும் மாதாவாக, டிமிடர் என்ற ஒருகடவுளைக் கிரேக்கர்கள் கொண்டாடி வணங்கி வந்தனர்.

இஸ்கால்பியஸ்.

கனிமீடிஸ் (Ganymedes)

கிரேக்கக் கடவுளான ஜூவஸ், பூலோகவாசியான கனிமீடிஸ் என்ற அழகான வாலிபனைக்கண்டு அவனிடம் மையல் கொண்டு, அவனைக் கடவுளாக்கி தன்பக்கத்திலேயே இருக்கும் படிச்செய்துவிட, கனிமீடிஸ் கடவுளாகி, ஜூவஸ் என்ற கடவுளுக்குப் பானம் ஊற்றித்தரும் பணியை மேற்கொண்டு வரலானான்.

ஹாதார் (Hathor)

தேவலோக ராணியாக ஹாதார் என்ற கடவுளை, ஈஜிப் நாட்டவர் வழிபட்டு வந்தனர்.

ஹிபி (Hepe)

கிரேக்கக் கடவுள் ஜூவசுக்கு மகள் ஹிபி, † அழகி, ஹிபியும் ஒரு கடவுளாகவே வணங்கப்பட்டு வந்தாள். கிரேக்கவீரன் ஹெர்குலிஸ் இறந்து மோட்சலோகம்வந்ததும் ஹிபியை மணம் செய்துகொண்டான்.

ஹிகேட் (Hecate)

பூலோகம், தேவலோகம், நரகலோகம், ஆகிய மூன்று இடங்களிலும் அதிகாரம் செலுத்தி, எண்ணற்ற பிசாசுகளை ஏவலராகப்பெற்று, மூன்று தலைகளுடன் விளங்கிய, பராக்கிரமக்கடவுளாக, கிரேக்கர்கள் ஹிகேட் என்னும் தெய்வத்தைத் தொழுது வந்தனர்.

ஹெயிம்ட்லர் (Heimdler)

நார்வேநாட்டுக் கடவுளரில் ஒருவர். தேவலோக வாசற்காவல் இக்கடவுளின் வேலை. அங்கு, வானவில்தான், பாலமாக அமைந்திருக்கிறது. ஹெயிம்ட்லர் ஒளிதரும்கடவுள் புல் முளைக்கும்போது உண்டாகும் சத்தம்கூட இந்தக் கடவுளின் காதிலேவிழுமாம். ஹெயிம்ட்லர் எனும் கடவுளுக்கும், லோகி என்னும் கேடுசெய்யும் கடவுளுக்கும் அடிக்கடி போர்நடக்குமாம். கடைசியில், ஒருவரைஒருவர் கொன்று கொண்டனர். இரண்டு கடவுள்களும் இறந்தனர்.

ஹெல் (Hel)

நார்வே நாட்டுத்தேவதை. கேடுசெய்யும் லோகிஎன்னும் கடவுளின்குமாரியான ஹெல். மரணத்துக்கு அதிபதி.

ஹீரா (Hera)

கிரேக்கக் கடவுளான ஜூவசுக்கு, ஹீரா தங்கை. தங்கையையே ஜூவஸ் கலியாணம் செய்துகொண்டார். ஜூவசுக்குமானிடர்மீது இருந்துவந்த அன்பு, ஹீராவுக்குப்பொறாமையையும் கோபத்தையும் ஊட்டவே, ஜூவசின் குழந்தைகளை, ஹீரா கொடுமை செய்தாள்.

ஹேர்மீஸ் (Hermes)

நம்நாட்டு நாரதர்போல, கிரேக்கர்களுக்கு, ஹெர்மீஸ். ஜூவஸ்என்ற கடவுளுக்கு மாயாஎன்றதேவதைமூலம் பிறந்த ஹெர்மீஸ் என்றகடவுள், தேவர்களுக்குத் தூதனாகவும், தந்திரமிக்கக் கடவுளாகவும் இருந்துவந்தான், என்று கிரேக்கக்கதைஇருக்கிறது. இறக்கை கொண்ட தலையணியும் செருப்பும்தரித்துக் கொண்டிருப்பதாகக் கூறுவர்.

ஹெஸ்ப்பரிடிஸ் (Hesperides)

ஹீரா, ஜூவசைக் கலியாணம் செய்துகொண்டபோது, சீதனமாகத்தரப்பட்ட, பொன்ஆப்பில் பழங்களைப்பாதுகாக்க ஏற்பட்ட தேவகன்னியர்கள் ஹெஸ்ப்ரிடிஸ் என்பவர்கள். இவர்களையும் கிரேக்கர்கள் தொழுதுவந்தனர்.

ஹைஜியா (Hygea)

கிரேக்கர்கள், ஆரோக்கிய தேவதையாக, ஹைஜியாவை வழிபட்டு வந்தனர். இந்தக்கடவுள், கன்னி. கையில் ஒரு கோப்பையுடன் இருப்பதாகவும், அந்தக் கோப்பையிலிருப்பதை ஒருபாம்பு பருகுவதாகவும், சித்தரித்துள்ளனர்.

ஹைமன் (Hymen)

கலியாணக்கடவுள், கிரேக்கருக்கு, இந்தஹைமன். இந்தக் கடவுள் அபாலோ, கடவுளின் மகன்.

(14-ம் பக்கம் பார்க்க)

காண்டேகார்

கலை அறுக்க; கலை ஓர் கருவி, கால வேகத்தையும்மீறக்கூடியது, அதனை நாட்டுப்பெருங்குடிமக்களின்வாழ்வுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, திட்டத்தோடு, வேலை செய்கிறார், இந்தக் கலாசிரியர். ஆகவேதான் இவருடைய கதைகளிலே, 'ஜீவசக்தி' ததும்புகிறது; எழுச்சிக்கு வழி காட்டும் எழிலுடை ஏடுகளாக உள்ளன.

கதை, வெறும் பொழுதுபோக்குக்காகக் கட்டப்படும், சிலநிகழ்ச்சிகளின் தொகுப்புஎன்பதைமட்டுமல்ல, காண்டேகார் மாற்றியது, புதுக்கருத்துக்களைத் தாங்கும் புரட்சிஏடுகளை, இக்கதைகளின் மூலம் தந்திருக்கிறார். கதைகளிலே, அவர் காட்டும் பாத்திரங்களின் பண்புகள் அவ்வளவும், வாழ்க்கையிலே நமக்கு ஏற்படும் மனப்போராட்டங்களை விளக்கும் சித்திரங்களாக உள்ளன. காதலால்உருகிய கன்னியர், கட்டுக்கு அடங்காத காளை, கபடத்தால் உயிர் வாழ்பவன் என்று பலவகையானவர்களை எத்தனையோ கதாசிரியர்கள் தத்தமது ஏடுகளிலே, காட்டியுள்ளனர். அவைகளைப்படிக்கும்போது, 'ஏன் பத்மா இப்படிப் பதைத்தாள்? சேகர் ஏன் இவ்வளவு சஞ்சலப் பட்டான்? குமாருக்கு இவ்வளவு குரூரகுணமா?' என்றுகேள்விகள் படிப்பவர் மனதிலே எழுமேயொழிய, அந்தச் சூழ்நிலையிலே யார் இருப்பினும் இப்படித்தான் நடந்தேறி இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுவது இல்லை. காண்டேகார், சூழ்நிலை, நமக்கு உண்டாக்கும் எண்ணங்கள் உள்ளனவே, அவைகளையே, பாத்திரங்களாக்கிக் காட்டுவதால், கதை உண்மையில் கருத்தோவியமாகிறது.

காண்டேகார் புதுமையைவிரும்புபவர்; புதுமையின் பளபளப்பை அல்ல, அதன் ஆழ்ந்தபாடத்தை; அவருடைய முயற்சி அவ்வளவும், திறமை முழுதும், முன்னால் ஏற்பட்ட எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், ஆகியவற்றை முறியடித்து, மனிதத்தன்மையின் மேன்மையைஉயர்த்தவேண்டும்என்பதுதான். அவருடையகதாநாயகிகளின் கண்ணீர்காலடியிலோ அல்லது பூஜா பாத்திரங்களிலோ பெரும்பாலும் விழுவதில்லை; ஆணின் ஆணவம் என்னும் தீயை அணைக்கவே, சிந்தப்படுகிறது. பிரபஞ்சம் மாயை என்று கூறும் பழைமை வாதிகளைக் காண்டேகார், ஆணித்தரமாகக் கண்டிப்பவர். பொதுவாகவே சமூக அமைப்பு முறையிலே, மிகப் புரட்சிகரமான மாறுதல்வேண்டும் என்பதற்கான போர்முரசு, காண்டேகாரின், கதைகள்.

சுகம் எங்கே? என்று கேட்டால் ஏழை செல்வவான், உயர் ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற பேதங்கள் ஒழிந்து, ஆண், பெண்ணை அடிமை கொள்ளும் பழக்கம் ஒழிந்து, மக்கள் நிம்மதி அடைகிறதன்மை இருக்கிறதே, அதுவே சுகம்!—பெண்களின் வாழ்க்கையை, குடும்பப் பெரியவர்கள் சிக்கலுள்ளதாக்குவதைக்காண்டேகார் மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார். மராட்டிய நாட்டிலே, இவருடைய மறுமலர்ச்சிதரும் ஏடுகள் போற்றப்படுவதுபோலவே தமிழ்நாட்டிலும், இவருக்குப் பாராட்டுதல் வளர்ந்துவருகிறது.

வாழ்க்கை! இது, மதவாதிகள், வேதாந்திகள் மட்டுமல்ல கலைவாதிகளும் மறக்கவேண்டிய ஒன்று, என்பது, ஓர் வைதீகக் கோட்பாடு. அனேகருடைய அபூர்வமானதிறமை, வாழ்க்கையைப்பழிக்க, உதாசீனப்படுத்த, அதன் மாய்கை, மோசம், நிலையாமை ஆகியவற்றை வற்புறுத்தவே பயன்பட்டது. காண்டேகார், புரட்சி எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்தவர்; உரைநடை பாரதிதாசன், ஆகவே அவர், "வாழ்க்கை"யைப்பற்றி விளக்க, அதிலே வரக்கூடிய சிக்கல்களைத் தெரிவிக்க, அந்தச் சிக்கல்களின் காரணத்தை அறிவிக்க, அவைகளைப்போக்கும் மார்க்கத்தைத் திட்டத் தமது திறமையைப் பயன்படுத்துகிறார்.

"வாழ்க்கை என்பது ஒரு புஷ்பம். அந்தப்புஷ்பத்தின் உயிர் எது? வண்டைக்கவரும்பொழுது மயங்க வைக்கும் மதுத்துளியா? சே! அது அல்ல! ஒவ்வொரு விநாடியும்காற்றலைமீது குதித்து ஓடும் மதுரமான நறுமணம்' என்று, காண்டேகார், எரிநட்சத்திரம் எனும் நூலில் எழுதி இருக்கிறார்.

வண்டை மயங்கவைக்கும் மது போன்றது வாழ்விலே மக்கள் கொள்ளும் பிரேமை—இதுவேதாந்திகள் கூற்று; வாழ்வை வெறுக்க வேண்டுமென்று உபதேசிக்கும் போக்கு; மலரிலே மது இருப்பது போல, வாழ்விலே, மயக்கமூட்டும் தன்மைமட்டுமே இருப்பதாக வேதாந்திகள் கூறுவர். மலரின் முழுப்பயனையும் கண்டறியாதது போலவே வாழ்வின் முழுத்தன்மையையும் அவர்கள் கண்டறியாது கூறியபேச்சு அது. அவர்களின் உரை, மேதைகளின் பதிமொழி

விபரீத வியாபாரம்

அரசு, அமைதியாக நிரந்தரநிலைபெறவேண்டுமானால், மிதமிஞ்சிய செல்வமும் மிதமிஞ்சிய ஏழ்மையும் இருத்தலாகாது. அதாவது பணக்காரர்களும் இருக்கக்கூடாது, ஏழைகளும் இருக்கக்கூடாது. ஏனெனில்இருவரும்பொதுஜன நன்மைக்கு விரோதமானவர்கள். பணக்காரர்கள், கொடுங்கோலர்கள்; ஏழைகள் அந்தக் கொடுங்கோலர்களுக்கு நண்பர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களுக்கும் மத்தியில்தான், பொதுஜனசுதந்திரமென்பது ஏலம் போடப்படுகிறது. ஒரு சாரார், அதாவது பணக்காரர்கள் அதனை வாங்குகிறார்கள், இன்னொரு சாரார் அதாவது ஏழைகள் அதனை விற்கிறார்கள்.

ரூசோ.

என்றுகருதப்பட்டு, கவிதை,கதை, கூத்து, எதுவாயினும் இதே கருத்தினையே பலரும் தீட்டித்தீட்டி, வாழ்வு, வெறுக்கப்பட வேண்டுவதொன்றுஎன்ற எண்ணத்தை மக்கள்மனதிலே பதியச்செய்து விட்டனர். காண்டேர்கார், இந்தஎண்ணத்தை எப்படிச் சாடுகிறார், பாருங்கள். மதுவா, புஷ்பத்தின் உயிர்?– சே! அதுஅல்ல!– என்கிறார். மயக்கமூட்டும் தன்மைதானு வாழ்வின்நோக்கம், விளைவு? செ! அது அல்ல!

வேறுஎன்ன? காண்டேர்கார் கூறுகிறார், "ஒவ்வொரு விநாடியும் காற்றலைமீதுஓடும் மதுரமான நறுமணம்"–புஷ்பத்தின்உயிர்.

பலருக்கு இன்பம்தரும் காரிய மாற்றும்தன்மை,சக்தி, வாழ்வுக்கு உண்டு, அதனைச்செய்தலே, வாழ்வின் நோக்கம், என்பதை அழகாக விளக்கிவிட்டார். வாழ்வுஓர் சுமை அல்ல,வாழ்வுஓர் சந்தர்ப்பம்–பயன்படுத்திக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம். காண்டேர்கார், இந்தக் கருத்தைப்பல இடங்களிலே வலியுறுத்தி இருக்கிறார். வாழ்வு பெரிதல்ல, கலைதான்பெரிதுஎன்றுபேசுபவர்களுக்குக் காண்டேர்கார், நிலமும் ஆகாயமும் என்றஓர் உவமை மூலம் அறிவுறுத்தும் தன்மை, ரசமாக இருக்கும். அவர்கேட்கிறார்,

"வாழ்க்கை என்றல்நிலம். கன்னங்கரிய மேடும்பள்ளமுமான சத்தையும் கூளமும் நிரம்பியநிலம். ஆனல் அதிலிருந்துதான் தானியம்விளையும். கலைஎன்பது ஆகாயத்தைப் போன்றது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்தாலும், பழங்கள் பூமியில்தான் பழுக்கின்றன.

ஆறல் அவைகளைப் ..ங்க வைப்பதுஎது? ஆகாயத்திலிரு ..மழையே பெய்யாவிட்டால்?

ஆகாயத்துக்கு மழை ..கிருந்து போகிறது? பூமியிலிரு.. தானே?" என்னபதில் கூறமுடியு.., வறட்டு வேதாந்தக்காரர்கள்!!

வாழ்க்கையைப்பற்றி முக்யத்துவம் கொடுத்துப்பேசலாம், எழுதலாம்ஐயா! ஆனல்வாழ்க்கை இன்பம் சூழ்ந்ததாக இருக்க வேண்டுமே, அதற்கு என்னவழி? வாழ்க்கையிலேஎப்படி இன்பம்வரச்செய்வது? என்றுகேட்பவர்கள் உண்டல்லவா, அவர்களுக்குக் காண்டேர்கார், வாழ்க்கைக்கீதத்தை விளக்குகிறார், ஓரிடத்தில்.

"வாழ்க்கைச்சங்கீதம் இரண்டுகம்பிகளின் இன்னிசையால் நிறைவப்படுகிறது. ஒன்று தொண்டு; மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக்களிக்கச் செய்கிறது; அன்புமனத்தைக்களிக்கச் செய்கிறது."

இந்தத்தொண்டும் அன்பும்தான், வாழ்க்கைக் கீதத்தின் நரம்புகள்; புஷ்பத்தின்உயிர், நறுமணம்;வாழ்வின் மேன்மையும்,அன்புதொண்டு ஆகியவற்றிலே இருக்கிறது. எவ்வளவு ஆழ்ந்த பொருள் உள்ள கருத்து!

வாழ்க்கைக் கீதத்தை விளக்கிவிட்டு, வெறும்இலட்சியவாதியாக இருந்துவிடவில்லை காண்டேர்கார். இன்றைய சமுகத்தின்நிலை அவருக்கு விளங்காமற் போகவில்லை. இன்று சுகம் அனுபவிப்பவர்கள் யார் என்பதையும் அவர் தெரிந்து கொள்ளாமல் இல்லை. நொந்தமனதுடன், நீங்களும் நானும், வாழ்க்கையின் ரசத்தைப்பருகும் வீணர்களைப்பற்றி என்ன கூறுவோமோ அதனைக்காண்டேர்கார் அழகுபட "சுகம்என்பது ரசவாதிகளின் ரசகுளிகையைப்போல், கிடைப்பதற்கு அரிய ஒரு பொருள். அது கேவலம் கவியின்கற்பனையில் தான் கிடைக்கக்கூடியது. இவ்வுலகில் மனிதத் தன்மைக்கும் சுகத்துக்கும் சம்பந்தமே இல்லை. இவ்வுலகில்சுகமாகஇருக்க வேண்டுபவன்புலியைப்போல் மற்றவர்களின் ரத்தத்தைக் குடிப்பதையே ஆனந்தமாகக் கருதவேண்டும். நியாயம், தியாகம்,கடமை, மனிதத்தன்மை, நாணயம், நம்பிக்கை ஆகியசொற்களை மறக்க முடியாதவன் இந்தஉலகத்தில்சுகம் அனுபவிக்கத் தகுந்தவனல்ல!" என்று கூறுகிறார். ஆஹா! எவ்வளவு சரியானசவுக்கு, பிறர்உழைப்பிலே சுகம்தேடுபவர்களுக்கு.

வாழ்க்கை, ஏழை மக்களுக்கு, பாட்டாளிக் குடும்பங்களுக்கு,எப்படி இனிப்பாக இருக்க முடியும்? சுகம்எது? சுபீட்சம்எது? நெஞ்சுருகும்அந்தநிலைமையைக் காண்டேர்கார் படம்பிடிக்கும் திறமையைப் பாருங்கள். "ஒருகுடிசை வாசலில் காலியான மண்ணெண்ணெய்ப் புட்டியை வைத்துக்கொண்டு ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள்.விளக்கு எரிப்பதற்குக்கூட அவளிடம் எண்ணெய் இல்லை.

மற்றொருமண்வீட்டின் அசுத்தமான முற்றத்தில் ஒருகுழந்தைதட்டிலிருந்த ரொட்டித் துண்டொன்றைக் கடித்துக் கொண்டிருந்தது. அதைச்சாப்பிட்டபின்புதாய் அதற்குத் தண்ணீர் கொடுத்தாள். தட்டில்வேறு ஒன்றும்மிச்சமில்லை. தாய் தண்ணீரைக் குடித்துத் தன் வயிற்றை நிரப்பினுள்.

மூன்றாவதுஇடத்தில் பாதையில் விழுந்துகிடந்த வாழைத்தோலுக்காகஇரண்டுகுழந்தைகள்சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கடைசியில் பெரியமனிதர்களும்வந்து சண்டையில் கலந்துகொண்டனர். அந்தச்சண்டையைத் தீர்ப்பதற்குள் எனக்குப் போதும்போதும் என்றாகிவிட்டது.

மற்றொரு வீட்டில், ஒருகுழந்தைக்குக்கொதிக்குப் ஜுரம். அதன் பெற்றோர்கள் ஆண்டவனை நோக்கிக் கைதொழுதுகொண்டும், களகளவென்று கண்ணீர் வடித்துக் கொண்டும் இருந்தனர்.

ஒருநாய் ஓர்எச்சிலையை வாயில் கவ்விக்கொண்டு போயிற்று. ஒரு பிச்சைக்காரன் அதைத் துரத்திக் கொண்டு ஓடினுன். அந்தநாய் பாவம், இலையைப்போட்டுத் தாவி ஓடியது. பிச்சைக்காரன் அந்தஇலையிலிருந்த எச்சிற் பருக்கையை வாயில்போட்டுக் கொண்டான்."

இவை சுதேசி சினிமா! நாம் நித்த நித்தம் காண்பது! இவைகளுக்குக் காரணம் என்ன? கலாவாணர்கள், ரோஜாமலருவதற்குக் காரணம் கண்டுபிடிக்க முனைந்தனர், "அந்திவானமே! உனக்கு

அழகு தந்த துயார்?" என்றுகேட்க முனைந்தனர், எச்சில் இலை நாயோடு போராடும் மனிதனே! நீ இந்தக் கதிக்கு ஆளானது ஏன் என்று கேட்க மறுத்தனர். கேட்கக்கூடாதாம், கேட்டுவிட்டால் கலைகெட்டு விடுமாம், கேவலம், பிரச்சாரமாகி விடுமாம்! இந்தக் கலாவாணர்களுக்குக் காண்டேகர், சரியாகக் கசையடி தருகிறார்.

அப்பா கலைவாணா! இப்படி வா! உன் கலை இருக்கிறதே, அது எங்கே இருந்து வந்தது? என்று கேட்டுப் பதிலும் கூறுகிறார், கலை கலை என்று கூவுபவர்கள் நாணும்படி.

"தொழிலாளிகளின் வாழ்க்கையில் பாலியம், இளமை, மூப்பு, என்ற படிகளே இல்லை. கைகால்களை அசைக்கத் தெரிந்ததோ இல்லையோ உடனே ஒவ்வொரு ஜீவனும் வேலைசெய்ய ஆரம்பித்துவிட வேண்டும், இந்த வேலை கைகால்களின் அசைவு நிற்கும் வரையில் நடக்க வேண்டியது. செக்கைப் போல உழைக்கவேண்டியது. இந்தச் செக்கிலே எருதுகள் உழைப்பதோடு போவதில்லை. ஆட்டும் கொப்பரைக்கும் எருதுகளைப் போலவே இரத்தமும் மாமிசமும் உண்டு. இதிலிருந்து ஆடி எடுத்த எண்ணெய் எதற்குத் தெரியுமா? கலை என்ன, சாஸ்திரம் என்ன, தர்மம் என்ன, கலைப்பண்பு என்ற— இவற்றை எல்லாம் பற்றிச் சிந்தனைகள் செய்து செய்து கொதித்துப்போன உயர்வகுப்பாரின் மூளையைச் சாந்தமாக்குவதற்கு அந்த எண்ணெய் வேண்டும்.

கூழுக்கே தாளம்போடும் இடத்தில் கலை ஏது? கல்வி ஏது? குழந்தைகள் முதல் கிழவர்கள்வரையில் வேலை செய்துங்கூடச் சாப்பாட்டு நேரத்துக்குத்தகராறுதான். ஆகவே பணம் செலவழித்துக் கல்வி கற்கும் சக்தி எத்தனை பேரிடம் இருக்கும்? இப்படிக்கோடிக்கணக்கான ஜனங்கள் மிருகங்களைப் போலக் காலம் தள்ளுவதால்தான் உயர் வகுப்பினரின் கலையும் சுகபோகங்களும் நடக்கின்றன. சில நோய்களில் நோயாளியைப் பிழைக்க வைப்பதற்காக ஜனங்கள் தம் ரத்தத்தைக் கொடுப்பது உண்டு. தொழிலாளி வர்க்கம் தலை முறை தலைமுறைகளாக உயர் வகுப்பாருக்கு இந்த இரத்தத்தை வேண்டிய மட்டும் கொடுத்துவந்திருக்கிறது. ஆனால் இப்படி இரத்தத்தைக் கொடுத்துக் கொடுத்து இப்போது இதுவே சாக நீட்டிவிட்டது அல்லவா?"

பாட்டாளிகளின் இரத்தமப்பா, உன் காவியம், சிற்பம், ஓவியம், என்பன போன்றவை! கலையின் நிலை பற்றிக் களிப்புடன் பேசுகிறாயே, அந்தக்கலைக்கு தண்ணீர், பாட்டாளியின் பச்சை இரத்தம், பரம்பரை பரம்பரையாக அந்த இனம் கொட்டிய குருதியிலே உன் கலை, முளைத்தது, தெரிந்துகொள், என்று எச்சரிக்கிறார்.

கலாரசிகர்களுக்கு, ஆதவன் உதயம், நிலவின் எழில், மலரின் அழகு, போன்றவைகளில்தானே பிரேமை. அதே, காட்சிகளையே காண்டேகர் காட்டுகிறார், அவர்களுக்குப் பாடம் கற்பிக்க. சுகந்தப் புஷ்பங்களைக் காட்டிக் கூறுகிறார்,

"தொழிலாளிகள் யாவருமே இந்த ஸுரங்கி மொட்டுகளைப் போன்றவர்களே அல்லவா? உலகில் பிறப்பதும் யாருக்காவது தன் உடலிலுள்ள ரத்தத்தைக்கொடுத்து விட்டுச் சாவதுமே அவர்கள் வாழ்க்கை. பூவின் வாழ்விலுள்ள ஆனந்தம் இந்த மொட்டுகளுக்குக் கண நேரமாயினும் கிடைத்திருக்குமா?

படி ஓரணா விலைக்கு இந்தமொட்டுகள் யார்மடியிலும்போய்விழும். நாளைக்கு இவற்றிலிருந்து அத்தர் இறங்கியதும், அதை வாங்குபவன் அஹஹா! அத்தரின் மணம் எவ்வளவுநேர்த்தி! என்று போற்றுவான். அவனுடைய அந்தப் போற்றுதலினால், பலியான இந்த மொட்டுக்களுக்கு என்ன உபயோகம்?"

பிறருக்குப் பயன்பட்ட பரம்பரையில் உதித்த பாட்டாளிகளுக்குத் தங்கள் "சக்தி" தங்களுக்கே தெரியவில்லை அல்லவா? காண்டேகர் கூறும் இந்த வாசகங்கள், அவர்களை விழிப்பும் எழுச்சியும் பெறச் செய்யுமல்லவா! புரட்சி வாடை வீசும் சொற்கள், காண்டேகரின் ஏடுகளிலே ஏராளம். அவை பாட்டாளிகளின் வெற்றிக்குத் தேவையான புது முறுக்குத் தரும் சக்திவாய்ந்தவை.

"உயர் வகுப்பினரின் வாழ்க்கை நிலவுபோலத்தானே இருக்கிறது? இந்த நிலவு பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக, எவ்வளவு சாந்தமாக இருக்கிறது ஆனால் சூரியனே இல்லாவிட்டால் சந்திரனுக்கு ஒளி எங்கிருந்து கிடைக்கும்? ரத்தத்தை நீராக்கும் தொழிலாளிகள் இல்லாமற் போனால் உயர் வர்க்கத்தினரின் சுகபோகங்கள் நடக்குமா? கலை சௌந்தரியம், கலைப்பண்பு இந்த பொற்கலசம் பார்ப்பதற்கு அழகுதான் ஆனால் கீழே கோயில் முழுவதும் உறுதியும் கரடு முரடுமான கற்களாலேயே கட்ட வேண்டி இருக்கிறது. அந்தப் பொன்னைப்போலவே — இன்னும் கேட்டால் அதையும்விட அதிகமாக—இந்தக் கற்களையும் கவனிக்க வேண்டியதுதான்." என்று கூறுகிறார், பாட்டாளிகளின் உழைப்பின் மீதே உன்னதமானது என்று பலரும் போற்றும் கலை கட்டப்பட்டிருக்கும், உண்மையை. புரட்சிக் கவிஞரின், கவிதை மணப், காண்டேகரின் உரைநடையிலே தவழ்கிறது என்று கூறலாம்.

"தொழிலாளி என்றால் உயிருள்ள ஒரு யந்திரம்! இந்த உயிருள்ள யந்திரத்துக்கு உயிரில்லாத யந்திரத்துக்குப்படும் அவ்வளவு அக்கரைகூட யாரும் எடுத்துக் கொள்வதில்லை. அவனுடைய சாப்பாடு, துணிமணிகள் வைத்திடம், மருந்துகள் எல்லாம் எவ்வளவு மோசமானவை! ஏழைமை பரம்பரையாகத் தொடர்ந்துவரும் நோய். இந்த ஒருநோயிலிருந்து தூர்ப்பழக்கம், திருட்டு, துர்ப்புத்தி முதலிய 72 வகையான நோய்கள் உண்டாகின்றன.

பணம் இல்லாதவன் மிருகம்! பணம் படைத்தவன் ராட்சதன். உலகத்தில் உண்மையான மனிதன்

(21-ம் பக்கம் பார்க்க)

★ ஒப்பற்ற கவி ★

'பாரதிதாசன் கவிதைகள்'' என்னும் புத்தகம் தமிழ்நாட்டுக்கு ஒருசிறந்தபொக்கிஷமாகும். இது, படிப்போருக்குக் கவியா வசனமா என்று மலைக்கும்படியான ஓர் அற்புதக்கவித்திரட்டு என்றுதான் சொல்லவேண்டும்.

கவிதைகளின் அமைப்புப்பெருமை இங்ஙனமிருக்க, கவிகள் கொண்ட கருத்துக்களோ முற்றிலும் சமூக சமய சீர்திருத்தக்கருத்துக்களேயாகும். சிறப்பாக மூடநம்பிக்கைகளை யகற்றும்தன்மையில்புரோகிதம், பார்ப்பனியம், கடவுள்கள், பெண்ணடிமை, விதவைக் கொடுமை, ஜாதிபேதம், பொருளாதார உயர்வு தாழ்வு ஆகியவைகளைக் கண்டித்தும், மறுத்தும், அவைகளிலுள்ள சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் வெளியாக்கியும், மிகமிகப் பாமரமக்களுக்கும் பசுமரத்தில் ஆணி அறைந்ததுபோல் விளங்கும்படியும் பதியும்படியும் பாடப் பட்டிருப்பதுடன், கவிநயமோ புலவர்களுக்கு ஒரு நல்ல விருந்தாகவும் அமைந்துள்ள அரும் புத்தகமாகும்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்நாட்டிற்குப் புதியவரல்ல. அவர் சென்ற 10 ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றார். மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும், சந்தோஷ வாழ்க்கைக்கும், இன்றியமையாத புரட்சியான பல சீர்திருத்தங்களை ஆதரிப்பதுமட்டுமின்றி, அவைகளை ஜனசமூகத்தில் பல வழிகளிலும் பரப்பவேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர். சிறப்பாகவும், சுருக்கமாகவும் கூறவேண்டுமானால்பாரதிதாசன் அவர்கள் ''சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி'' என்றுதான்கூறவேண்டும்.''

பெரியார் இராமசாமியின் பெரும்படையின் முன்னணி வீரர் பாரதிதாசன். பெரியார் பெரும் படை பலகளங்களிலே, போரிடுவது. அரசியல்அரங்கம் அதிலே மிகச்சாதாரணக் களம். சமுதாய, மத, பொருளாதாரக் களங்களிலேயே, வேலை அதிகம். ஆனால் இவை அத்தனையையும், ஒருங்கே மயக்கி, கள்ளங்கபடமற்றவரைச் சூறையாட, கலைத்துறையிலே புகுந்தனர் கெடுமதியினர். அவர்தம் அகவலும் வெண்பாவும், புராணமும்இதிகாசமும், பாடலும் கதையும், கூத்தும்பிறவும், முன்னேறிச்செல்லும் தமிழரைத்தள்ளுவதற்காக வெட்டப்பட்டு, பச்சிலையால் மூடப்பட்ட, படுகுழிகளாயின. சாதிச்சனியன் தொலைய வேண்டும், என்ற சண்டமாருதப் பிரசாரம் ஒருபுறம் நடைபெறும், மற்றோர் பக்கமோ, கலை என்ற பெயர்கூறிச்சாதியைநிலைநாட்டுவர் கபடர்கள். கலைத்துறை தமது ஆதிக்கத்தில் இருக்குமட்டும்; பாடுபடும் தமிழரின் கண்ணில் மண்தூவிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை, நயவஞ்சகர்கட்கு இருந்தது. தன்மதிப்பு இயக்கம், தத்தளித்துக் கொண்டிருந்தது இந்தத்துறையிலே இருந்து வேகமாக வெளிவந்தக்கணைகளைத் தாங்கமாட்டாமல். ஒரே ஒருமார்க்கமே இருந்தது கலையைவெறுத்து ஒதுக்குவது; அல்லது கலையின் நிலையைநிந்திப்பது, கலை சுயநலமிகளின் வலைஎன்றுகண்டிப்பது. இது, ஏற்கனவே எஃகுஉள்ளம் கொண்டவர்களுக்குப்போது மானதாக இருந்தது; ஆனால்புதியவர்கள், பாதையின்ஓரத்தில் நிற்பவர்கள், தீர்மானத்துக்கு வராதவர்கள் ஆகியோருக்கு, வெறும்பிரச்சாரம் போதவில்லை. அவர்களை, நேர் வழியிலிருந்து திருப்பிவிட கலை இருந்தது, முற்போக்காளரின் எதிரிகளிடம். பொன்னைஉருக்கி வார்த்ததுபோலிருந்தது, என்ற கலைமெருகுகாட்டி, ஐயருக்குத் தட்சணை கொடுத்துத் தாளில் வீழ்ந்திடும் கட்டத்துக்குக் கலை, தமிழரைஇழுத்துச்சென்றது. தமிழ்மொழியிலே ஆர்வம் அதிகரிக்க அதிகரிக்க, இந்த ஆபத்தும், உடன் வளரலாயிற்று. ஆரியத்தோடு தன்மான இயக்கம் தொடுத்த போரின் பயனாகக், காளிதாசன் கம்பனுக்குஇடமளிக்கநேரிட்டது! பவபூதி இளங்கோவடிகளுக்கு வழிவிட்டுவிலகினர், வடமொழிப்புலவர்கள், அவர்தம் காவியங்கள் முன்வரிசையிலிருந்து நீக்கப்பட்டு, தமிழ்ப்புலவர்கள் ஆங்கு அமர்ந்தனர். தன்மான இயக்கத்தவரின் கண்ணும் கருத்தும், களிப்படைந்தன, காட்சி மாறுவது கண்டு. செந்தமிழ் தழைத்தது. ''மகாஜனங்களே!'' மறைந்து

(9-ம் பக்கம் பார்க்க)

புதிய பேராசிரியர்கள்!

எவ்வளவோ ஜீவராசிகளிலே மனிதன் ஒருவன். ஆனால் எல்லா ஜீவராசிகளையும்விடத் தானே மேலானவன் என்பது அவன் எண்ணம். அதனை, "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற மொழி பலப்படுத்தியும் விட்டது. மாடுபோல உழைக்கிறான்; நாய்போல அலைகிறான்; ஆந்தை போலக் கத்துகிறான்; ஆமைபோல நகருகிறான் என்று கேலி செய்து ஜீவராசிகளை மனிதன் உவமை காட்டுகிறான். குரங்குச் சேட்டை, நரித் தந்திரம், புலிக் குணம், பாம்புப் பல்லன் என்று பலப்பல கூறுகிறான். சில சமயம், மையலில் சிக்கிடும்போது, குயில்போலக் கொஞ்சினாள், மயில்போல ஆடினாள் என்றும் சொல்கிறான். ஆனால் பெரும்பாலும், மனிதனுடைய நினைப்பு, மற்ற ஜீவராசிகளைவிடத் தான் உயர்ந்தநிலை எய்தி இருப்பதாகத்தான். மிருகத்தனம், மிருகப் பிராயம் என்ற சொற்றொடர்களை மனிதன் உபயோகிக்கிறான் கேவலத்தைக் குறிக்க. மிருகங்களுக்கு யார் வக்கீல்! குயிலின் நாதத்தைக் கேட்டு ரசித்தாலும், அதனை யார், கட்டணமாகக்கொண்டு, மனிதச் சமுதாயத்தின்மீது மானநஷ்ட வழக்குத் தொடர முன்வரப் போகிறார்கள்? அவ்விதம் வந்தாலும், நீதிமன்றத் தலைவர் மனிதராக இருப்பின் மற்ற ஜீவராசிக்குப் பிடிக்காது. மனிதனோ மற்ற ஜீவராசி தன்னை விசாரிக்கும் உரிமை பெற்றதாக ஒப்புக்கொள்ளவே மாட்டான். ஆண்டவனை அழைக்கலாம்; அழைத்தால் தந்திரம் தெரிந்த மனிதன் அரைப்பலம் கற்பூரத்தோடு வந்துவிடுவான்; நீதிச் சக்கரம் அப்போது எப்படி உருளுமோ யார் கூற முடியும்!

சிற்சிலர், மற்ற ஜீவராசிகளுக்காக வாதாடி இருக்கிறார்கள், மிருகங்களின் கஷ்ட நிவாரணச் சங்கத்தாரை அல்ல நான் குறிப்பிடுவது; மேதைகள், கவிகள் சிலர், மனிதனிடம் இல்லாத சில அபூர்வ குணங்கள் மற்ற ஜீவராசிகளிடம், மனிதனால் கேவலப்படுத்தப்பட்ட மிருகங்கள், பட்சிகள் ஆகியவைகளிடம் இருப்பதாக எடுத்துக் காட்டியுள்ளனர். மாளிகையின் மனோஹரத்தைப் பற்றிப் பாடிடும் சிருங்கார ரசக் கவிவாணர்களின் கலைக் கண்களுக்கு மயிலும் குயிலும், புறாவும் பிறவும், மாதரின் பண்புகளை விளக்கும் எழிலுருவங்களாகக் காட்சி தருவதுண்டு. காவியங்களிலே இத்தகைய வர்ணனைகள் ஏராளம்; அழகுபடவும் இதுபற்றிக் கூறியுள்ளனர். நான் குறிப்பிடுவது இவற்றை அல்ல. இது, வெறும் மனமகிழ்ச்சிக்குப் பயன்படும்; உவமை அழகை வெளிப்படுத்தும்; நான் குறிப்பிடுவது வேறு. அந்த மிருகங்கள், பட்சிகள் ஆகியவற்றினைக் காட்டி, மனிதருக்குப் புத்தி புகட்டியுள்ளனர் சிலர்; இந்தப் புது முறையையே நான் குறிப்பிடுகிறேன். பழைய முறைதான் உங்களுக்குத் தெரியுமே. கடவுளின் அவதாரமாகக் குரங்கையும், கடவுளின் வாகனமாகக் கருடனையும் சித்தரித்துக்காட்டி இருக்கிறார்கள் காவிய கர்த்தாக்கள். புது முறைக்காரர்கள் இதனைச் செய்யவில்லை; அவைகளைக் காட்டி, மனிதரை இடித்துரைத்துள்ளனர். கவிகள் மட்டுமல்ல, கவி பாடாத மேதைகள் சிலரும் இதனைச் செய்துள்ளனர். மனிதன், மனிதன் என்று பெருமையுடன் மார்தட்டிக் கொள்கிறார்களே, அது சரியா? அவ்விதம் பெருமைப்படக் காரணம் இருக்கிறதா? அவ்விதமான மேல்நிலை அடைந்ததாக எதை ஆதாரம் காட்டமுடியும் என்று கேட்டிருக்கிறார்கள் சிலர்—கொஞ்சம் காரசாரமாகக் கூட.

தமிழ்நாட்டிலே, இந்தப் புது முறையான எண்ணத்தை அழகாக மட்டுமல்ல, ஆழ்ந்த கருத்துடன் உபயோகித்தவர், தோழர் **மா. சிங்காரவேலு** அவர்கள். மறைந்த அந்த மாவீரர், அறிஞர்களின் நூல்களைப் படிப்பதையே தமது பொழுதுபோக்காகக் கொண்டவர். எந்த விஷயத்தையும், காரணத்தோடு விளக்கவேண்டும் என்பதிலே மிக்க அக்கறை கொண்டவர்.

"மனிதன் தனது வாழ்க்கையிலே எந்த விதத்தில் உயர்ந்தவன் என்று சொல்லக்கூடும்? அதிக விரைவில் செல்லுவதற்கு ரயிலும், ஆகாய விமானமும் கண்டுபிடித்தான் என்று சொல்லலாமா? பட்சிகள் மணிக்கு 60, 70 மைல் பறக்கின்றன. மான், குதிரை முதலிய விலங்குகள் மணிக்கு 30, 40 மைல் ஓடும் சக்தியைப் பெற்றுள்ளன. பங்களாக்களிலும், மாளிகைகளிலும் வசிக்கின்றானாம் மனிதன்; ஆனால் பட்சிகள் வெகு நேர்த்தியான கூடுகளில் வசிக்கின்றன. பனி நிறைந்த வடமுனையில் (North Pole) பீவர் (Beever) என்ற ஜீவன் கட்டும் அறைகள், மனிதனால் கட்ட முடியாது. தேன் ஈக்கள் கட்டும் அறைகள், என்ன விசித்திரமானவை!

"ஆயுதங்களை உபயோகிப்பது மனிதன் ஒருவனுக்குத்தானா தெரியும்? கட்டைகளையும் தழைகளையும் குரங்குகள் தங்கள் எதிரிகள் மேல் எறிகின்றன. மனிதன், மிருகங்களைவிட அதிகமாகத் தன் கைகளுக்கு அகப்படும் பொருள்களை உபயோகித்துக் கொண்டானே ஒழிய, வேறுவித விசேஷமொன்றுமில்லை.

"கல்வி கற்பதால் ஏதாகிலும வித்தியாசமுண்டோவெனில், சிறு குட்டிக் குரங்குகளுக்கு அதன் தாய்மார்கள், இதைச் செய்யாதே, அதைச்செய் என்று கற்றுக் கொடுக்கின்றன. பட்சிகள் பறக்க, தங்கள் குஞ்சுகளுக்குப் பறந்து காட்டுகின்றன. எலிக் குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைகள், பூனைக் குட்டிகளுக்குக் கற்றுக்கொடுக்கின்றன. மிருகத்தினின்று பெறப் பெற்ற மனிதன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளுக்கு ஆதாரம் மிருகங்களின் வாழ்க்கையிலிருந்தே சிறுபான்மையாகப் பெறப் பெற்றிருக்கிறான்" என்று தோழர் மா. சிங்காரவேலர் கூறினார். அவருடைய வாதம், அந்த அளவோடு நின்றுவிடவில்லை.

"மனிதன், மிருகங்களைவிடக் கொடியவன், ஏனெனில், வாழ்விலே தீங்கையும உண்டாக்கிக் கொண்டான். அந்தத் தீங்குகள் மூன்று.

1. பொதுவாக உபயோகிக்க வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றையும் தனி உடைமை ஆக்கினது.

2. உபயோகித்து வரவேண்டிய பொருள்களின் மேல் இலாபம் என்ற திட்டத்தை ஏற்றி, இதனை நிலவரி என்றும் குடிவரி என்றும் வழங்கி, பெரும்பான்மையோருக்கு, வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களைப் போதுமானவரை கிட்டாமல் செய்துவருவது.

3. மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைப் பொதுவாக வினியோகித்து வரவொட்டாமல் சிலரே அப்பொருள்களைக் கையாண்டுவருவது.

"இந்த மூன்று தீங்குகளை மனிதன் செய்ததன் பலன், பஞ்சம், பட்டினி, நோய், தொல்லை, கொலை, போர் எனும் இன்னோரன்னபிற கேடுகளையும் புரட்டு, பொய், வஞ்சகம், சூது என்பவைகளையும் உண்டாக்கிவிட்டன. எனவே, மனிதன், மிருகங்களைவிட ஏதோ மகா மேதை என்று ஏன் கூற வேண்டும்?" என்று அந்தப் பெருங் கிழவனார் கேட்டுச் சென்

றார். மணிக்கணக்கிலே, நாட்கணக்கிலே, சிந்தனைக்கு வேலை தரும் அறிவுரைமட்டுமல்ல அது; மமதை கொண்ட மனிதன், வெட்கத்தால் தலையைத் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டிய நிலையை உண்டாக்கும் உரை அது.

* *

அதுபோலவே, **கவிமணி தேசிக விநாயகம்** அவர்கள், மக்களின் வாழ்க்கை முறையிலே உள்ள கேடுகளையும் கொடுமைகளையும் கண்டு கவலை கொண்டு, மனித சமுதாயத்துக்குப் புத்திபுகட்ட எண்ணுகிறார். இதற்குப் புத்தன் மொழி, பூர்வீகப் பெரியவர்களின் மொழி ஆகியவைகளை எடுத்துக் காட்டுவதுதான் சாதாரணமாக உள்ள முறை. ஆனால் கவிமணிக்கு வயது 70 ஆகிறது; காலமெல்லாம் கவி பாடிப் பாடிப் பார்த்தார்; நாட்டு மக்களின் வாழ்விலே உள்ள கொடுமைகள் போகவில்லை. எனவே, "சே! இந்த மனிதர்களுக்குப் புதிய பேராசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும்" என்று எண்ணினாரோ என்னவோ, மிருகங்களை அழைத்து வருகிறார் மனிதனுக்குப் புத்திபுகட்ட, மனிதனைக் கேலிசெய்ய !

"காட்டில் ஓநாயும் நரியும் கடுவாயும் புலியும்
நாட்டு நாகரிகம் கண்டு நகைக்க லாச்சுதையோ"

என்று பாடி இருக்கிறார்.

மிருகங்கள் கண்டு கேலிசெய்து சிரிக்கக்கூடியவிதமாக வாழ்கிறார்கள் நாட்டில் உள்ள மக்கள் என்று கூறுகிறார். மனிதன், மிருகங்களைக் கேலி செய்தான், கவி, மிருகங்களை விட்டு மனிதனைக் கேலி செய்யச் சொல்கிறார் !

சின்னாட்களுக்கு முன்ப, "சுரபி" என்றொரு தோழர் "சக்தி" என்ற தமிழ் இதழிலே, காலஞ்சென்ற மா. சிங்காரவேலர்போல, மனிதனால் பழிக்கப்படும் ஜீவராசிகளின் சார்பிலே, வாதாடிக்காட்டினார். ஆசாமி கொஞ்சம் தைரியஸ்தர் என்று நினைக்கிறேன். ஏனெனில், அவர் வாதாடியது பாம்புக்கு! ஆமய்யா ஆம்.! விஷப் பல்லோடு இருக்கிறதே பாம்பு, கண்டதும் அடிக்கிறோமே, அந்தப் பாம்பின் சார்பிலே வாதாடி இருக்கிறார் இனிய எளிய கவிதை உருவிலே; மறுக்கமுடியாத காரணங்களோடு, பாம்பின்வாயிலாகவே பேசுகிறார். மொழி இனிய தமிழ். கவிதையின் கருத்து இது:

பாம்பைப் பார்க்கிறான் ஒருவன். அவனுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இவ்வளவு கொடிய பாம்பு ஏன் சிருஷ்டிக்கப்பட வேண்டும்? ஏனோ சிருஷ்டித்துத்தான் தொலைத்தாரோ கடவுள், பார்க்கவே அருவருப்பான உருவமாவது அமைத்தாரா, பளபளப்பான உடல் தந்தார் ஏன் என்று கோபம் பிறந்தது. ஆண்டவன் எதிரே வரவில்லை. ஆகவே அவரைக் கேட்க முடியவில்லை. பாம்பினையே கேட்டுப் பார்ப்போம் என்று எண்ணிக் கேட்கலானான். உள்ளே கடுவிஷம், வெளியே கண் கவரும் உடை ! ஏ! பாம்பே! கொடியது செய்யும் உனக்கு ஏன் இந்தக் கோலாகலமான வாழ்வு! என்று கேட்கத் துணிந்தான் ; கேட்கிறான்; கேளுங்கள்:

"பாம்பே, உன்னைப் படைத்தவ ரார்
பளபள வென்றுடல் கொடுத்தவ ரார்
தீம்பா லமுதம் படைத் தாலும்
சீறும் மதியைக் கொடுத்தவ ரார்"

பாலூட்டி வளர்த்தாலும், பாம்பு கடிக்கத்தான்செய்யும்; கடித்தால் விஷம் ஏறத்தான்செய்யும். இதைக் கேட்டான் பாம்பை நோக்கி; இதே கருத்தை வேறு சில கவிதைகள் மூலமும் கேட்கிறான். பாம்பு பதில் கூறுகிறது:

இவ்வளவு சாதாரணமான கேள்வியைப்போய்க் கேட்கிறானே மனிதன் என்ற கோபம் பாம்புக்கு. இருக்குமல்லவா ! எனவே பாம்பு அலட்சியமாகவே பதில் சொல்கிறது.

"உன்னைப் படைத்த உத்த மனே
உலகை வகுத்த பெரிய வனே
என்னை உலகில் படைத்திட் டான்
எழிலார் உருவங் கொடுத்திட் டான்"

என்று.

பாம்புக்குத் தெரியுமல்லவா, மனிதன் தன்னைப் பார்த்துக் கேட்டதற்குக் காரணம் அறியாமையாலே அல்ல, ஆணவத்தால் அவ்விதம் கேட்டான் என்று. எனவே தீர்மானித்துவிட்டது, அவனுக்குச் சுடச்சுடப் பதில் தரவேண்டுமென்று. கூறுகிறது, கேளுங்கள்:

"உள்ளும் புறமும் ஒன் றென்றே
உலகின் தலைவன் நா னென்றே
கொள்ளும் மனிதன் தன்னில் யாம்
கொடியம் அல்லேம் அல்லோமே"

மண்ணிலே நமக்கு நிகர் யார் என்று மமதை கொண்டுள்ளனரே மனிதர், அவர்களைவிட, நாங்கள் ஒன்றும் கொடியவர்களல்ல என்று பாம்பு கூறுகிறது. அது தன் இனத்துக்காகவே பேச ஆரம்பித்துவிட்டது. மனிதன் திகைத்தல்லவா போயிருப்பான். பாம்பு, மனிதனைப் பார்த்து, உன்னைவிட நான் கொடியவனல்ல என்று சொன்னால், மனிதன் என்ன எண்ணுவது!

என்ன தைரியம் ! எவ்வளவு நெஞ்சறிந்த பொய் ! விஷத்தைப் பல்லிலே வைத்துக்கொண்டு திரியும் பாம்பா, இப்படிப் பேசுவது ! என்று மனிதன் எண்ணியிருப்பானல்லவா ? பாம்பு அதனை உணர்ந்துகொண்டது. மனிதனை ஏதோ ஏட்டிக்குப் போட்டியாகத் தூற்றுவது என்று எண்ணியிருந்தால், உன்னை விட நான் ஒன்றும் கெட்டவனல்ல என்று கூறினதோடு பாம்பு ஓடிப்போயிருக்கும். தூற்றவில்லையே பாம்பு, குற்றச்சாட்டு அல்லவா செய்கிறது! எனவே தைரியமாகவே தன் கட்சியை எடுத்துப் பேச ஆரம்பித்துவிட்டது. மனிதன், பதில் கூறமுடியாமல் திணறும்படியான காரணங்களைக் காட்டுகிறது பாம்பு.

"பட்டுடையால் வெற்றுடலை மூட மாட்டோம்
பகட்டான ஆபரணம் பூண மாட்டோம்
சட்டமொடு சாத்திரங்கள் பேச மாட்டோம்
தந்திரமே மந்திரமாய்க் கொள்ள மாட்டோம்.

பஞ்சைகளை அடிவயிற்றில் அடிக்க மாட்டோம்
பரமஉப காரியெனத் திரிய மாட்டோம்
அஞ்செழுத்தும் ஆறெழுத்தும் ஓதமாட்டோம்
அகத்தினிலே பாதகத்தை வளர்க்க மாட்டோம்.

தும்பைநிறக் கதராடை போர்த்த மாட்டோம்
தொண்டரென்றும் பக்தரென்றும் திரியமாட்டோம்
கும்பலிலே கோவிந்தா போட மாட்டோம்
கூசாமல் 'ப்ளாக்மார்க்கட்' பண்ண மாட்டோம்.

இவ்வளவு தூரம் இடித்து இடித்து மனிதன் மூச்சுத் திணறும்படி அடித்துவிட்டபிறகு, பாம்பு கேலியும் செய்கிறது மனிதனை.

"புனிதனவன் தந்த வுடல்தன்னைத் தாங்கிப்
புற்றிடத்தே ஒடுங்கிஉயிர் வாழ்வோம் ஐயா
மனிதனெனும் பிராணியினைக் கண்ட போழ்தில்
மைல்தூரம் பறந்தோடி ஒளிவோம் நாமே"

என்று கூறிற்று பாம்பு.

மோசக்காரன், கபடன் என்று ஆதாரத்தோடு மனிதனைக் கூறிவிட்டுப் போகிறது பாம்பு. மனிதன், என்ன பதில் சொல்வான்? என்ன இருக்கிறது சொல்ல!

பாம்பு, முன்பெல்லாம் கவிகளுக்குப் பயன்பட்ட வகைக்கும், இப்போது பயன்பட்ட விதத்துக்கும் உள்ள வேறுபாடு குறிப்பிடக் கூடியது மட்டுமல்ல, கூர்ந்து கவனிக்கப்படவேண்டியது. ஏனெனில், கலைப் புரட்சியிலே இது ஒரு பகுதி; முறை மாறுகிறது என்பதைக் காட்டுவது, இங்கிலை. இந்தப் புதுமுறைக் கவிதா உள்ளம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் பூத்துக் கனிந்து குலுங்குவதைப் பல இடங்களிலே பார்க்கலாம். ஓர் எடுத்துக்காட்டு. புறாக்களைப் பார்க்கிறார் கவி. பல புறாக்கள் கூடி இரையுண்ணுகின்றன. நம் கண்களுக்கு அவை வெறும் புறாக்கள் தானே! அவர் கண்களிலே தெரிவது புறாக்கள் மட்டும் அல்ல.

> " இட்டதோர் தாமரைப்பூ இதழ் விரிந்திருத்தல் போலே
> வட்டமாய்ப் புறாக்கள் கூடி"

இருக்கும் காட்சி தெரிகிறது. அழகு மட்டுந்தானா தெரிகிறது; அருமையான பாடமும் தெரியக்கண்டு, தெரிவிக்கிறார் நமக்கு.

> " அவற்றின் வாழ்வில் வெட்டில்லை; குத்துமில்லை;
> வேறு வேறிருந் தருந்தும் கட்டில்லை; கீழ் மேல் என்னும்
> கண்மூடி வழக்கமில்லை."

என்று கூறுகிறார். மனிதன், தலையைத் தொங்கவிட்டுக் கொள்ளத்தானே வேண்டும்! கல்லூரிகளிலே, உலகின் வரலாற்றினைப் படிக்கும் மாணவரிடையே கூடவன்றோ, சாப்பாட்டு இடபேதம் இருக்கிறது! இந்தப் புறாக்களைப் பார் மனிதா! **வேறு வேறு இருந்து அருந்தும் கட்டு இல்லை; கீழ்மேல் என்னும் கண்மூடி வழக்கம் இல்லை** என்று ஒரு குத்துக் குத்துகிறார் புரட்சிக் கவிஞர்.

பலர் புறாவைப் பார்ப்பர், ஆனால், பூரிப்புடன் பார்ப்பது அவைகளின் சரசத்தைத் தான்! கவி, அது தெரிந்தவர். தெரிந்து, அந்தக் காதல் ராஜ்யத்திலே உள்ள நீதியைக் காட்டுகிறார், மனிதர் திருந்தட்டும் என்ற எண்ணத்தோடு.

தங்கப் பதுமைபோல் ஒருத்தி தனக்கென்று இருக்கும் போதுகூட, தையற்காரரின் திறமையாலோ, பூச்சுக்காரர் திறத்தாலோ கொஞ்சம் மினுக்குடன் வரும் பெண்ணைக் கண்டால் மனத்தைப் பறிகொடுக்கிற ஆண் உலகுக்கு, புறாவைக் காட்டிப் புத்தி புகட்டுகிறார் கவி.

> " ஒரு பெட்டை தன் ஆணன்றி வேறொன்றுக் குடன் படாதாம்
> ஒரு பெட்டை மத்தாப்பைப் போல் ஒளி புரிந்திட நின்றாலும்
> திரும்பியும் பார்ப்பதில்லை வேறொரு சேவல்!"

என்று கூறுகிறார் கண்ட இடத்தில் கண்ணையும் கருத்தையும் அலையவிடும் காளைகளுக்காக வேண்டி.

" அப்படியே நடந்துவிடுகிறதா? தகாத செயலே நேரிடாமலா போகும்?" என்று கேட்பர் சிலர்; இது தெரிந்து கவி,

> " அவள் தனி; ஒப்பவில்லை;
> அவன், அவள் வருந்தும் வண்ணம் தவறிழைக்கின்றான் "

என்று கூறுகிறார் எந்த நிலையில் " இக்கட்டு " நேரிடுகிறது என்பதை விளக்க. புறா தனியாக இருக்கிறது; நாதனில்லா நேரம்; மற்றோர் புறா, வலியச்சென்று வம்பு செய்கிறது; வருந்தும் வண்ணம் தவறும் இழைக்கிறது. முற்றும் துறந்த முனி புங்கவரின் தர்மபத்னி அகலிகைக்குக்கூட இக்கதி நேரிட்டு இருப்பதாகப் புண்ய கதை இருக்கும்போது, " தவறு இழைக்கும் " நிலை புறாக்களிடை இருப்பது அக்ரமமா! அவை, ஆகமம் பயின்றனவா, யோகம் புரிந்தனவா? அகலிகையாவது, தெரிந்து திகைத்தாள், தடுத்தாள் இல்லை என்றார் ஒரு கவி; மற்றொரு கவி, தெரிந்தாள், மகிழ்ந்தாள் பெருமையுடன் என்று தெரிவிக்கிறார்; புறா தகாத செயல் செய்யும்போது, நமது கவி, அவள் வருந்தும் வண்ணம் அவன் தவறு இழைப்பதாகத்தான் சொல்கிறார்.

"வருத்தமோ, மகிழ்ச்சியோ தவறு தவறுதானே!" என்று நாம் கேட்போமல்லவா? கவி அதற்கும் இடம் கொடுக்கவில்லை; அந்தச் சந்தர்ப்பத்தையும் வீணாக்கவில்லை, மனிதனுக்கு மதி புகட்ட உபயோகித்துக் கொள்கிறார். தகாத செயல் நடந்துவிட்டது. ஏன்?

> " அன்பு தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
> ஒரு சில தறுதலைகள்
> கவலை சேர் மக்களின் பால்
> கற்றுக் கொண்டிருத்தல் கூடும் "

என்கிறார் கவி. இன்னமுமா சூடுதர வேண்டும்? போதாதா!

பட்சிகளைப் பழைய காலக் கவிகள், தூதுபோக, சோலையில் பாட ஆட, சுந்தரிகளின் கூட்டில் தங்க, வைத்தனர்; இது போல், பேராசிரியர்கள் நிலையைத் தந்தது இல்லை. பாம்பு கடவுளருக்குப் பள்ளி கொள்ளவோ, ஆபரணமாக இருக்கவோ, உபயோகிக்கப்பட்டு வந்ததே தவிர, மனிதருக்குப் புத்தி புகட்ட அழைக்கப்பட்டதில்லை. பண்டைக் கவிகள்,

> " நாதர் முடிமேலிருக்கும் நாகப் பாம்பே
> நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
> பாதாளத்தில் குடிபுகும் பைக்குள் பாம்பே
> பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே!

என்று தான் பாடினார்கள்; பாம்பு பாடம் கூறவந்ததாகப் பாடியதில்லை.

புதுப்பாடல் மட்டுமல்ல; புதுமுறை என்பதாலேயே இதனைக் கலைத்துறை மூலம் கருத்திலே தெளிவு புகுத்த வழி ஏற்படவேண்டும் என்று ஆசைப்படும் நாம், வரவேற்கிறோம். பாரதிதாசன், இந்தக் கலைப்புரட்சியின் கர்த்தா. அவர் பாடினார் என்பது மட்டுமல்ல, அத்தகைய பாடல்களைப் பாடவேண்டும் என்ற ஆர்வம் எழச்செய்து விட்டார். கவிதை பாடியது மட்டுமல்ல, அவ்விதக் கவிதா உள்ளம் ஏற்படச் செய்துவிட்டார்.

*   *

புரட்சிக் கவிஞரின், கவிதா மண்டலத்திலே உலவுபவர்களிலே, தோழர் சிவப்பிரகாசம் ஒருவர். அவர், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, இப்புது முறையிலே ஓர் கவிதை இயற்றினார்:

பாம்பு கேலி செய்கிறது மனிதனைப் பார்த்து சுரபியின் பாடலில், 1946 ஜூன் 'சக்தி' இதழில். புதுவைச் சிவப்பிரகாசம் அவர்களின் கவிதையிலே, பட்சிக் கூட்டம் முழுவதுமே சேர்ந்துகொண்டு அவரைப் படாத பாடு படுத்துகிறது. அவர் ஒரு தவறும் செய்யவில்லை. கவிதை எழுதலாம், அதற்கான மனமகிழ்ச்சி பெறலாம் என்று சோலைக்குப் போகிறார். அங்கே, கிளியும் மைனாவும், காக்கையும் இராசாளியும் பிறவுமாகப் பல பட்சிகள் உள்ளன. சும்மா இருந்தனவோ புள்ளினங்கள்! இவரைக் கண்டதும், மனித குலத்தைக், குறிப்பாகத் தமிழரையே தாக்கத் தொடங்கின. தமிழரின் ஜாதி பேதம், மாயா வாதம் பேசும் நிலை, அடிமைத்தனம், மூடப்பழக்க வழக்கங்கள் யாவற்றினையும் கண்டிக்கவும் கேலி பேசவும் முனைந்தன. கேட்டபோது கவிக்குக் கோபம் பிறந்தது. என் தமிழ் இனத்தை இப்பறவைகள் இப்படியா கேலிசெய்வது என்று எண்ணினார்; அவைகளின் வாயை அடக்கப் பதில் கூறத் துடித்தார்; முடியவில்லை. ஏன்? பட்சிகள் கூறியவை அனைத்தும் மறுக்க முடியாத உண்மைகள்!

> "கேவலப் பட்சிகள் கேலி என்னைச் செய்குவதோ?
> வாயை அடக்காமல் நான் சும்மா ஏகுவதோ?
> என்றெண்ணி யானும் பதில்தேடிச் சொல்லுதற்கு
> முன்வந்தேன்; ஆனால் முடியாமற் போயினதே!"

என்று கவி கூறுகிறார். அவர் மட்டுமென்ன, நம்மாலும் முடியாது போலிருக்கிறது அந்தப் பட்சிகள் செய்த கையாண்டிக்குப் பதில் கூற. இதோ அவருடைய கவிதை, பாருங்கள்:

தண்ணறாப் பாயும் தடஞ்சோலை நாடிநான்
பண்ணமைந்த பாவொன் றெழுதுதற்குச் சென்றிருந்தேன்
அங்கோர் மரத்தினிலே ஆரெழிற் புள்ளினங்கள்
தங்கி யிருந்து கலமுரைத்துச் சந்தோஷப்
பேரொலியே செய்து பெருமகிழ்வு கொண்டிருக்கும்
நேரத்தில் என்வருகை கண்டு திடுக்கிட்டுப்
பேச்சை நிறுத்தின, பின்பு சிலநிமிடம்
மூச்சன்றி வேறு முணுமுணுப்பு மில்லை; யங்கே
என்னுளத்தை ஈர்த்த எழிலார்ந்த புள்ளினத்தின்
மென்மொழியைக் கேட்பதற்கு மேடையொன்றில்
யானமர்ந்தேன்.

நேரஞ் சிறிதுசெல நீண்டவால் புள்ளொன்று
'யாரிவன்?' என்றோர் வினவை யெழுப்பிற்று.
நாளெல்லாம் மக்களிடம் நன்கு பழகியுள்ள
நீள்மூக்குக் காகம் நெடுநேரம் பார்த்தென்னை,
'வில்லேந்தி நம்மையெலாம் வேட்டையிடும் வேடனல்ல;
கல்லுளந்தான் பெற்ற கயவனல்ல; கண்ணிவைத்துப்
பற்றிச் செலவந்த பாவியல்ல!' என்றுரைக்க,
'மற்றிவன்யார்?' என்றொரு மைனாப்புள் கேட்டதுவே.
மாடப் புறுவொன்று வாய்திறந்து 'இன்னவன்
மூடநம் பிக்கையில் மொய்த்த தமிழ்நாட்டான்!
ஆயினுந் தன்னினத்தோர்க் காறறிவுண் டென்றுரைத்து
நாயினைப்போல் சண்டையிடும் நாசமுறுங் கூட்டத்தான்!'
என்றுரைக்க, மற்றவைகள் ஈ ஈ ஈ! ஊ ஊ ஊ!!
என்றடக்க மாட்டாச் சிரிப்புச் சிரித்தே,
'இவனா? அவன் இவனா?' என்றுமுறை யாக
அவமானம் பண்ணின! அச்சமயம் ஓர்சிட்டுப்,
'பேதம் நமக்கில்லை; பெண்ணடிமை கொள்வதில்லை
வாதிட்டு மக்களுக்குள் பேதம் பலவுரைத்தும்,
மாதர் தமையடிமை செய்தும் இழித்துரைத்தும்,
நீதுற்று மாளும் சிறுசெயலார் கூட்டத்தைச்
சேர்ந்தோன் இவன்' என்று செப்பிடவே, மற்றவை
ஆர்ந்த ஒலிச்சிரிப்பால் ஆ ஆ ஆ! வென்றனவே.
அவ்வமயம் அன்றிற் பறவைதான் முன்வந்தே,
'இவ்வுலக வாழ்வில்நாம் இன்பம் அடைகின்றோம்;
துன்பம் வெறுக்கின்றோம்; தூயநம் பெண்ணினத்தின்
இன்காதல் நற்சுவையால் என்றும் மகிழ்கின்றோம்!
ஆனால் மனிதர் அதைவெறுத்துக் கண்ணுக்குக்
காணாத ஒருலகங் கற்பித்த சாத்திரத்தைக்
கட்டி யழுகின்றார்; காதற் பயிர்தனையே
வெட்டி யெறிந்தே விதியென்று சொல்லுகின்றார்;
இன்ப வழிகாண மாட்டாமல் எப்பொழுதும்
துன்பத்தைத் தேடித் துயர்கொண் டழிகின்றார்!
அந்த மனிதராம் ஆறறிவுக் கூட்டத்தின்
சந்ததியில் வந்தோன் இவனொருவன்! ஆகையினால்
இந்த நிலையில் இவன்நமக்கு மேலென்றே
எந்த அறிவால் இயம்புவது?' என்றுரைக்கச்,
'சீச்சி! இவன்நிலையைச் செப்பாதீர் மானமற்ற
பேச்சால் மனிதர்கள் மேலென்று பேசிடுவார்'
என்றதுநல் அன்னப்புள்! எல்லாமும் 'வெட்கம்' என்றே
விண்ணதிரக் கூவின; வெட்கித் தலைகுனிந்தேன்!
பின்போர் மரங்கொத்தி பேச்சைத் தொடர்ந்ததுவாய்த்
'தன்முயற்சி யால்நாம் தரணியிலே வாழ்கின்றோம்;
தெய்வச் செயலன்றி நம்மால் சிறிதேனும்
உய்ய முடியாதென் றெப்பாரி வைக்கின்ற
சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்தோன் இவன்' என்ன,
'ஆம் ஆம் இவர்கள் அசைவதும் நிற்பதும்,
உண்ப துறங்குவதும் ஊரைஏ மாற்றுவதும்,
அண்டை அயலோர் அழிகவென எண்ணுவதும்,
ஏமாந்தோர் சொத்துக் கெசமானர் ஆகுவதும்,
தீமை பலவாக மென்மேலுஞ் செய்குவதும்
எல்லாம் அவன் செயலே!' என்றே கிளியொன்று
சொல்லிற்றுக் கிண்டலாய்! அவ்விடத்தில் சூழ்ந்திருந்த
புள்ளினங்க ளெல்லாம் பொழிலதிரத் தாம்சிரித்தே
எள்ளி, 'இவனா?' வென் றே யுரக்கக் கத்தினவே!
இந்த மொழியெல்லாம் என்னுளத்தைத் தாக்கியே
சிந்தை தனைமாற்றிச் சீற்றத்தை யூட்டின!
'கேவலப் பட்சிகள் கேலிஎனைச் செய்குவதோ?'
நாவை யடக்காமல் நான் சும்மா ஏகுவதோ?
என்றெண்ணி யானும் பதில்தேடிச் சொல்லுதற்கு
முன்வந்தேன்; ஆனால் முடியாமற் போயிற்றே!
ஐயறிவுப் புட்கள் அவமானம் பண்ணியதால்
மெய்குன்றிப் போனேன் நான்! மேன்மைப் பகுத்தறிவு
வாய்ந்த மனிதரின் வாழ்க்கையிலே ஊழல்கள்
தோய்ந்திருக்கு தென்றே சொலவந்த புள்ளினத்தைக்
கல்லால் எறிந்தேனும் காலொடித்துக் கையொடித்துக்
கொல்ல நினைத்தேன்! அதுசமயம் கோலமயில்,
"ஆர்ந்த பகுத்தறிவு வாய்ந்தவர்தான் ஆனாலும்
தேர்ந்த அறிவால் செயலொன்றும் செய்ததில்லை!
பண்டை நிலைதன்னைப் பாராட்டிப் பேசிடுவார்,
இன்றவர்தம் மேன்மை இழிவாகும்! மற்றுந்தான்
நம்போல் சுதந்தரம் நல்லுரிமை இல்லாமல்
தம்முடைய நாட்டைப் பிறர்ஆள விட்ட
அடிமையரைச் சேர்ந்தோன் இவன்' என்ன, 'ஆகா!
கொடுமை இவன்நிலை! மிக்க கொடுமையந்தோ!
நாட்டை யிழந்து நலனொன்றுங் காணாமல்
கேட்டை யடைவோனைக் கேலியொன்றும் செய்யாதீர்'
என்றிரா சாளி இயம்பிற்று; மற்றவைதாம்
கண்ணீர் வடித்துப் 'பரிதாபம்' என்றனவே!
என்னை மிகவே இழித்துரைத்தும், பின்புதாம்
நன்றிரக்கங் கொண்டும், நனிவருந்தும் புள்ளினத்தின்
பேச்சால், எனது பெருமையிழந் தேசிறிய
பூச்சாகி விட்டேன்! 'பொலிவார்ந்த என்வீட்டு
மாடியிலே தங்கிக் கவிதை வரையாமல்
நாடி இச் சோலையை நானேதற்கு வந்தடைந்தேன்?'
என்று மிகவும் மனம்வருந்தி ஏக்கமுடன்
என்னில்லம் நோக்கி எழுந்திருந்தேன்; சாக்குருவி,
'மூடச் செயலெல்லாம் முற்றும் ஒழியாமுன்
நாடாது தன்னரசு' என்று நவின்றதுவே!
அன்னவற்றைக் கேட்டே அவசரமாய் வீடுதான்
சென்றுவிட்டேன். என்நாட்டுச் செந்தமிழ வீரர்களே!
எள்ளி நகையாடி நம்மை இழிவுரைத்த
புள்ளினத்தின் பேச்செல்லாம் பொய்க்காமல் உம்மிடத்தே
கூறிவிட்டேன்; நீங்கள் கொடுக்கும் பதிலென்ன?
ஆறறிவால் ஆய்வீர் அமர்ந்து!

இத்தகைய கலைப் புரட்சிக்குக் கவிஞர் பாரதிதாசன், தம் திறமையைப் பயன்படுத்துகிறார் என்பதுமட்டுமல்ல அவரை நாம் புகழ்வதற்குக் காரணம், கலைப் புரட்சி மனப்பான்மையைத் தமிழகத்தில் ஏற்படுத்திவிட்டார். அவருடைய வெற்றி அது!!

முன்பெல்லாம், மனித குலத்தால், இகழ்ச்சியாகக் கருதப்பட்டு, கேலி செய்யப்பட்டு வந்த பாம்பு முதல் சிட்டு வரையிலே, மனிதன் இருக்கும் நிலையையும் அவனுடைய நினைப்பையும் செயலையும் கேலிசெய்து, அவனுக்குப் புத்திபுகட்டும் பேராசிரியர்கள் ஆக்கப்படுவது, உண்மையிலே புதுமுறை அல்லவா, கலைப்புரட்சி அல்லவா!!

THE

DRUG HOUSE

Post Box 525, Park Town, Madras.

WHOLESALE & RETAIL
CHEMISTS & DRUGGISTS

Suppliers to:—Government & District Board Hospitals, Estates, Mission Hospitals, Nursing Homes & Doctors.

Stockists of:—All Varieties of Patent Medicines, Drugs, Scientific Chemicals, Surgical, Instruments, Tinctures & Toilet Goods.

Moffusil Orders Carefully Attended to & Promptly Executed.

கண்ணைக் கவரும் வனப்புள்ள ஆடைகள்.

●

அழகுக்கு அழகு செய்யும் அற்புத ஜவுளி தினுசுகள்.

●

அழகிய சரிகை பட்டு, பருத்திப் புடவைகள், வேட்டிகள், அங்கவஸ்திரங்கள் பலவித மான நிறங்களில் ஸ்பெஷலாகத் தயாரிக்கப் பட்டவை எங்களிடம் இருக்கின்றன.

கல்யாண கால விசேஷங்களுக்கென்று புதிதாகத் தயாரிக்கப்பட்ட சரிகை ஜவுளிகள், நாகரிக ஆடைவகைகள்.

சரிகை போட்ட கறுப்பு ஜாக்கெட்கள், அங்கவஸ்திரங்கள், புடவைகள்.

கிடைக்குமிடம் :-

S. A. செல்லம் & சன்ஸ்,
33, தேவராஜ முதலி தெரு,
P. T., மதராஸ்.

சைபால்

அயோடிசால் :: பேபி கிரைப்

சைபால்

முகப்பரு, சேத்துப்புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

அயோடிசால்

ரத்தத்தைச் சுத்தி செய்து ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பேபி கிரைப்

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மந்தம், பல் முளைக்கும்பொழுது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, :: மதுரை.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at 'Dravida Nadu" Press, 317-319, Hodgsonpet, Conjeevaram.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press,
317-318 Hodgsonpet, Conjeevaram